Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2862)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 07 செவ்வாய்க்கிழமை (23.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 296

















# உணர்வு சார்ந்த விடயமாக 13 ஐ கருதுகிறது இந்தியா

## தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவிப்பு

(சென்னை)

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக இந்தியா அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அரசியலமைப்பு திருத்தத்தை தமது நாட்டின் உணர்வுகளுக்கும், வடக்கிலுள்ள பிரச்சினைகளுக்குமான தீர்வாகவே இந்தியா நோக்குவதாகவும், இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கு பொருத்தமான தீர்வை இலங்கையர்களே பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இந்தியா உள்ளது. எந்தவொரு திருத்தமாக இருப்பினும் நாட்டிலுள்ள அனைத்து தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் இலங்கை தீர்மானமொன்றை எடுப்பதையே இந்தியா விரும்புகிறது. அனைத்துத் தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் தீர்விற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். தமிழர், முஸ்லிம்கள என அனைவரும் 19 ஆம் பக்கம் பார்க்க



## தரம் 5 மாணவருக்கு அதிகரித்த தலைவலி

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களில் தலைவலி உபாதைக்கு சிகிச்சைப் பெறுவதற்காக வைத்திய சாலையை நாடுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்திய சாலை தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

பெற்றோர்கள் மாணவர்களின் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தம் காரணமாகவே தலைவலி ஏற்படுவதமாக சிறுவர் நரம்பியல் நிபுணர் டாக்டர் அனுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

மாணவர்களை மன அழுத்தத்தில் இருந்து விடுவிப்பதற்கு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியருக்கு பாரிய பொறுப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். கொலைச் சம்பவம் சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய முதலாவது சந்தேகநபரை கலேவலயில் வைத்து கைதுசெய்துள்ளதாக கலேவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணப் பகுதியில் வைத்து அப்துல் காதர் நிஹார் என்பவரை படுகொலை செய்ததாகக் கூறப்படும் கலேவலயைச் சேர்ந்த ஹுசைன் கஸ்மித் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேரை ஏற்கனவே பொலி ஸார் கைது செய்ததுடன் அவர்களின் வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே குறித்த 19 ஆம் பக்கம் பார்க்க

## ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்ற மீனவர் காணாமற்போனார்

(முள்ளிவாய்க்கால்)

முல்லைத்தீவில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் காணாமற்போயுள்ளார். இவர்கொண்டு சென்ற படகும் வலைகளும் நடுக்கடலில் வைத்து மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், நேற்று அதிகாலை 2.00 மணியளவில் முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி மணிமாறன் (வயது-41) என்பவர் அறக்கொட்டியான் வலையுடன் தனது படகில் ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்றுள்ளார்.

நேற்று அவர் கரை திரும்பாததை அடுத்து செல்வபுரம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரும், அவரது உறவினர்களும் கடலுக்குத் தேடிச் சென்றுள்ளனர். அப்போது வலை கடலிலிருந்து இழுக்கப்பட்டு 19 ஆம் பக்கம் பார்க்க

## சமந்தா பவரின் நிகழ்ச்சி நிரலில் இலங்கையின் மனித உரிமை விடயம்



(கொழும்பு)

ஐ.நாவுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சமந்தா பவரின், முக்கியமான நிகழ்ச்சி நிரலில், இலங்கையின் மனித உரிமைகள் விவகாரமும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக, அதிபர் ஒபாமாவுக்கு மிகவும் நெருககமானவரான சமந்தா பவர் அண்மையில் நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனம் குறித்தும், சமந்தா பவரின் திட்டங்கள் குறித்தும் அமெரிக்க செனட் சபைக்கு, வெளியுறவுக் குழுவின 19 ஆம் பக்கம் பார்க்க

## ஆரியகுளத்திற்குள் வீழ்ந்த தென்பகுதி சிறுவன் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளத்துக்குள் வீழ்ந்த மூன்று வயதுடைய தென்பகுதிச் சிறுவனை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் வேட்டையின் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சிறுவன் மயக்கமுற்ற நிலையில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளான். காப்பற்றப்பட்ட சிறுவன் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

பூரண பௌர்ணமி தினமான நேற்று யாழ். நாகவிகாரையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்காக தென்பகுதியிலிருந்து வந்த சுற்றுலாப் பயணி ஒருவரின் பிள்ளையே தவறி வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## காணாமற்போனோர் குறித்து ஐ.நா. நிபுணர்குழு விசாரணை

இலங்கை உள்ளிட்ட 7 நாடுகளில் காணாமற்போனவர்கள் தொடர்பாக சுதந்திரமான ஐ.நா நிபுணர் குழுவொன்று விசாரணை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில், கட்டாயமாக அல்லது, தன்னிச்சையின்றிக் காணாமற்போனோர தொடர்பான ஐ.நா. பணிக்குழு, நியுயோர்க்கில் சந்தித்து, அவசர நடவடிக்கை நடைமுறைகள் குறித்து மீளாய்வு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆறு மாதங்களில் காணாமற்போன 17 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், இலங்கை உள்ளிட்ட 25 நாடுகளில் புதிதாக 19 ஆம் பக்கம் பார்க்க

நாளைய முரசில்
புலிகளை அழித்த
ஊடகங்கள்

## டெசோ அமைப்பின் ஏற்பாட்டில் புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

4 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் ஆகஸ்ட் 8 ஆம் திகதி டெசோ அமைப்பின் சார்பில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. மேலும் டில்லியில் நாடாளுமன்றம் முன்பும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக தி.மு.க. நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. யூலை 16 ஆம் திகதி நடைபெற்ற டெசோ கூட்டத்தில், இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வலியுறுததியும், இலங்கையில் நடைபெற உள்ள கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்றும், தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியும், நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனை தமிழக மக்களின் கவனத்துக் குக் கொண்டு செல்ல டெசோ 19 ஆம் பக்கம் பார்க்க

# இருதய சத்திர சிகிச்சைப்பிரிவு; யாழ்ப்பாணத்தில் அமைக்க ஏற்பாடு

யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடத்தொகுதி ஒன்று அமைப் பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.சிறிப வானந்தராஜா தெரிவித்துள்ளார்.

இந்த கட்டட நிர்மாணப் பணி களுக்காக சுவிஸ் நாட்டில் உள்ள சுவிஸ் சிறிலங்கா பிஸ் னஸ் கொமினிற்றி நிறுவனத் திடம் கோரிக்கை விடுத்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கட்டட நிர்மாணப் பணிகளுக்காக 510 மில்லியன் ரூபா நிதியுதவியைக் கோரி யுள்ளதாகவும் தற்போது சுகா தார அமைச்சின் அனுமதிக்கான ஆவணங்கள் தயார்ப்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருவ தாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போது போதிய வசதிகள் அற்ற நிலையில், இரு தய சிகிச்சைப் பிரிவுகள் செயற் பட்டு வருகின்றன.

வைத்தியசாலையின் சமைய லறைக் கட்டடத் தொகுதியை அகற்றி அப்பகுதியில் நவீன முறையில் அந்த கட்டடத்தொகு தியை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வும் யாழ். போதனா வைத்திய சாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.சிறிபவானந்தாராஜா தெரி வித்துள்ளார்

# வடதாரகைக்கு தொலைக்காட்சிப்பொட்டி அமைச்சர் டக்ளஸ் அன்பளிப்பு



யாழ். குறிகாட்டுவான் பிரதேசத்திலிருந்து நெடுந்தீவு பிர தேசத்திற்கு சேவையில் ஈடுபட்டுவருகின்ற வடதாரகை கப்பலில் பொருத்துவதற்கான தொலைக்காட்சிப்பெட்டியொன்று அன்பளிப் பாக வழங்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்ற பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த தொலைக் காட்சிப்பெட்டியை வடதாரகை கப்பல் ஓட்டுநரிடம் வழங்கிவைத் துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நெடுந் தீவுக்கு விஜயத்தை மேற்கொண்டபோது, தொலைக்காட்சி பெட்டியொன்று வழங்குமாறு வடதாரகை கப்பல் ஊழியர்கள் கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கைக்கமைய வடதாரகை கப்பலில் பொருத்துவதற்காக தொலைக்காட்சிப்பெட்டியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிவைத்துள்ளார்.

# அறநெறிப்பாடசாலை; மாதகலில் ஆரம்பம்

மாதகல் சம்புநாதீஸ்வரம் ஆல யத்தில் சிவதொண்டன் நிலையத் தினால் அறநெறிப் பாடசாலை யொன்று நேற்று அங்குரார்ப் பணம் செய்துவைக்கப்பட் டுள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங் களுக்கு மேலாக மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படாத நிலையில் கடந்தாண்டு முதல் இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டார்கள்.

இந்நிலையில் பாரிய நெருக் கடிகளுக்குள் வாழ்ந்து வரும் இம் மக்களுடைய வாழக்கைத் தரத்தையும் சிறார்களின் ஆன் மீக சமய கல்வியை வளர்த் தெடுக்கும் முகமாக இவ் அற நெறிபாடசாலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

# தயாராகிறது வழித்தடம் வருகிறது யாழ்தேவி



(கொடிகாமம்)

ரயில் பாதையில் அதிகமாக மக்கள் குடியிருக்கம் இடங்களாகிய சாவகச்சேரியில் இருந்து மிருசுவில் வரையான பகுதிகளில் மின் சார வயர்கள் மாற்றும் பணி நடைற்றுவருகின்றது.

ஏ9 வீதியின் தெற்குப் புறமாக உள்ள வீடுகளிற்கு ரயில் பாதையினை ஊடறுத்து மின்சார வயர்கள் செல்கின்றமையால் ரயில் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் என கருதி ரயில் பாதைக்கு அருகாமையில் புதிய மின்சார தூண்கள் அமைத்து அதன் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக சாவகச்சேரியில் இருந்து மீசாலை வரையான பகுதிக்கு மின்சார தூண்பொருத்தும் பணியும் நடைபெறுகின்றது. (130)

# யாழ். மாவட்ட செயலகத்தில் பொலிஸ் சோதனைச் சாவடி

வடமாகாண சபைத் தேர் தலை முன்னிட்டு யாழ். மாவட்ட செயலகத்தில் பொலிஸ் சோத னைச் சாவடி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரட்ன மற்றும் பொலிஸ் உத்தியோகத் தர்கள், யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கும் இடை யில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போதே வடமாகாண சபைத்தேர் தல் வேட்பாளர்களுக்கான நிய மனப் பத்திரங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத் தில் கையளிக்கப்படவுள்ளதால், வேட்பாளர் நியமனங்கள் கைய ளிக்கும் காலங்களில் எந்தவித மான குழப்பநிலைகளும் ஏற் படாமல் இருப்பதன் முகமாக வடமாகாண சபை தேர்தலை முன் னிட்டு பாதுகாப்பு கருதி யாழ். மாவட்ட செயலகத்தில் பொலிஸ் சோதனை சாவடி அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டதாக வும் அவர் கூறினார்.

இதன்போது, வேட்பாளர் நியமனங்கள் கையளிக்கும் முதல் நாளிலிருந்து செப்டெம்பர் மாதம் வரை யாழ். மாவட்ட செய லகத்தில் பொலிஸ் சோதனை சாவடி அமைப்பதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரட்ன உறுதியளித்துள்ளதாகவும் அந்த வகையில், பொலிஸ் சோதனை சாவடி அமைப்பதற்கான ஏற்பாடு கள் நடைபெற்று வருகின்றதாக வும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் கூறினார்.(23)

# மின்சாரம் திருடிய நான்குபேர் சிக்கினர்

சட்டவிரோத மின் பாவனை யாளர்களெனக் கூறப்படும் 4 பேரை யாழ். பொலிஸார் கடந்த சனிக்கிழமை காலை கைதுசெய் துள்ளனர்.

யாழ். நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாகக் கூறப்படும் 4 பேரை கைதுசெய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ் பொலிஸாரும் இலங்கை மின்சார சபையினரும் இணைந்து நடத்திய சோதனையின்போதே இவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ள னர்.

இவர்களிடமிருந்து மின்மானி கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் கூறினர்.

கைதுசெய்யப்பட்ட இந்த 4 பேரையும் யாழ். நீதிவான் நீதி மன்ற நீதவான் பொ.சிவகுமார் முன்னிலையில் அண்றையதினம் மாலை ஆஜர்படுத்தியபோது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் கூறினர்

# இன்று தீர்த்தோற்சவம்

(ஆனைக்கோட்டை)

நவாலி கதிர்காம முருகன் ஆலய தீர்த்தோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 5 மணிக்கு விசேட பூசைகளைத் தொடர்ந்து தீர்த் தோற்சவம் இடம்பெறுவதுடன் மாலை கொடியிறக்கமும் இடம் பெறும். (104)

# இரதோற்சவத்தில் பல்லாயிரம் பக்தர்கள்



ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரர் ஆலயத்தின் தேர்த்திரு விழா வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இத்திருவிழாவனாது 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகுசிறப்பாக ஆலைய பிரதமக் குருக்கள் கீத்திசிறி வாசன் குருக்களினால் அவர்களினால் வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம்வத்து மூன்று தேர்ச்சக்கரத்தை அடியார்களினால் இளுத்து வரப்பட அடியார்களினால் காவடி,தூக்குக்காவடி,பறவைக்காவடி, பால்செம்பு, தீச்சட்டி,அங்கப்பிராட்டதனை போன்ற நேத்திக்கடங்களை அடி யார்களினால் செய்யப்பட்டதோடு மாணவர்களினால் நடன நிகழ்வு களும் இடம்பெற்றதோடு 3000மேற்பட்ட அடியார்கள் கலந்து கொண் டமை குறிப்பிடதக்கது. (40)

# தனிநாயகம் அடிகள் பற்றிய கருத்துப் பரிமாற்ற நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதந்தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற போறம்(Forum) எனப்படும் கருத்துப் பரிமாற்றும் கள நிகழ்வின் ஜூலை மாத்திற்கான அமர்வு இன்று மாலை 5.00 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலை யகத்தில் இடம்பெறவுள்ளது.

தனிநாயகம்அடிகளாரின் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாத அமர்வுக்கு யாழ். பல்கலைக் கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் ம.சின்னத்தம்பி தலைமை தாங்குவார் நிகழ்வில் தனிநாயகம் அடிகளாரின் ஆளுமைகள் குறித்து யாழ். பல்கலைக்கழக ஆங்கில வைத்தியத்துறை உதவி வரிவுரையாளர்களான செல்வி றீயோபிலா அல்பிரட் செல்வி தருணி சுந்தரலிங்கம் செல்வி கனிஸ்ரா ஆர்த்தி டெனிசியல் ஆகியோரும், மாணவர்களான செல்வி சர்மதா சந்திரசேகரம், விதுஜா இராஜ்குமார் ஆகியோரும் கருத்துரையாற்றுவார்கள் தொடர்ந்து கருத்துப் பரிமாறல் இடம்பெறும்.

ஆங்கில மொழிசார் புலமையாளர்கள் கலந்து கொள்ளும் இவ் அமர்வில் ஆர்வமுள்ளஅனைவரும் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (27)

# சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மேற்கில் தென் னைமரத்தில் தூக்குமாட்டி இறந் ததாகக்கருதப்படும் முதியவர் ஒருவரது சடலம் நேற்றுப்பிற் பகல் அச்சுவேலி பொலிசாரி னால் யாழ். போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

அச்சுவேலி மேற்கு கைத் தொழில் வேட்டை வீதிப் பகு தியில் வசித்து வந்த இளைய வன் நல்லதம்பி (வயது 70) என்ற வயோதிபரின் சடலமே இவ்வாறு பொலிசாரினால் மீட் கப்பட்டுள்ளது. (பா)

# இடையூறான பயணங்களால் பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

(வரணி)

வரணி வடக்கில் உள்வீதிகளில் மோட்டார் சைக்கிளில் செல்லும் இளைஞர்கள் தலைக்கவசம் இன்றி வேகக்கட்டுப்பாட்டை மீறி பயணத்தை மேற்கொள்வதால் இந்த வீதியால் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் செல்லவேண்டியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

உள்வீதிகள் பெரும்பாலானவை சிறிய பாதையாக காணப்படும் நிலையில் வீடுகளுக்கு முன்னால் வீதிகளில் சிறுவர்கள் விளையாடி மகிழ்கின்ற சந்தர்ப்பத்தில் இவ்வாறு மின்னல் போல் மோட்டார் சைக்கிளுடன் செல்வதால் சிறுவர்கள் பயபீதியுடன் காணப்படுவதை அவதானிப்பதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை பெரிய மோட்டார் சைக்கிள்களில் இவ்வாறு இளைஞர்கள் செல்வதால் பாதசாரிகள் மட்டுமல்லாது துவிச்சக்கர வண்டிகளில் செல்வோரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

எனவே மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தி மோட்டார் சைக்கிள்களில் செல்லும் இளைஞர்கள் மக்களின் நலனிலும் சிறிதேனும் அக்கறை செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# அரசியல் நிலைப்பாட்டோடு இலக்கியம் அமைதல் வேண்டும்

## 41 ஆவது இலக்கிய சந்திப்பில் கருத்துரை

(குருநகர்)

பெண்கள் அடக்கு முறையில் இருந்து விடுபட்டு சுதந்திரமான வாழ்க்கையை வாழ்வதற்கான நல்வழிகளை வெளிக்கொண்டு வரும் வகையில் இலக்கியங்களை எழுதியுள்ளேன் என இலக்கியம் சம்பந்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு நான் ஏன் எழுதுகிறேன் என்னும் தலைப்பில் பேசிய புதிய கவிஞருமான, எழுத்தாளருமான திருமதி அஷ்றபா நூர்தீன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர், யுரோவில் மண்டபத்தில் நடைபெற்ற 41 ஆவது இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் கருத்தரங்கு இடம்பெற்றது. புலம் பெயர் இலக்கியக் குழுவால் சர்வதேச மட்டத்தில் வருடா வருடம் நடத்தப்படும் இலக்கியச சந்திப்பு இந்த முறை இலங்கையில் அதுவும் யாழ்ப் பாணத்தில் இரண்டு தினங்க ளில் நிகழ்ந்து சிறப்புற முடிவுற்றுள்ளது.

திருமதி அஷ்றபா நூர்தீன் தொடர்ந்தும் பேசுகையில் “எனது எழுத்துக்கள் முஸ்லிம்களை அவரது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றியமை மற்றும் பெண்களின் பாலியல் துன்புறுத்தல் சிறுவர் துஷ்பிரயோகம், சீதனக் கொடுமை, பெண்களைக் கொத்தடிமைகளாக நடத்துதல் போன்ற இன்னோரன்ன அடக்கு ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. என்னளவான நெம்புகோலாக இலக்கியத்தைக் கையில் எடுத்துள்ளேன். இவ்விதம் அவர் கூறினார்.

மல்லிகைப்பூ சந்தி திலகர் பேசுகையில் கூறியதாவது,

“புலம்பெயர் இலக்கிய முன்னோடிகளாக மலையகப் படைப்பாளிகள் காணப்படுகிறார்கள்.


மலையக இலக்கியத்தின் தோற்றுவாய் கவிதையாக அமைந்திருக்க வேண்டும். கூலித் தொழிலாளிகளாகக் கொண்டுவரப்படவர்களின் கைகளில் வேறெதைத்தான் கொண்டு வர முடிந்திருக்கும், வாய்மொழிப் பாடல்களாக எடுத்துவரப்பட்டவை கவிதைகளாக உருவாகின. அப்துல் காதர புலவரே மலையகக் கவிதை முன்னோடியாகக் கணிக்கப்படுகிறார்.” என்றார்.

இலக்கியம் என்றால் என்ன? என்னும் தலைப்பில் கருத்துரைத்த இளம் எழுத்தாளர் ரிஷாட் குரானா தெரிவித்ததாவது-

இலக்கியம் ஒரு கோட்பாட்டில் என்றில்லாமல் எடுப்பார கைப்பிள்ளையாக பல்வேறு சிந்தனைகளையும் வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன. எனினும் இலக்கியம் ஒரு அரசியல் நிலைப்பாட்டோடு அமைதல் வேண்டும். அத்தகைய இலக்கியங்களே தலைசிறந்தவையாக அமையும்.” என்றார். (68)

# ஆட்டுத் திருடர்களால் அச்சமடையும் மக்கள்

(அச்சுவேலி)



குடாநாட்டின் பல இடங்களிலும் தற்போது ஆட்டுத் திருடர்கள் அதிகம் இடம்பெறுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


பல சிரமத்தின் மத்தியில் அவற்றைப் பராமரித்து அவை வருமானத்தை தரும் நேரத்தில் திருடர்களால் களவாடப்படுவதாகவும் ஆடு வளர்ப்பில் ஈடுபடுவோர தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அருகில் உள்ள வீதியோரத்தில் மேய்ச்சலுக்காகக் கட்டிவைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் பெறுமதியான ஆடு ஒன்று ஆட்டோவில் வந்தவர்களால் திருடப்பட்டுள்ளது. மற்றும் புலோலி மேற்கு அவ்வொல்லை, புலோலி தெற்கு ஆகிய இடங்களில் வீட்டில் கட்டப்பட்டிருந்த ஆடுகள் இரவு நேரத்தில் திருடர்களால் களவாடப்பட்டது.

புத்தூர் நவக்கிரிப் பகுதியில் சுமார் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடு ஒன்றும் திருடப்பட்டுள்ளதாகவும் மேலும் கொக்குவில் பகுதியில் இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மேலும் பல பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அறியமுடிகின்றது.

எனவே இத்தகைய நாசகார செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டறிந்து உரிய தண்டனை வழங்க வேண்டும் எனவும் இதனால தாம் பாரிய நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (85)



அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திறப்பு விழாவின் பதிவு...

# முற்றுப்பெறாத வீதிபுனரமைப்பு நெருக்கடியில் போக்குவரத்து



(கோப்பாய்)

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உரும்பிராய் கிழக்குசிவன் வீதியின் முதலாம் ஒழுங்கையின் புனரமைப்பு வேலைகள் இதுவரை பூர்த்தியாக்கப்படாமல் இருப்பதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபையினால் இந்த வீதி புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு கற்கள் பறிக்கப்பட்டு பணிகள் இடமபெற்று வந்த நிலையில் இன்னமும் திருத்த வேலைகள் முற்றுப்பெறாமல் ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த ஒழுங்கை வீதி அப்பகுதி மக்கள் நாளாந்தம் பயன்படுத்தும் வீதியாக காணப்படுகிறது.

எனவே இவ் வீதியைப் புனரமைத்து மக்கள் பாவனைக்கு விட வலி.கிழக்கு பிரதேச சபை உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சாப்பாட்டுக்கடையில் துணிகரத் திருட்டு



(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையில் உள்ள ஸ்ரீ முருகன் சாப்பாட்டுக் கடை உடைக்கப்பட்டு உள்ளிருந்த மா மூடைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது-

ஆனைக்கோட்டை மூத்த நைனார் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள குறித்த சாப்பாட்டுக் கடையில் நள்ளிரவு வேளை கடையின பின்புற கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்குள்ள மேசை லாட்சிகளை உடைத்து பார்த்து அதற்குள் பணமில்லாதிருந்ததை அடுத்து காசாளர் மேசையின் கண்ணாடிக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த பெறுமதி மிக்க வெளிநாட்டு, உள்நாட்டு நாணயத்தாள்களையும் மா மூடைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

செல்லும் போது ஒரு மூடை மா தவறிவிழ அதை எடுக்காது விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடை உரிமையாளர் மானிப்பாய பொலிஸாருக்கு தெரிவித்ததை தொடர்ந்து அவர்கள் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (104)

# சட்டவிரோத “கள்” விற்பனை தடுத்து நிறுத்த கோரிக்கை

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வற்றாப்பளை, முள்ளியவளை, பொன்னகர், நாவற் காடு மற்றும் குமாரபுரம் பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் கள் விற்பனை செய்யப்படுவதால் பொது மக்கள் பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாக அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சீவல் தொழிலை மேற்கொள்ளும் சிலர் தமது சங்கங்களின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படாமல் இவ்வாறான செயல்களில ஈடுபடுவதாக குறித்தபிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவர்களை கட்டுப்படுத்த பல்வேறு சட்டங்களும் உரிய அலுவலர்களும் இருக்கின்றபோதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இவர்கள் மீதும் எடுக்கப்படாமல் கண்டும் காணாதது இருப்பதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மாலை 6.00 மணிக்கு மேல் சீவல் தொழிலுக்காக மரங்களில் ஏறக்கூடாது என சட்டம் உள்ளபோதும்

குறித்தபகுதிகளில் சிலர் இரவு வேளைகளிலும் இவ்வாறு சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதை காண முடிகிறது. இதனால் வீதிகளில் பயணம் செய்யும் பெண்கள் மற்றும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகிறது.

எனவே உரிய சங்கங்களை சேர்ந்த அதிகாரிகள் இது தொடரபாக கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுப்பார் களா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (125)

# மண்டைதீவு கிராம வைத்தியசாலை பூர்த்தியாகும் கட்டடப் பணிகள்

(மண்டைதீவு)

மண்டைதீவு கிராம வைத்தியசாலையின் புதிய கட்டட வேலைகள் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தியாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார திணைக்களத்தினால் 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 31 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் இவ் வைத்தியசாலை கட்டடம் கட்டப்பட்டு வருவதாக கட்டட ஒப்பந்த நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த சூழ்நிலையினால 23 வருடங்களாக இயங்காதிருந்த இவ்வைத்தியசாலை தற்போது சீராக்கப்பட்டு கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

நீண்ட காலமாக இப் பிரதேசத்தில் வைத்தியசாலை இயங்காதமையால் இப்பிரதேச மக்கள் வைத்திய தேவையை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் தற்போது இவ்வைத்தியசாலை கட்டடப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில் அடுத்த வருடம் இவ்வைத்தியசாலை வைபவரீதியாக இயங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (23)

கஷ்டம் வரும்போது கண்ணைமூடாதே. அது உன்னை கொன்றுவிடும் கண்ணை திறந்து பார், நீ அதை வென்றுவிடலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஏமாற்றம் தரும் கல்வி!

அமெரிக்காவில் ஒரு கல்வி நிறுவனம் நடத்திய சுவாரஷ்யமான பரிசோதனை இது.

ஒரு கண்ணாடி மீன் தொட்டியின் நடுவே தெள்ளத் தெளிவான கண்ணாடித் தட்டினை வைத்து அந்தத் தொட்டியை இரண்டாகப் பிரித்தார்கள். ஒரு பக்கத்தில் இருக்கும் மீன் அந்தக் கண்ணாடியின் வழியே அடுத்த பக்கத்தில் என்ன இருக்கிறது என்று பார்க்க முடியும் ஆனால் போக முடியாது.

கண்ணாடித் தட்டின் ஒரு பக்கம் பரகூடா என்ற ஒரு மீனையும், மறு பக்கம் மல்லெட் என்ற ஒரு மீனையும் வைத்தார்கள். இரண்டும் வெவ்வேறு வகை மீன்கள். பரகூடா மிக எளிதாக மல்லெட் என்ற மீனைக் கொன்று உண்ணக் கூடியது.

தொட்டியின் அடுத்த பக்கத்தில் மல்லெட்டைப் பார்த்தவுடன் அதை நோக்கி பரகூடா வேகமாக ஓடியது. இடையில் இருந்த கண்ணாடி தெரியவில்லை. ஓடிய வேகத்தில் பரகூடா கண்ணாடியில் இடித்தது. வலியால் துடித்து பின் திரும்பி வந்து மீண்டும் தன் உணவான மல்லெட்டை நோக்கி ஓடியது. மீண்டும் இடிபட்டது.

மீண்டும் மீண்டும் இந்த முயற்சி தொடர, முகத்தில் எல்லா இடங்களிலும் காயங்கள். வலியை உணர்ந்த பரகூடா நல்ல பாடத்தையும் கற்றுக் கொண்டது. அதற்குப் பின் அடுத்த பக்கம் போக முயற்சி செய்யவில்லை. இடையில் இருந்த கண்ணாடித் தட்டை எடுத்த பின்னும், அந்தப் பக்கம் போகாமல், அங்கேயே பட்டினியாக இருந்து செத்துப் போனது.

மாணவர்களும் இப்படித்தான். அவர்களுக்கும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அடுத்த வீட்டுக்காரர்கள், நண்பர்கள் என பல கண்ணாடித்தட்டுகள். 'உனக்கு எது முடியும், எது முடியாது' என அவர்களே தீர்மானித்து அவர்களின் எண்ணத்தை மாணவரிடம் திணிக்கிறார்கள்.

'அவனுக்குக் கணக்கு சுட்டுப் போட்டாலும் வராது' என்பார் ஒருவர். 'அவனுக்கு சயன்சும் ஏலாது, ஆங்கிலமும் ஏலாது. எப்படி மருத்துவம் படிக்க முடியும்? சும்மா ஆர்ட்ஸில சேரட்டும்' என்று இன்னொருவர். 'என்ஜினியர் டொக்டர் ஆகாட்டில் வேலையில்லை' என்று வேறொருவர்.

அவன் அல்லது அவளுக்கு தங்கள் பெயரைத் தேர்ந்தெடுக்கத்தான் வாய்ப்பில்லை; அவர்கள் பெயருக்குப் பின்னால் போடும் பட்டங்களையாவது தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை அவர்களிடமே கொடுத்தால் என்ன? தம்மால் முடிந்த — விரும்பிய தொழிற்கல்வியைப் படிக்க அவர்களைப் போகவிட்டால் என்ன?

பல மாணவர்களுக்கு அந்த வயதில் எதில் விருப்பம் அல்லது திறமை என அறிவது கடினம்தான். நமது நாட்டின் கல்வி முறையும், பெற்றோர்களின் உலக அறிவுக் குறைவும் அதற்குக் காரணம் என்பதே உண்மை. பெற்றோரும் இந்த சமூகமும் அந்தக் காலத்திலிருந்து ஓரிரண்டு படிப்புகளையே படிப்பென்று தெரிந்து வைத்திருக்கிறது.

நமது கல்விமுறையில், மாணவன் தானாகவே தனக்குத் தேவையான கல்வியைத் தேர்ந்துகொள்ளவும், எதிர்காலத்தில் என்ன தொழில் செய்யப் போகிறோம் என்பதைத் திட்டமிட்டுப் படிக்கவும் வழியில்லை. மாணவனுக்குப் பிடித்த பாடமாக இருந்தாலும், அவனுக்கு அதில் நல்ல திறமை இருந்தாலும், அதை அழித்து விட்டு, எது படித்தால் வேலையும் மதிப்பும் என்றே திணிப்புகள் நடக்கின்றன.

எல்லா மாணவர்க்கும் ஒரே மாதிரியிலான பரீட்சைக்கு வேண்டிய தகவல்களை உள்ளே ஏற்றும் இன்றைய படிப்பு முறை மாற்றம் பெறவேண்டும்.

\- ஆசிரியர்

# "13" ஐ காப்பாற்ற முஸ்லிம் காங்கிரஸ்

## கிழக்கு மாகாணசபையில் இன்று பிரேரணை

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை எதிர்த்தும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்தும் இன்று கிழக்கு மாகாண சபை அமர்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அக்கட்சியின் கிழக்கு மாகாண சபை குழுத்தலைவரான ஏ.எம். ஜெமீல் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசமைப்பில் இருந்து நீக்கி விடுவதற்கோ அதன் அதிகார வலுவை குறைப்பதற்கோ முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் இணங்க மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார். இது குறித்து கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல் மேலும் கூறியதாவது,

முஸ்லிம்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அவசியம் மிகவும் உணரப்பட்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் இக்கட்சி எந்த சக்திக்கும் விட்டுக் கொடுக்காமலும் அஞ் சாமலும் சமூகப் பற்றுடன், துணிச்சலுடன் அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பை சுமந்திருக்கிறது. இந்த இக்கட்டான தருணத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம் என்பதற்காக இது விடயத்தில் நாம் வாய்மூடி மௌனிகளாக இருப்போமாயின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற சமூக இயக்கம் முஸ்லிம்களுக்கு எந்த வகையிலும் தேவைப்படாத ஒரு விடயமாகவே மாறிவிடும் என்பதை மறுதலிக்க முடியாது. அந்த வகையில் இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் சிறுபான்மை சமூகங்களுக்கு தேவையான அதிகாரப் பகிர்வை மேற் கொள்ளக்கூடியதும் சமூக ரீதியான காப்பீடுகளை தரவல்லதுமான அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்கு பேரினவாத சக்திகள் குரல் எழுப்பிக்கொண்டு, அதற்கான நகரவுகளை முன்னெடுத்து வருகின்ற இச்சூழ்நிலையில் அவற்றை முறியடிப்பதற்காக எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அதன் தலைமைத்துவமும் உறுதியான நிலைப்பாட்டுடன் செயலாற்றி வருகின்றன என்றார்.

# அரசவங்கி ஊழியர்களுக்கு 1996 இற்குப்பின் ஓய்வூதியமில்லை

### என்கிறது ஐ.தே.க.

1996 ஆம் ஆண்டுக்குப் பின் அரச வங்கிகளில் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு தற்போதைய அரசாங்கம் ஓய்வூதியம் வழங்கத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இது குறித்து உரியவர்கள் தகவல் அறிந்துள்ளனரா? என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கேள்வி எழுப்பியுள்ளார். ராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இங்கு ஜோன் அமரதுங்க மேலும் கூறியதாவது, நாட்டில் இன்று அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. ரூபாவின் பெறுமதி நாளுக்குநாள் குறைந்து செல்கிறது. இன்று அமெரிக்க டொலருக்கு 134 ரூபா செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. நான்கு பேர் அடங்கிய குடும்பத்தின் மாதச் செலவு 44,928 ரூபாவாகியுள்ளது. அதனால் எதிர்வரும் வரவு - செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 15,000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும். ஏற்றுமதித்துறையில் 50 வீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துசபை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி அறவிடுகின்றபோதும் அவை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்படுவதில்லை. இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் நாமல் ராஜபக்ஷ சென்று பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும் என கூறிவருகிறார். இதனை தொடர்ந்து செய்யமுடியாது. பஸ் ஊழியர்களை அச்சுறுத்தி அவர்களுடைய போராட்டத்தை கைவிட வைக்கின்றனர். அவர்களது பிரச்சினைக்கு தீர்வில்லை. விவசாயிகளின் உரப்பற்றாக்குறை பிரச்சினை மற்றும் மீனவர்களின் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் கலாசாரவிழா நிகழ்வுகள்

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசாரவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது. இயல், இசை, நாடகத்தால் இன்பத்தமிழ் வளர்ப்போம் எனும் தொனிப்பொருளில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைகளம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடத்தப்படவுள்ள இக்கலாசார விழா, காலை 9.00 மணிக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் பண்பாட்டு பேரணியுடன் ஆரம்பமாகவுள்ளது.

இதனையடுத்து பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ள வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனால் மங்கள விளக்கேற்றப்பட்டு நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவிகளால் தமிழ் தாய் வாழ்த்து இசைக்கப்படவுள்ளது. தொடர்ந்து புளியங்குளத்தைச் சேர்ந்த நிருத்திய கலாசேஸ்திர நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் வர வேற்பு நடனமும் வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலர் வே.ஆயகுலனின் வரவேற்புரையும் இடம்பெறவுள்ளது. தலைமையுரையினை வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் "காலம்தேறும் தமிழ்" எனும் இலக்கிய சொற்பொழிவினை இலக்கிய சுடர் ஐ.கதிர்காம சேகரமும் நெடுங்கேணி நாவலர் முன்பள்ளி மாணவர்களின் இசைவும் அசைவும் நிகழ்வும் கவிக்கதிர் தம்பித்துரை ஐங்கரனின் தலைமையில் கவிஞர் மாணிக்கம் ஜெகன், வன்னியூர் நிசான், நந்தா, மருதோடை நிலா ஆகியோரின் பங்கேற்புடன் நல்லதோர் வீணை செய்வோம் எனும் தலைப் பில் கவியரங்கமும் கண்ணீந்த கண்ணப்பன் எனும் தலைப்பில் திருக்காலத்தி வில்லிசைக் குழுவினரின் வில்லிசையும் "மருதமுகில்" நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையினை வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் மி.சூசைதாசனும் ஏற்புரையினை மலராசிரியர் ஜெ.கோபிநாத்தும் ஆற்றவுள்ளதுடன் நெடுங்கேணி செம்மொழிக் கலாமன்றத்தைச் சேர்ந்த இராஜேந்திரம், தவபாலன் ஆகியோரின் மதுரக்குரலிசையும் இலக்கியச்சுடர் ஐ.கதிர்காமசேகரம் தலைமையில் இன்றைய உலகில் தமிழர் பாரம்பரியம் பெரிதும் பின்பற்றப்படுகின்றதா? பின்தள்ளப்படுகின்றதா? எனும் தலைப்பில் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன், இளங்கலைச்சுடர் ஜெ.கோபிநாத், க.தவபாலசிங்கம், ஜெ.திருவரங்கன், பா.ரஜீவன், த.தர்மேந்திரா ஆகியோரின் பங்கேற்புடன் பட்டிமன்றமும், நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவிகளின் செம்பு நடனமும், புளியங்குளத்தைச் சேர்ந்த நிருத்திய கலாசேஸ்திர நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் கீதாஞ்சலியும், வவுனியா வடக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இனியாகினும் திருந்துவோம் எனும் தலைப்பில் தாளலயமும், நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவிகளின் களகு நடனமும், கனகராஜன்குளம் மகாவித்தியாலய மாணவர்களின் அரிச்சந்திரமயான காண்டம் இசை நாடகமும், மதியாமடு விவேகானந்தா வித்தியாலய மாணவர்களின் சுமைதாங்கி எனும் சமூக நாடகமும், நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவிகளிள் சத்தியவான் சாவித்திரி இசை நாடகமும், சின்னடம்பன் பாரதிவித்தியாலய மாணவர்களின் கானல்நீர் சமூக நாடகமும், நெடுங்கேணி மகாவித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து வழங்கும் ஸ்ரீவள்ளி எனும் இசை நாடகமும், சின்னப்பூவரசன்குளம் விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் காலங்கள் மாறினாலும் எனும் தலைப்பில் சமூக நாடகமும், மாறாவிலுப்பை அ.த.க. பாடசாலையின் ஏழுபிள்ளை நல்லதங்காள் எனும் இசை நாடகமும், கலைவேந்தன் இசை நாடக வள்ளல் ம.தைரியநாதன் குழுவினரின் பூதத்தம்பி இசை நாடகமும், கற்சிலைமடு பரந்தாமன் நாடக கலாமன்றத்தினரின் பண்டாரவன்னியனார் எனும் வரலாற்று நாடகமும் இடம்பெறவுள்ளன.

நடேசன் கட்டுரையிலிருந்து

# தமிழ் தலைமையும் அரசியல் தீர்வுகளும்

> **வன்முறை தோற்றாலும் வென்றாலும் யாருக்காக நடத்தப்பட்டதோ அவர்களை மிகப்பெரிய அளவில் பாதிக்கிறது. மேலும் வன்முறையின் செயல்வடிவத்தில் புதிய தலைவர்கள் உருவாக்கப்படு தில்லை. இப்படியான உதாரணங்கள் மத்தியில் எமது இனத்தலைமையை பார்க்கும் போது பல விடயங்கள் தெரியவரும்.**



கிறிஸ்துவிற்கு முன்பான 5ஆம் நூற்றாண்டில் பாரசீக சாம்ராச்சியத்தை ஆண்ட மன்னன் ஆதர்ஸ், பட்டத்து ராணியை பதவியில் இருந்து நீக்கிவிட்டு புதிதாக ஒரு ராணியை தேர்ந்தெடுக்க அழகிப் போட்டியை வைத்தான். அந்த நாட்டில் மெடிசியஸ் என்ற யூத அரசகாவலனால் வளர்க்கப்பட்ட எஸ்தர் என்ற யூதப்பெண் அரசனைக் கவர்கிறாள். அரசனை மணம் முடித்து பட்டத்து ராணியாகும் எஸ்தர் தான் யூதகுலத்தைச் சேர்ந்தவள் என்பதை அரசனிடம் மறைத்து விடுகிறாள்.

சில நாட்களில் ஆதர்ஸ் மன்னனை இண்டு விதூஷகர்கள் விஷம் வைத்துக்கொலைசெய்ய முனைந்த போது அந்த சதியை மெடிசியஸ் கண்டு பிடித்ததால் அரசன் உயிர் தப்புகிறான். மன்னனால் மெடிசியஸ் மெச்சப்படுகிறான்.

மெடிசியஸ் சமய வழக்கத்துக்கு ஏற்ப காலில் விழுந்து வணங்க மறுத்தபோது முதலமைச்சர் கனன் ஆத்திரமுற்று மெடிசியஸை மட்டுமல்லாமல்ஏனைய யூதர்களையும் கொலை செய்யத் திட்டமிட்டு அதற்கான அரச சம்மதத்தையும் பெற்றுக் கொள்கிறான். இதை அறிந்து கொண்ட மெடிசியஸ் இதைப் பற்றி அரசனிடம் பேசி நடக்கவிருக்கும் கொலைகளை தவிர்க்கும் படி எஸ்தரிடம் கூறுகிறான்.

எஸ்தர், எல்லா யூதர்களையும் மூன்று நாள் உண்ணா நோன்புக்கு அழைத்துவிட்டு அதன் பின்பு நடக்கும் விருந்திற்கு அரசனை அழைக்கிறாள். அப்பொழுது எஸ்தர் தான் ஒரு யூதப் பெண் எனவும் தன்னை சேர்ந்தவர்களை கொலை செய்யும் படி கனன் உத்தரவிட்டிருப்பதாக அரசனிடம் கூறுகிறாள்.

தான் ஏற்கனவே உத்தரவு கொடுத்து நடக்கவிருந்த யூதர்களின் கொலையை நிறுத்த முடியாது ஆனால் உங்களைத் தாக்க வருபவர்களை எதிர்த்து இனத்தைக் காக்கலாம் என அரசன் உறுதியளித்தான். யூதர்கள் தங்களது எதிரிகளை தாக்கி ஒழித்த அன்றைய நாள் யூத இனத்தின் விடுமுறை நாளாக இன்னமும் கொண்டாடப்படுகிறது.

நாம் படித்த வரலாறுகளில் அரசர்கள், இளவரசர்கள் தங்களது ஆளும் உரிமையை மீளப் பெற போராடுவதும் அதில் வெல்வதும் தோற்பதும் இயல்பு. சில நேரங்களில் அதற்காக உயிர் விடுவதும் அல்லது தோற்றபின் வேறு இடத்தில் இராச்சியம் உருவாக்கியதாகவும் சரித்திரம் உண்டு.

ஹோமரின் இலியெட்டில் தோற்ற ரோய் நாட்டவர்களின் அரசவம்சதான் கிறிஸ்துவிற்கு முன் 8ஆம் நூற்றாண்டில் ரோம சாம்ராச்சியத்தை உருவாகியதாக சரித்திரம் சொல்கிறது.

அரச வம்சங்களின் சரித்திரம் என்பது வித்தியாசமானது. அது இனத்தின் சரித்திரமல்ல. நமக்கு எல்லாம் தெரிந்த யாழ்ப்பாண அரசவம்சத்தின் சரித்திரம் இனத்தின் சரித்திரமல்ல. தென் இந்தியாவில் தெலுங்கு நாயக்க வம்சத்தினரால் மதுரையிலும் அதன் பின்பு யாழ்ப்பாணத்திலும் ஏன் கண்டியிலும் உருவாகியது.

பாதிப்படைந்த சமூகம் நல்ல தலைமைக்கு ஏங்குகிறது. இப்படியான சமூகம் எப்படி அக்காலத்தின் சவாலை சமாளித்து எதிர்கொள்ளுகிறது என்பதை அறிந்துகொள்வது எமக்கு முக்கியமாகிறது.

இப்படியாக தனி ஒரு சமூகத்தின் நீண்ட பயணவரலாறு எழுத்தில் இருப்பது யூத இனத்தின் வரலாறே. இதையே நாங்கள் சுவிஷேசத்தின் பழைய ஏற்பாடு எனக் கூறுகிறோம்.

யூத மக்கள் நூறு வருடங்களுக்கு மேல் எகிப்தில் அடிமையாக இருந்தார்கள் அதன் பின் பபிலோன் அசிரியா போன்ற இடங்களிலும் அடிமையாக வாழ்ந்தார்கள். இதேவேளையில் இவர்கள் டேவிட் மற்றும் சொலமன் என்ற மன்னர்களது காலங்களில் அமோகமாக வாழ்ந்தார்கள்.

தாழ்ந்த நிலையில் மற்றவர்களால் துன்பப்பட்ட காலத்தில் யூத இனத்தை வழிநடத்திய மோசஸ் ஜோசப் டானியல் எஸ்தர் போன்றவர்களே போற்றுதலுக்கு உரியவர்களாகப் பார்க்கப்பட வேண்டியவர்கள்.

இது எல்லா இனத்திற்கும் பொருந்தும். எந்த சமூகமும் தொடர்ந்து வாழ்ந்ததும் இல்லை அதேபோல் தாழ்ந்ததும் இல்லை.

எமது சிங்கள சகோதர இனம் 2500 வருடத்தில் 54 தடவைகள் தென் இந்தியாவில் இருந்து வந்த படை எடுப்புகளை சந்தித்தது. 500 வருடங்கள் மேற்கு நாடுகளின் காலனித்துவத்தில் இருந்தது.

நமது காலத்திலும் சமீபகாலத்திலும் நாம் பார்த்த காந்தி, மார்ட்டின் லூதர் கிங் மற்றும் மண்டேலா போன்றவர்கள் தங்களது சமூகத்தின் இழந்த உரிமையை பாரிய அழிவின்றி மீட்டவர்கள். இவர்கள் நடவடிக்கைகள் செயல் திட்டங்கள் அதிக காலங்களை எடுத்தாலும் தமது மக்களுக்கு தங்களது நடவடிக்கையால் உயிர் உடமை போன்றவற்றால் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொண்டார்கள். இந்திய சுதந்திர போராட்டத்தில் ஆயுதம் எடுத்திருந்தால் இலகுவாகவும் விரைவாகவும் சுதந்திரம் கிடைத்திருக்கும் என சொல்பவர்களை இன்னமும் சந்திக்கிறேன். மாவோ நடத்திய ஆயுதப் போரட்டம் எத்தனை மில்லியன் சீன மக்களை பலி கொண்டதென்பதை சமீபத்தில் படித்தபோது அதிர்ச்சியடைந்தேன்.

வன்முறை தோற்றாலும் வென்றாலும் யாருக்காக நடத்தப்பட்டதோஅவர்களை மிகப்பெரிய அளவில் பாதிக்கிறது. மேலும் வன்முறையின் செயல்வடிவத்தில் புதிய தலைவர்கள்உருவாக்கப்படுதில்லை. இப்படியான உதாரணங்கள் மத்தியில் எமது இனத்தலைமையை பார்க்கும்போது பல விடயங்கள் தெரிய வரும். சமீபகால தமிழ் அரசியல் நடவடிக்கைகள் சம்பந்தமாக சில கேள்விகளை வைத்து அதற்கான விடைகளைப் பார்ப்போம்.

முதலில் எமது இனத்தலைவர்கள் எதற்காக தமிழ் மக்கள் சார்பாக போராட்டம் செய்தார்கள் எனப் பார்ப்போம் எனக்குப் புரிந்தவரை தமிழ் மொழியை வட- கிழக்கிலும் தமிழை இணைமொழியாக தெற்கிலும் பாவிப்பதற்கான உரிமையை கேட்டார்கள். இது உன்னதமான நோக்கம் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் இதை எப்படிச் செய்தார்கள்?

இலங்கையில் வாழும் சிறுபான்மையான 26 சதவீதமானவர்கள் ஒற்றுமையாகாமல் இதை எப்படி சாதிப்பது?

இக்காலகட்டத்தில் இந்த நோக்கத்திற்காக மலையக மக்களும் இஸ்லாமிய மக்களும் ஒன்றிணைக்கப்பட்டார்களா?

சிங்கள மொழியின் தாக்கம் அவர்களைத்தானே அதிகமாக பாதிக்கிறது. அப்படி பாதிக்கப்பட்ட அவர்கள் ஏன் எம்முடன் ஒன்றிணையவில்லை?

இப்படியான மொழிப்பிரச்சினையின் சிக்கலை நீக்க போராட்டத்தில் ஈடுபட்டுவந்த கட்சி ஏன் தமிழரசுக் கட்சி என்ற நாமகரணம் பெற்றது?

எமது கோரிக்கையின் நியாயத்தை 74 வீதமான பெரும்பான்மை மக்கள் அறிந்திருக்கிறார்களா?

சிங்கள மக்களில் 6-10 வீதமானவர்களே ஆங்கிலத்தில் ஆற்றல் பெற்றவர்கள். மேலும் ஒரு சதவிதமானவர்கள் கூட தமிழ் மொழி புரியாதவர்கள். இந்த நிலையில் ஒரு ஜனநாயக நாட்டில் எமது கருத்தை கோரிக்கையை மற்றவர்களுக்கு புரிய வைத்தல் என்ற அடிப்படை விடயத்தில் இவர்களது முயற்சியென்ன?

எமக்கெல்லாம் தெரிந்த 58.ல் சிங்கள சிறீ போராட்டம், தமிழ்நாட்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நகல் எடுத்து இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழக பாணியில் செய்த விடயங்கள் தீராத இனவிரோதத்தை உருவாக்கியதுடன் நமது நாட்டில் இன உறவுகளை மிகவும் பின்தள்ளியது.

மொழி வாரியான் தரப்படுத்தல் 72-லும் மாவட்டரீதியான தரப்படுத்தல் 75-லும் ஆரம்பமாகியது.

அக்காலத்தில் இரண்டையும் பொதுவாக எதிர்த்தோம். இதன் எதிரொலியாக வட- கிழக்கு பிரதேசம் தமிழ் மக்களின் பரம்பரை பிரதேசம் என பிரிவினை கோரிக்கையை வைத்தோம்.

அதாவது சிக்கலான பல விடயங்களை பிரிவினை என்ற கோசத்தின் மூலம் மிக இலகுவாக எதிர்கொண்டோம். அதை எல்லாவற்றிற்கும் சர்வரோக நிவாரணியாக மக்களை நம்பவைத்தோம்.

மொழிவாரியான தரப்படுத்தல் ஏற்க முடியாத போதும் மாவட்டரீதியான தரப்படுத்தல் பின்தங்கிய தமிழ் பிரதேசங்களில் வாழ்ந்தவர்களுக்கு வரப்பிரசாதமானது. அதாவது யாழ்ப்பாணம் தவிர்ந்த எல்லா தமிழ் மாவட்டங்களும் பின்தங்கியவையே. இதைப் பற்றிய ஆழமான சிந்தனை எம்மிடம் இருக்கவில்லை.

இதை விட முக்கியமானது எமது பிரிவினையை இந்தப் பிரதேசங்களில் வாழ்ந்த மற்ற இனங்கள் ஏற்றுக் கொண்டதா? அதைப்பற்றி கவலை கொண்டோமா?

இதன் பின்பு நடந்த ஆயுதப்போராட்டத்தை கடந்து தற்போதைய அரசியலைப் பார்க்க வேண்டியிருக்கிறது. காரணம் மிகப்பெரிய மாற்றங்கள் வடக்கு- கிழக்கு மக்கள் பரம்பலில் நடந்துள்ளன. ஜனநாயக உரிமைகளை பெறுவதற்கு இந்த மக்கள் பரம்பல் முக்கியமானது.

மாரியில் பாவித்த கிணற்றுக் கயிறை நீர் அள்ளுவதற்கு கோடையில் பாவிக்கமுடியாது.

வடக்கு கிழக்கு தமிழரில் ஐந்து இலட்சம் மக்கள் மேற்கு நாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். ஒரு இலட்சத்திற்கு மேல் இந்தியாவில் வாழ்கிறார்கள். வட - கிழக்கில் வாழும் தமிழரிலும் பார்க்க எண்ணிக்கையில் கூடிய அதிக தமிழர்கள் வெளி மாகாணங்களில் வாழ்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலும் பார்க்க கொழும்பில் அதிக தமிழர்கள் வாழ்கிறார்கள். இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 9.4 வீதமானது வடமாகாணம். ஆனால் 4 வீதத்திற்கு இடைப்பட்ட மக்களே இந்த நிலப்பரப்பில் வாழ்கிறார்கள்.

இந்த நிலையில் பழைய கோரிக்கைகள் கோசங்கள் தீர்வுகள் தற்போதைய நிலைக்கு ஒத்து வராது. சிறுவனாக இருந்தபோது போட்ட அதே உடுப்பைத்தான் போடுவேன் என அடம் பிடிப்பது சிறுபிள்ளைத்தனம்.

எல்லோரது வாயிலும் பேசப்படும் இந்த 13 ஆம் திருத்தம் வடமாகாணத்தை சுற்றி வேலி போடாது. அது நடைமுறை சாத்தியமானது அல்ல.

தமிழருக்கு பொருளாதாரம் வேலை வாய்ப்பு முதலீடு என்பன வடகிழக்குக்கு வெளியேதான் உள்ளது. இதனால்தான் மக்கள் தொடர்ச்சியாக கொழும்புக்கும் வெளிநாட்டிற்கும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எமது கோரிக்கைகள் தீர்வுகள் இலங்கையில் எங்கும் சம உரிமை சம வேலைவாய்ப்புடன் வாழ்வதை நோக்கமாக இருக்கவேண்டும். அத்துடன் மற்றைய இனங்களுடன் கலாசாரம் மொழி என்பவற்றில் தனித்துவத்தை பேணியபடி இலங்கை அரசியலில் அதிகாரப்பகிர்வு என்ற இலக்கை நோக்கிய பயணத்தை கொண்டிருக்கவேண்டும்.

# மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ ஒன்றிணையும் காலம் ஏற்பட்டுள்ளது



"அனைத்து இனங்களுக்கும், மதங்களுக்கும் மதிப்பளித்து நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டிய காலம் உருவாகியுள்ளது" என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

3970 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அம்பாறை, ரம்புக்கன் ஓயா நீர்த்தேக்கத்தின் திறப்பு விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை அம்பாறை மகா ஓயா பொல்லே பெத்தையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"30 வருட கால யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்கு புதிய புத்துணர்வை ஊட்டுகின்றன. அன்று 18ஆம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியவாதிகள், மலைப் பிரதேசங்களில் வாழ்ந்த இந்த கிழக்கு பிரதேச மக்களை துன்புறுத்தினர். அதாவது 14 வயதுக்கு மேற்பட்ட இளைஞர் மற்றும் யுவதிகளை கொன்று குவித்தனர். அவர்களின் ஏகாதிபத்தியற்கு பயந்துதான் அந்த பிரதேசத்திலிருந்து இந்த பிரதேசத்திற்கு இம்மக்கள் குடிபெயர்ந்தனர்.

எம்மக்களின் பசுமைப்புரட்சியை இல்லாதொழித்த அன்றைய ஏகாதிபத்தியவாதிகள் வாவி மற்றும் குளங்களை அழித்து இந்நாட்டில் பட்டினிச்சாவை ஏற்படுத்தினர்.

1970 ஆம் ஆண்டில் இந்நாட்டின் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் மற்றும் மைத்திரிபால சேனநாயக்க போன்றோர் இந்த நாட்டில் அபிவிருத்திக்காக வித்திட்டனர். அந்தவேளையிலே தான் இந்த ரம்புக்கன் ஓயா அபிவிருத்தித் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர். அப்படியே நின்று போன இத்திட்டம் பல வருடங்களின் பின்னர் இன்றுதான் பூர்த்தியாகியுள்ளது.

பயங்கரவாதத்திலிருந்து நாடு விடுவிக்கப்பட்டதனைப் போன்று வரட்சி மற்றும் பட்டினியிலிருந்தும் நாட்டின் சந்ததி விடுவிக்கப்பட்டு தன்னிறைவு மிக்க நாடாக கட்டியெழுப்பப்படும். குருநாகல் தெதுறு ஓயா, மாத்தளை மொறஹாகந்த மற்றும் அம்பாறை ரம்புக்கன் ஓயா இவையாவும் இந்த மகிந்த சிந்தனையின் கீழ் அடங்குகின்றன. மகிந்த சிந்தனையின் மூலமாக இந்த நாடு படிப்படியாக அபிவிருத்தியின்பால் தன்னிறைவடைகின்றது.

நீர்வளம் நமது நாட்டின் முக்கிய வளங்களில் ஒன்றாகும். அந்த உன்னதமான வளங்களின் உரிமை நம்நாட்டு மக்கள் வசம் இருக்க வேண்டும். எனவே எல்லோருக்கும் மதிப்பளித்து இன, மத பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டினைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்" என்றார்.

## நெல் கொள்வனவு ஆரம்பம்

அடுத்த வாரம் முதல் நெல் கொள்வனவு செய்வதற்கான வேலைத்திட்டங்களை தயாரித்துள்ளதாக நெற் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது. முதற்கட்டமாக அம்பாறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் நெற் கொள்வனவை ஆரம்பிக்க முடியும் என சபையின் தலைவர் கே.பீ.ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்குத் தேவையான நிதி, களஞ்சிய வசதி மற்றும் ஏனைய வசதிகள் தற்போது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்யுள்ளார். இம்முறை சுமார் 115 மெட்ரிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு எண்ணியுள்ளதாக நெற் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கூறியுள்ளார். நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு புறம்பாக மாவட்ட செயலாளர் ஊடாகவும் கமநல சேவை உத்தியோகத்தர்கள் ஊடாகவும் நெற் கொள்வனவை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## திருமண வைபவத்தில் "மூக்குக் கடி"

அத்தனகல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண வைபவம் ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண தேர்தல் அமைப்பாளர் ஒருவர் அங்கிருந்த நபர் ஒருவரது மூக்கை கடித்து தாக்கியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் வதுபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண தேர்தல் அமைப்பாளர் துஷார ஹேமச்சந்திரவின் தாக்குதலில் காயமடைந்தவர் ஒரு ஊடக நிறுவன ஊழியர் என தெரிவிக்கப்படுகிறது.

மாலை 4 தொடக்கம் 4.35 மணிக்கிடையில் இச் சம்பவம் குறித்து பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துனேஷ் கங்கந்த வர்த்தகர் ஒருவரின் மூக்கை கடித்துள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

## டொலர் பெறுமதி அதிகரிப்பால் உணவுப் பொருள் விலை அதிகரிக்கலாம்



அமெரிக்க டொலரின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரிப்பதன் காரணமாக இலங்கை நாணயம் வீழ்ச்சியடைவதன் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்து வருவதன் காரணமாக, அத்தியாவசிய உணவுப் பொருட்களினை இறக்குமதி செய்யும் போது அதிக செலவீனம் ஏற்படுவதாக கொழும்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் பழனியாண்டி தெரிவித்துள்ளார்.

இறக்குமதிக்கான உறுதிப் பத்திரம் சில வாரங்களுக்கு முன்னர் வங்கியின் ஊடாக ஏற்றுமதியாளர்களுக்கு அனுப்பப்படுகிறது.

எப்படியிருப்பினும், அவை இலங்கை வந்தடையும் போது மேலதிகமான செலவீனத்தை எதிர்நோக்குவதாக அவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக வெண்காயம், பருப்பு, சீனி, அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பால் வகைகள் என்பனவற்றிற்றின் விலைகள் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர மேலும் தெரிவித்தார்.

## சவூதியின் பொது மன்னிப்புக் காலத்தில் 3000 இலங்கையர் திரும்பினர்



சவூதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டு பணியாளர்களுக்கு நாட்டில் இருந்து வெளியேறுவதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலத்தினுள் 3 ஆயிரம இலங்கையர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

ஜெட்டா நகரில் உள்ள இலங்கை தூதரக காரியாலயத்தின் ஊடாக இந்த தகவலறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 9 ஆயிரத்து 600 பேருக்கு தற்காலிக கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 4 ஆயிரத்து 500 பேர் சவூதி அரேபியாவில் இருந்து வெளியேறுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தூதுவர் ஆதம் பாவா உதுமாலெப்பே தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபிய அரசாங்கத்தினால் தமது நாட்டில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

## நவுரு தீவுக் கலவரத்தின்போது இலங்கையர் குறித்து கோரிக்கை



(கொழும்பு)

நவுருதீவில் இடம்பெற்ற கலவரத்தில் இலங்கையர்களின் நிலை குறித்து அறியத் தருமாறு அவுஸ்ரேலியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரை கோரியிருப்பதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் இலங்கை அகதிகளின் நிலைமை குறித்து தமக்கு எவ்வித உத்தியோகபூர்வ தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

இலங்கையில் தாங்கள் துன்புறுத்தப்படுவதாக நாட்டையும் அரசாங்கத்தையும் குற்றஞ்சாட்டியே இவர்கள் சட்ட விரோதமாக அவுஸ்ரேலியா சென்றடைந்தனர். இந் நிலையில், அவுஸ்ரேலிய அரசாங்கம் கேட்டுக் கொண்டாலேயொழிய நாம் மேற்படி புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய கட்டாயம் எமக்கு இல்லை. அத்துடன் நவுரு தீவில் இருக்கும் வரை அந்நாட்டு அரசாங்கமே அவர்களுக்காக பொறுப்புக் கூற வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்ரேலியாவிலிருந்து திருப்பியனுப்பப்படுவார்களாயின் இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் அவர்களை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் தயாரெனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவுஸ்ரேலியாவில் புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நவுரு தீவில் பாரிய கலவரத்தை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் இது வரையில் 125 பேர் அவுஸ்ரேலிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கடந்த வெள்ளிக்கிழமை நவுரு தீவில் வெடித்த பெரும் கலவரத்தையடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள 500 இற்கும் மேற்பட்ட கைதிகளைத் தேடி அவுஸ்ரேலிய பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் வெளிநாட்டுச் செய்திச் சேவைகள் தெரிவிக்கின்றன. அவுஸ்திரேலிய பொலிஸாரின் தடையீட்டினையடுத்து நவுரு தீவில் தற்போது அமைதி நிலவுகிறது.

இந்த கலவரத்தினால் சுமார் 60 மில்லியன் அவுஸ்ரேலிய டொலர் பெறுமதியான உடைமைகள் சேதமாக்கப்பட்டிருப்பதாகவும் அவுஸ்ரேலிய குடிவரவு திணைக்களம் கணிப்பிட்டுள்ளது.

கலவரத்தின்போது தப்பிச் சென்ற அகதிகளைத் தவிர்ந்த எஞ்சிய 420 புகலிடக் கோரிக்கையாளர்களும் இன்னுமொரு தடுப்பு முகாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமையன்று நவுரு தீவில் ஈரான், ஈராக், பாலஸ்தீனம் மற்றும் லெபனான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களே பாரிய கலவரத்தை ஏற்படுத்தியதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


## பயன்படுத்தப்பட்டு இறக்குமதியாகும் உபகரணங்களுக்கு கட்டுப்பாடு



வெளிநாடுகளில் பயன்படுத்தப்பட்ட கணணிகள் மற்றும் கைத் தொலைபேசிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் போது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு சுற்றாடல்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் இலத்திரனியல் பொருட்களை நாட்டுக்கு கொண்டுவருவது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐவர் கொண்ட குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்காலத்தில் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைவர் விமல் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

# ஜெயபுரம் தேவன்கட்டுகுளப் பகுதியில் கண்ணிவெடி அகற்றுவது குறித்து ஆராய்வு

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவிலுள்ள ஜெயபுரம் தேவன்கட்டு குளத்தின் அணைக்கட்டு உள்ளிட்ட பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றி குளத்தினை புனரமைப்பது தொடர்பில் ஆராயும் கூட்டம் ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் கடந்த சனிக்கிழமை பூநகரி பிரதேச செயலகத்தின் ஜெயபுரம் உப அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

தேவன்கட்டுகுளத்தினை விரைவாக புனரமைத்து விவசாய நடவடிக்கைகளுக்கு வழங்கும் பொருட்டு பிரதேச கமக்கார அமைப்புகளின் வேண்டுகோளுக்கிணங்க விரைவாக கண்ணிவெடி அகற்றல் தொடர்பில் உரிய அதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர்.இதன்போது நாளை மறுதினம் வியாழக்கிழமை இப்பிரதேசங்களில் முன்னர் கண்ணிவெடி அகற்றிய டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் நடவடிக்கைகள் முகாமையாளர் மற்றும் ஹலோ ரெஸ்ட் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் மற்றும் பிரதேசசெயலக அதிகாரிகள் நீர்ப்பாசனத்திணைக்களம், கமநலசேவைகள் நிலைய ஆணையாளர், பிரதேச கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் குறித்த தேவன்கட்டுகுளத்திற்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு கள நடவடிக்கைகளை நேரில் ஆராய்ந்து விரைவில் கண்ணிவெடி அகற்றல் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் சொர்க்க நாதன், ஹலோ ரெஸ்ட பிராந்திய முகாமையாளர் ஜோசப்ஸ் ரூட்லி, கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்கள பொறியியலாளர் விகிர்தன், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் நிலைய ஆணையாளர் தயாரூபன், ஈ.பி.டி.பி கிளிநொச்சி மாவட்ட அமைப் பாளர் தவநாதன், பிரதேசசெயலக காணி உத்தியோகத்தர், கிராம அலுவலர் பிரதேச கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்பனை

செலான் வங்கியின் யாழ்ப்பாணம், மானிப்பாய், சங்கானை ஆகிய கிளைகளில் 03.07. 2012ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத அடகுநகைகள் யாவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம்3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு 560,செலான் வங்கி ,யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள (ஆஸ்பத்திரிவீதி முன்பாக) வங்கியில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செயய ப்படவுள்ளதாக வங்கி முகாமையாள் அறிவித்துள்ளார். (க)

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டுவிழாவிற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும், யாழ்.மறை மாவட்டமும் இணைந்து நடாத்தும் தமிழ் தூது தனி நாயகம் அடிகளாரின் நூற்றாண்டுப் பெருவிழா பற்றிய பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (21.07.2013) மாலை 4.00 மணியளவில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது

. யாழ்.தமிழ்ச்சங்கத் தலைவரும், நூற்றாண்டு விழாக் குழுத்தலைவருமான பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் குழுவின் இணைச்செயலர் அ.பி.ஜெயசேகரம்,பேராசிரியர் மா.சின்னத்தம்பி,விழாக்குழுப் பொருளாளர் திருமதி. எம்.ஈ.பீ. மரியதாசன் ,பேராசிரியர் கி.விசாகரூபன், சொல்லின் செலவர்இரா.செல்வவடிவேல், விரிவுரையாளர் ச.லலீசன் மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்ச் சங்கங்களுக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைப்பதற்குப் பொருத்தமான காணியொன்றை அன்பர் ஒருவர் வழங்கவுள்ளதாகவும், விரைவில் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பேராசிரியர் கி.விசாகரூபன் தெரிவித்தார்.

பல பாடசாலைகளின் அதிபர்கள் தமது பாடசாலைகளில் தமிழ்ச்சங்கங்கள் அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும், இது சம்பந்தமாக சங்கம் கருத்தில் கொண்டிருப்பதாகவும் இரா. செல்வவடிவேல் குறிப்பிட்டார். இனமதம் கடந்த இணைப்பினைக் கருத்தில் கொண்டு இயங்கும் தமிழ்ச் சங்கத்தில் இதுவரை 256 அங்கத்தவர்கள் இணைந்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (137)

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை


(வரணி)

வரணி வடக்கு பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ள நிலையில் இதனால் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் முதல் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நாய்களை கட்டுப்படுத்துமாறு ஊடகங்களில் பலமுறை செய்திகள் வெளிவந்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருப்பது மிகவும் வேதனைதரும் விடயமாகவே உள்ளது. இத்தெருநாய்க்கடிக்கு ஆளாகி பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்துள்ளனர்.நாய் வளர்ப்போரின் அசமந்த நிலையால் பாதிக்கப்படுவது பொதுமக்களே ஆடு, மாடுகளை அவிழ்த்து விடுவது மேய்ச்சலுக்கு என்று கூறலாம். ஆனால் பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை பகல் வேளைகளில் அவிழ்த்து விடுகின்றனர்.

இதனால் அவை வீதிகளில் கட்டாக்காலிகளாக திரிவதுடன் போக்குவரத்துக்கும் இடையூறை ஏற்படுத்துகின்றன. எனவே நாய் வளர்ப்போர் வீதியால் செல்லும் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி தமது வளர்ப்புநாய்களை கட்டி வளர்ப்பதுடன் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களையும் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் முன்வரவேண்டும் என பயணிகளும் மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# ரம்ழான் நற்சிந்தனை



நோன்பாளிகள் நோன்பு திறக்கும் வரை கடலிலுள்ள மீன்களும் அவர்களுக்காக மன்னிப்பு தேடிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொருநாளும் சொர்க்கம் அலங்கரிக்கப்படுகின்றன. அட்டூழியம் புரியும் ஷைத் தான்கள் விலங்கிடப்படுகின்றன. ரம்ழான் மாதக் கடைசி இரவில் மன்னிப்பு வழங்கப்படுகின்றன. என நபி(ஸல்) கூறினார்கள்

நூல்:- அஹ்மத்,பைஹகி (105)

# முரசின் இன்றைய பலன்



(23.07.2013 –செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 07ஆம் திகதி.உத்தராடநட்சத்திரம் மு.ப. 07.48 வரை பின்திருவோணம் ,பிரதமைத்திதி,சித்தயோகம்
இராகுகாலம 03.02- .04.32வரை. சுபநேரம 10.32- 12.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பயண இடைத்தங்கல் நாடொன்றில் சேர்த்தல்,நிறம் உடல்வாகு பணப்பற்றாக்குறையால் திருமண நிறுத்தம்,கவனக்குறைவால் திருட்டு போதல். |
| ரிஷபம் | தேசியப்போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு, அதிர்ஷ்டமொன்று தேடிவரல், நீண்டநாள் கடன் வசூலாதல், விவாகம் பற்றிய சுபசெய்தி,வாகனயோகம். |
| மிதுனம் | அவுஸ்ரேலிய கடற்பயணம் காலைவாரிவிடல், பிள்ளைகளின் உயர்வு கேட்டு மகிழ்வு,நோய் பற்றிய அச்சமின்மை, அயலவர் சகபாடிகள் ஒத்துழைப்பு. |
| கடகம் | மனை காணி வாகனவிற்பனைக்கு விளம்பரம்,சுறுசுறுப்புடன் செயற்பாடு,மிதிவெடி அபாயம், புதிய இணைப்புக்கள்,கருத்து மோதலால் நட்பு கைவிடல். |
| சிம்மம் | உத்தியோகத்தில் அவசரமுடிவு எடுக்காமை, நீண்டநாட்பிரச்சினைக்கு முடிவு கட்டும் தீர்மானம், பிறரின் ஆலோசனைக்கு செவிமடுத்தல், கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றல். |
| கன்னி | இடமாற்றத்தை இரத்துச் செய்ய முயற்சி, போட்டியில் வெற்றிவாகை ஆத்மிக நாட்டம், விருந்தினர் வருகை. |
| துலாம் | கிரகப்பிரீதி செய்ய ஆலய தரிசனம், விட்டுக்கொடுப்பதால் சமரசம்,பிதாவின் தேகசுக மேம்பாடு,சகோதரஉதவி,புதிய இடத்தில் வர்த்தக நிலையம் திறக்க முற்படுதல். |
| விருச்சிகம் | பொறுமை சகிப்புத்தன்மையால் காரிய சித்தி, வாகன புகைப்பரிசோதனை,தனியார் தாபனத்தில் தொழில் பெறுதல். |
| தனுசு | பயணம் வெற்றியடைதல், குழந்தைப்பேறு,புதிய வீட்டுத் திட்டத்திற்கு அங்கீகாரம்,சீட்டுப்பணம் பெறுதல், சச்சரவு நீங்குதல். |
| மகரம் | ஊசிபோட தவறியதால் அபாயம்,கடன்பெற்றதால் பரிதாபநிலை, வாடகைக்கு கடைகள் கொடுக்கும் திட்டம், பயணத்தை தற்காலிகமாக கைவிடல், சுவீப் அதிர்ஷ்டம். |
| கும்பம் | வேலைவாய்ப்பு பெற பிரமுகர்களைச் சந்திப்பு, பங்குத்தொழிலை கைவிடும் எண்ணம், குழந்தைப் பேறு,வாக்குச் சித்தி,பணமுடை நண்பரால் தீரல். |
| மீனம் | காலாவதியான வரிப்பத்திரத்தினால் தண்டம், சளி மூட்டுநோய்கள் வருத்துதல்,கடன் தீர்க்க நண்பர் உதவி,விளம்பரம் செய்து வரன் தேடும் எண்ணம். |

# இங்கிலாந்து பெரு வெற்றி



(லண்டன்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணி 347 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக்கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி இங்கிலாந்தின் லோர்ஸ்ட் மைதானத்தில் நேற்று முன்தினம் நிறைவடைந்தது.




இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி சரிவைச் சந்தித்தபோதும், இயன் பெல்லின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் ஸ்திரமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பெல் 109 ஓட்டங்களைப்பெற்றார். பந்து வீச்சில் ஹரிஸ் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி, ஸ்வானின் சுழற்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் சுருண்டது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வட்சன் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஸ்வான் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

233 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி ரூத்தின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 348 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் ரூத் 180, இயன் பெல் 74 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிஸ் இரண்டு, பீற்றர் சிடில் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 582 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 36 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து தடுமாறியது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் கிளார்க், உஸ்மன் ஹவாஜா இணை பொறுப்புடன் ஆடி இங்கிலாந்து பந்து வீச்சாளர்களை சினமடையச் செய்தது. கப்டன் குக்கும் இந்த ஜோடியைப் பிரிக்க பல வியூகங்களை வகுத்தபோதும் அது முடியவில்லை. இறுதியில் துடுப்பாட்டத்தில் அசத்திய ரூத்தினால் கிளார்க், ஹவாஜா ஜோடி பிரிக்கப்பட்டது. இந்த ஜோடி 98 ஓட்டங்களை தமக்கிடையே பகிர்ந்து கொண்டது. தொடர்ந்து அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டபோதும், பத்தாவது விக்கெட்டுக்காக இணைந்த பட்டின்சன், ஹரிஸ் இணை போட்டியை இறுதி நாள் வரை இழுத்துச் செல்லும் நிலை தோன்றியது. இருப்பினும், நான்காம் நாள் ஆட்டம் நிறைவுற மூன்று பந்துகள் மீதமுள்ள நிலையில் இந்த ஜோடி ஸ்வரனினால் இந்த ஜோடி பிரிக்கப்பட்டதுடன் இங்கிலாந்து வெற்றியும் உறுதி செய்யப்பட்டது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் கிளார்க் 51, உஸ்மன் ஹவாஜா 54, பட்டின்சன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்வான் நான்கு, அண்டர்சன், ரிம் பிரெஸ்ணன், ரூத் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ரூத் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 1ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# ஆறு விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் வெற்றி



(சென் லூசியா)


மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவுகளின் சென். லூசியாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சாமுவேல்ஸின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 49 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை மழையால் போட்டி நிறுத்தப்பட்டது. இதில் சாமுவேல்ஸ் 104 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நாள் அரங்கில் சாமுவேல்ஸ் பெற்றுக் கொண்ட ஐந்தாவது சதமாக இது அமைந்தது. மற்றும் கிறிஸ் கெய்ல் 30, சிமன்ஸ் 46, சார்லஸ் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் இர்பான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து மழை நின்றவுடன் போட்டி மீண்டும் ஆரம்பமானது. இதில் டக்வெத் லூயிஸ் முறைப்படி 30 ஓவர்களில் 189 ஓட்டங்கள் பாகிஸ்தான் அணிக்கு வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதற்கமைய ஆடிய பாகிஸ்தான் அணி 31 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 53, உமர் அக்மல் 29 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் மொகமட் ஹபீஸ் 59 ஓட்டங்களைப்பெற்றார். பந்து வீச்சில் பிராவோ, ஹோல்டர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சாமுவேல்ஸ் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. மூன்றாவது போட்டி சமநிலையில் நிறைவுற்றது. இரு அணிகளுக்குமிடையிலான இறுதி ஒரு நாள் போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் செரீனா வசம் கிண்ணம்




(பஸ்டாட்)

சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல்நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) சம்பியன் பட்டம் வென்றார்.

சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் பஸ்டாட்டின் இடம்பெற்றது. இதில் சுவீடனின் உள்ளூர் வீராங்கனை ஜோகன்னா லார்சனுடன் மோதிய செரீனா 6,4 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய செரீனா, ஜோகன்னாவின் சேர்வீஸ் ஆட்டத்தை எளிதாக முறியடித்து புள்ளிகளைக் குவித்தார். வெறும் 1 மணி 18 நிமிடம் மட்டுமே நீடித்த இப்போட்டியில், செரீனா 6-4, 6-1 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று கோப்பையைக் கைப்பற்றினார். இந்த ஆண்டில் செரீனா பெறும் 51ஆவது வெற்றி இது என்பது குறிப்பிடத்தக்கது.

# இத்தாலி வீரர் பலி



ரஷ்யாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கிய இத்தாலி நாட்டின் அதிவேக மோட்டார் சைக்கிள் பந்தய வீரர் ஆண்டிரியா அண்டோநெல்லிபரிதாபமாக பலியானார். உலக சாம்பியன்ஷிப் மோட்டார் சைக்கிள் போட்டிகளின் ஒருகட்டமான மொஸ்கோ சுற்றுப் போட்டி, மொஸ்கோ அருகே உள்ள வோலோகோலாம்ஸ்க் மாவட்டத்தின் கரடுமுரடான பாதையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஆரம்பத்தில் இருந்தே பந்தயத்தில் ஆண்ட்ரியா அண்டோநெல்லி முன்னிலையில் இருந்தார். இறுதிக் கோட்டினை எட்டும்போது கட்டுப்பாட்டை இழந்த அவரது மோட்டார் சைக்கிள் உடன் வந்த மற்ற மோட்டார் சைக்கிள்களின் மீது பயங்கர சத்தத்துடன் மோதி கரணம் அடித்து கவிழ்ந்து விழுந்தது.

இந்த விபத்தில் 3 பந்தய வீரர்கள் காயமடைந்தனர். படுகாயமடைந்த இத்தாலிய வீரர் ஆண்ட்ரியா அண்டோநெல்லி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

## இலங்கை தென்னாபிரிக்கா இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று

மைதானம் : கொழும்பு பிரேமதாச – நேரம் : பிற்பகல் 2.30 மணி


# வெற்றிக்கு காரணம் சிரேஷ்ட வீரர்கள்

(கொழும்பு)

சிரேஷ்ட வீரர்களின் பாரிய பங்களிப்பே தென்னாபிரிக்காவுடனான முதல் போட்டியில் வெற்றிபெறுவதற்கான முக்கிய காரணமென இலங்கை அணித் தலைவர் தினேஷ் சண்டிமல் தெரிவித்துள்ளார்.

மஹேல ஜயவர்தன மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர். அணியில் முன்னாள் அணித் தலைவர்கள் மூவர் உள்ளமை அணிக்கு இயல்பான பலமாகவே அமையும் என்று எண்ணுகின்றேன். அடுத்து வரும் போட்டிகளையும் சிறப்பான முறையில் எதிர்கொண்டு தொடரைக் கைப்பற்றிக் கொள்வதே எமது நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்ற முக்கோண ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டியில் அடைந்த தோல்வியிலிருந்து மீளும் வகையில் தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதல் வெற்றி அமைந்திருக்கின்றது. உள்ளூரில் இத்தொடர் நடைபெறுவதால் தொடரை எங்களால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாக திரிமன்ன தெரிவித்தார்.



# அவதூறுப் பிரசாரம் ஆர்தர் ஆதங்கம்

தன்மீது வேண்டுமென்று அவதூறாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் குற்றம் சாட்டியுள்ளார்.சமீபகாலங்களில் நடைபெற்ற போட்டிகளில் அவுஸ்ரேலியா சிறப்பாக விளையாடாததால் அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் நீக்கப்பட்டார். புதிய பயிற்சியாளராக அந்நாட்டின் முன்னாள் வீரர் லீமன் நியமிக்கப்பட்டார். இருப்பினும் ஆர்தர் நீக்கப்பட்டது குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்த வண்ணம் இருந்தன. இந்நிலையில் மிக்கி ஆர்தர் கூறியதாவது: பயிற்சியாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டது மிகுந்த அதிர்ச்சி அளித்தது. இதன்மூலம் கடுமையாக பாதிக்கப்பட்டேன். எனது நீக்கம் குறித்து அணி நிர்வாகத்திடமிருந்து எவ்வித பதிலும் தரப்படவில்லை. அவுஸ்ரேலிய அணியின் மூத்த நிர்வாகிகளை பலமுறை தொடர்பு கொள்ள முயன்றபோதும் பலனில்லை. எனது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் என் மீது அவதூறாக சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர். இருந்தபோதும், அவுஸ்ரேலிய நிர்வாகத்திடம் கண்ணியமான முறையில் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளவே விரும்புகிறேன் என்று தெரிவித்தார்.

## பாடசாலைகளுக்கிடையிலான தேசிய விளையாட்டு

# ஹென்றியரசர் கல்லூரியின் 88 வீரர்கள் தகுதி

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டு இடம்பெறவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட போட்டிகளுக்கு யாழ். இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரியிலிருந்து 88* வீரர்கள் களமிறங்கவுள்ளனர். இது வடமாகாண பாடசாலைகள் வரலாற்றில் அதிக வீரர்களை தேசிய போட்டிகளுக்கு அனுப்பிய முதல் சந்தர்ப்பமாகக் கருதப்படுகின்றது.

மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டி யாழ். இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ளனர்.

இந்நிலையில் இக்கல்லூரியிலிருந்து 15, 17, வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணி, 15, 19 வயதுப் பிரிவு கபடி அணிகள் மற்றும் உடற்பயிற்சி ஆகிய அணிகளுடன் மெய்வல்லுநர் போட்டிகளில் 100, 200, 400 மீற்றர் ஓட்டம், தடைதாண்டல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகளில் 88 வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இது வடமாகாண பாடசாலைகள் வரலாற்றில் அதிக வீரர்களை தேசிய மட்டத்திற்கு அனுப்பிய முதல் கல்லூரி என்ற பெருமையைப் பெற்றுள்ளது. அத்துடன் விளையாட்டில் வீரர்கள் சாதிக்க வேண்டும் என்ற ஊக்குவிப்பை சென். ஹென்றியரசர் கல்லூரி வெளிப்படுத்தி வருவதை சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது என விளையாட்டு விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்லூரியின் ஊக்குவிப்புப் போன்று வீரர்கள் தேசிய மட்டப் போட்டியில் அசத்தி கல்லூரிச் சமூகத்திற்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனவும் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணம் வென்றது யாழ். இந்து

(மானிப்பாய்)

மானிப்பாய் ஏஞ்சல்சர்வதேச பாடசாலையினால் நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். இந்து, ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணிகள் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையினால் யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட 8 பாடசாலைகளின் 15, 17 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்ட போட்டி நடாத்தப்பட்டது. இப்போட்டிகள் மானிப்பாய் ஏஞ்சல்சர்வதேச பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இம்மாதம் மாதம் 1ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் இறுதிப்போட்டி கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

15 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை புளு அணி மோதியது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை புளு அணி சம்பியனாகியது. 17 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. இப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது. 15 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் தொடர் நாயகனாக ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை புளு அணியினைச் சேர்ந்த வை.சிம்றோன், 17 வயதுப்பிரிவன் தொடர் நாயகனாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் எஸ்.உதயா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# கிண்ணம் வென்றது ஆவரங்கால் இந்து இளைஞர்

(அரியாலை)


அரியாலை சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றிக் கொண்டது.

அரியாலை சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை நடாத்தியது.

அரியாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குகொண்டபோதும், இதன் இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், புத்தூர் கலைமதி அணியும் தகுதி பெற்றன.

கடந்த வாரம் மின்னொளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இரு அணிகளும் முதல் செட்டைக் கைப்பற்றிக் கொள்ள கடும் தீரத்துடன் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் செட்டில் ஆவரங்கால் இந்துஇளைஞர் அணி 33-31 என்ற கணக்கில்வெற்றி பெற்று முன்னிலை வகித்தது. தொடர்ந்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

(93)



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கராத்தேப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்ட முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி வீராங்கனைகளான மாதங்கி, சரோஜினி, வகீசா ஆகியோரைக் காணலாம்.எதிர்வரும் செப்ரெம்பர்மாதம்நடைபெறவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கராத்தேப் போட்டிக்குத் மேற்படி வீரர்கள் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## ஸ்ரான்லியை வீழ்த்திய யூனியன்ஸ்

(மானிப்பாய்)

தெல்லிப்பளை யூனியன்ஸ் அணிக்கெதிரான ருவெனரி-20 கிரிக்கெட் போட்டி ஒன்றில் ஸ்ரான்லி அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

பாலகிருஸ்ணன் ஞாபகார்த்த மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் ருவெனரி-20 கிரிக்கெட் தொடரை நடாத்தி வருகின்றது.

இப்போட்டிகள் சனி, ஞாயிறு தினங்களில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டி ஒன்றில் தெல்லிப்பளை யூனியன்ஸ் அணியும், ஸ்ரான்லி அணியும் மோதின.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லி அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப்பெற்றது. இதில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை.

பதிலுக்கு 74 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யூனியன்ஸ் அணி 4.3 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது.

லீக் முறையில் நடாத்தப்பட்டுவரும் இப்போட்டித் தொடரில் புள்ளிகள் அடிப்படையில் அடுத்த சுற்றுக்கு அணிகள் தெரிவு இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டளார்கள் தெரிவித்துள்ளனர்.

# கமில்ரன், டினோஜன் அதிரடிச் சதம்

# யாழ். மத்திய கல்லூரி வெற்றி





(யாழ்ப்பாணம்)

கமில்ரன், டினோஜன் ஆகியோரின் அபாரமான சதத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி பெரு வெற்றிபெற்றது.

இலங்கை பாடசர்லைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டமொன்று கடந்த வாரம் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தி்பாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி கமில்ரன், டினோஜன் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 396 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டினோஜன் ஆட்டமிழக்காது 143, கமில்ரன் 123, நிக்ஷன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


பதிலுக்கு 398 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி, யாழ். மத்திய கல்லூரி அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 39.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் பிரசாந்த் மட்டும் 23 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் நிசாந் மூன்று, செந்தூரன், கௌதமன், தசோபன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதேவேளை, முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இரண்டாம் தவணை விடுமுறையின் போது ஆரம்பிக்கப்பட உள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இதில் யாழ். மத்திய கல்லூரி அணி பங்குபற்றி முதல் சுற்று ஆட்டங்களில் தோல்வியைத் தழுவிக்கொள்ளாத அணி என்ற சிறப்பைப் பெற்றுள்ளதுடன், இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

# தீதும் நன்றும் பிறர் தர வாரா!

- எஸ்.எம்.எம். பஷீர் கட்டுரையிலிருந்து.



நீதியரசர் விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவுசெய்ததன் மூலம் தனது வாரிசாக வர வரிந்து கட்டிக் கொண்டிருக்கும் மாவை சேனாதிராஜாவுக்கு சம்பந்தன் சரியான ஆப்பு வைத்துவிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றப்போவதில்லை என்று முடிவெடுத்தவுடன் அதனை பாராட்டியவர் விக்னேஸ்வரன் அவர்கள் என்பதும் சென்ற ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் சரத் டி சில்வா வெளிப்படையாகவே சரத் பொன்சேகாவை ஆதரித்தார். அதேவேளை திரு விக்னேஸ்வரன் தனது அரசியல் ஆர்வத்தால் உந்தப்பெற்று தனது கருத்துக்களையும் சூட்சுமமாக வெளியிட்டார். இப்பொழுது அதனை மீட்டுப் பார்த்தால், "இத்தேர்தலில் சிறுபான்மையினரும் பெரும்பான்மை இனமக்களும் தோளோடு தோள்நின்று சேர்ந்து இனத்துவேஷத்தை அழிக்க வேண்டும். ஊழலை ஒழிக்கவேண்டும். சட்டத்துக்கு உட்பட்ட நிர்வாக செயற்பாட்டு முறையை அறிமுகம் செய்ய ஒத்துழைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டதன் மூலம் அவரின் மானசீக ஆதரவு பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்த பொன்சேகாவையா அல்லது அதற்கு எதிராக ராஜபக்ஷவையா ஆதரிக்கச் சொல்கிறார் என்பது ஒரு புதிராகவே இருந்தது. ஒரு உன்னத மான இலங்கையை எதிர்பார்க்கும் அவரின்கனவாக அவரின் கருத்துக்கள் அமைந்திருந்தாலும் போட்டியிட்டவர்களில் வெற்றியீட்டக் கூடிய வேட்பாளர்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட இருவரில் யாரை குறிப்பிடுகிறார் என்பதை அவர் வெளிப்படையாகக் குறிப்பிட வில்லை. இனிமேல் தாராளமாக தனது அரசியல் கருத்துக்களை சூட்சுமமின்றி குறிப்பிடலாம் அதற்கான சந்தர்ப்பத்தை இந்த கூட்டமைப்பு இணைப்பு அவருக்கு வழங்கியிருக்கிறது.

தீவிர தமிழ்த் தேசியவாதம், அதனை மெருகூட்டும் சிங்கள எதிர்ப்பு (இன) வாதம் என்பன சில வேளைகளில் பல தமிழ் புத்திஜீவி களையும் ஆட் கொண்டிருக்கிறது. சில வேளைகளில் அவர்கள் தமிழ்த் தேசியக் கோட்பாட்டு இறுக்கம் கொண்ட அரசியல்வாதிகளை விடவும் தீவிரமாக இருக்கிறார்கள். இந்த அரசியல் சிந்தனை தளத்தில் கருத் துரைக்கும் புத்திஜீவிகளில் ஒருவராக திரு விக்னேஸ்வரன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டாரா என்ற கேள்வியை அவரின் பின்வரும் கருத்து எழுப்புகிறது.

24.06.2010இல் யாழ். நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வொன் றில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் நீதியரசர் திரு விக்னேஸ்வரன் அவர்கள் "தெற்கிலிருந்து வரைவின் மகளிர்கள் கொண்டுவரப்பட்டு எமது இளைஞர் களுக்கு வலை விரிப்பதாகவும் கேள்விப்பட்டேன்" என்று கூறிய கருத்தே சமூக நல்லிணக்கச் செயற்பாட்டாளர்கள் பலரின் கண்டனத்துக்குள்ளானது. ஒரு முன்னாள் நீதியரசர் ஆதாரமற்ற இனவாத கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார் என்று ஒரு கண்டன அறிக்கை யொன்றினை யாழ். ஆய்வறிவாளர் அணியம் வெளியிட்டது (அறிக்கையைப் பார்வையிட: http://www.thenee.com/html/070710.html)

திரு விக்னேஸ்வரன் அவர்களின் தெரிவு குறித்து மாவை சேனாதிராஜா மிகுந்த ஏமாற்றம் அடைந்திருக்கிறார், ஆயினும் பிரேமச்சந்திரன் எங்களுக் குள் எவ்வித பிளவும் இல்லை என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப்பார்க்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேந்திரன் மாவையை விட புலி பக்தி கூடியவர். பிரபாகரனைப் புஷிப்பவர். முஸ்லிம் சிங்கள மக்கள் மீது இனவாதக் கருத்துக்களை அள்ளி வீசும் தீவிர தமிழ்த் தேசியவாதி. அவருக்கு மாவை தெரிவு செய்யப் படாதது மிகுந்த ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. எனவேதான் அவர் திரு விக்னேஸ்வர னின் நியமனம் குறித்து குறிப்பிடுகையில்,

"விக்னேஸ்வரன் ஐயாவுக்கு வடக்கில் நல்லூர் கந்தன் ஆலயம் மட்டும்தான் தெரியும். ஆனால், மாவை அண்ணனுக்கு வடக்கு, கிழக்கின் மூலைமுடுக்கெல்லாம் தெரியும். எனவே, தமிழ்த் தேசியத்திற்காக அயராது பணியாற்றி வருபவரும், தமிழ்ச் சமூகத்தால் அதிகம் விரும்பப் படுபவருமான மாவை சேனாதிராஜா வை வட மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கக் கூட்டமைப்பின் தலைமை முடிவெடுக்கவேண்டும்." என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனவாத விசத்தை கக்குவதில் முதலிடத்தை வகிக்கும் அரசியல்வாதி, பா.அரியநேந்திரன் ஆகும், ஒரு படி மேலே சென்று தனது காலங்கடந்த கவைக்குதவாத பிற்போக்குத்தனமான தமிழ் இனவாதக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

"விக்னேஸ்வரன், சிறந்த நீதியர-சராக இருந்துள்ளார். அதேவேளை, அவர் ஆன்மீகவாதியாகவும் உள்ளார். அவரை நான் மதிக்கின்றேன். ஆனால், அவரின் குடும்ப சூழ்நிலை கேள்விக்குறியாகவுள்ளது. அவரின் குடும்பம் சிங்களப் பேரினவாதத்தோடு இரண்டறக் கலந்துள்ளது. அதாவது அவரின் இரு பிள்ளைகளும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களையே திருமணம் செய்துள்ளார்கள். இதனால்தான் அவரின் குடும்பம் மீது எனக்கு மட்டுமல்ல தமிழ்ச் சமூகத்திற்கே சந்தேகம் எழுந்துள்ளது. அம்பாறையில் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனாவுக்கு நிகழ்ந்த சம்பவம் விக்னேஸ்வரனுக்கும் ஏற்படக்கூடும். தாய் வழி மூலம் சிங்களப் பேரினவாதத்தோடு கலந்திருந்த பியசேன, இறுதியில் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான பின்னர் அரசால் மூளைச்சலவை செய்யப்பட்டு மாற்றப்பட்டார். இதே நிலைமை விக்னேஸ்வரனுக்கும் வராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?" என்று கேள்வியும் எழுப்பி உள்ளார்.

பியசேனா சிங்களக் கலப்புக் (தாய் வழி) கொண்டவர், அவரைப்போல் தனது பிள்ளைகளை சிங்களப் பெண்களுக்கு மணம் செய்து கொடுத்ததனால், மாமனார் விக்னேஸ்வரன் மூளைச் சலவை செய்யப்பட்டு கட்சி மாறி விடுவார் என்று இனவாத சிறு மூளை மூலம் சம்பந்தமில்லாமல் கருத்துச் சுய சலவை செய்திருக்கிறார் அரியநேந்திரன். அது மட்டுமல்ல புலிகளின் முன்னாள் "பொலிஸ் மா அதிபர்" பா. நடேசன் சிங்களப் பெண்ணையே மணந்திருந்தார் (அன்ரன் பாலசிங்கத்தை இங்கு விட்டு விடுவோம்), புலிப் புகழ் அன்றும் இன்றும் பாடும் அரியநேந்திரனின் மூளைக்குள் நடேசன் பற்றிய கேள்வி எழவேயில்லை.

அந்தக் காலத்தில் நான் இடதுசாரிப் போக்குக் கொண்டவன். சமஷ்டிக் கட்சியை அவ்வளவு விரும்பாதவன். சமஷ்டிக் கட்சி என்று பெயர் வைக்காது தமிழரசுக் கட்சி என்று பெயர் வைத்ததே ஒரு ஏமாற்று வித்தை என்ற கருத்தில் இருந்தவன் என்று தன்னைப் பற்றி முன்னொரு தடவை குறிப்பிட்ட திரு விக்னேஸ்வரன், அவர்கள் பின்னாளில் சாயி பக்தனாக, இராம பக்தனாக மத ரீதியில் தன்னை மாற்றிக் கொண்டவர். தமிழரசுக் கட்சி தமிழர்களின் தனி ஆட்சி குறித்து - பிரிவினை குறித்து - சமஷ்டி என்ற பெயர் வைக்காமல் தமிழரசுக் கட்சி என்று பெயர் வைத்ததே ஒரு ஏமாற்று வித்தை என்று குறிப்பிட்டவர் பின்னாளில் அக்கருத்தினை மாற்றி இன்று இலங்கை தமிழரசுக் கட்சியின் முதலமைச்சராகப் போட்டியிடுகிறார். அக்கட்சியைக் காக்க பிரதிக்கினை எடுத்துள்ளார்.

எப்படியோ தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தமது கட்சிக்குள் நீண்ட கால அங்கத்தவர்களை இரத்தம் சிந்திய போராளிகளை, பணம் படைத்த செல்வாக்கு தேடும் பிரபலங்களை எல்லாம் ஓரம் தள்ளிவிட்டு அவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

# பார்வையின்றி பார் புகழ உயர்ந்தவர்!




உலகப் புகழ்பெற்ற பாடகர், இசையமைப்பாளர், பாடலாசிரியர் என்று பல சிறப்புகளைப் பெற்றவர் ரே சார்ள்ஸ். இவரது பாடல்கள் கேட்போர் உள்ளத்தை உருக்கக்கூடியவை. கேட்போரின் மனச்சாட்சியைத் தூண்டும் பாடல்கள். ஆத்மாவைத் தொடும் பாடல்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் புகழ்பெற்று விளங்கியவர். பொப், ஜாஸ், றொக் என்று மேலைநாடுகளின் இசையில் எல்லாப் பிரிவுகளிலும் பாடி உலகம் முழுவதும் கோடிக்கணக்கான இரசிகர்களைப் பெற்றவர். இசைத் துறையின் உயரிய விருதாகக் கருதப்படும் "கிராமி" விருதைப் பன்னிரண்டு முறைகள் பெற்றவர்.

மேடையில் இவர் தோன்றி பியானோ வாசித்துக் கொண்டே பாடும்போது, நிகழ்ச்சியைக் காண்போர் ஆனந்தக்கண்ணீர் விடுவர். மகிழ்ச்சியுடன் தாளம் போடுவர். ரே சார்ள்ஸ் மேடையில் பாடும்போதும், எப்பொழுதும் கறுப்புக் கண்ணாடி அணிந்தே காட்சியளிப்பார். காரணம், முற்றிலும் கண் பார்வை இழந்தவர் ரே சார்ள்ஸ். பியானோ இசைப்பதற்கோ, இதர இசைக் கருவிகளை வாசிப்பதற்கோ இவருடைய பார்வையற்ற தன்மை தடையாகவோ, குறையாகவோ ஒருபோதும் இருந்ததில்லை. இவருடைய செவிகள் மிகவும் கூர்மையானவை.

ஏராளமான இசைக் கலைஞர்கள் பங்குகொண்டு பல்வேறு இசைக் கருவிகளை வாசிக்கும்போதுகூட, எங்கேயாவது யாராவது சுருதி பிசகி வாசித்தால் அதனைக் கண்டுபிடித்து சரி செய்யும் மிகக் கூர்மையான கவனிப்பும் தேர்ந்த இசை ஞானமும் பெற்ற மேதையாக இருந்தார்.

ஆபிரிக்க-அமெரிக்கப் பிரிவினைச் சேர்ந்தவர். 1930இல் பிறந்தார். நடுத்தரக் குடும்பம். மோசமாக நிறவேற்றுமை தலைவிரித்தாடிய காலகட்டம். ஏழாவது வயதில் கண்பார்வையை இழந்தார். பிரெய்ல் முறையில் பாடங்களையும் இசை வடிவங்களையும் எழுதும் முறைகளைக் கற்றுக்கொண்டார்.

இவர் இசைத் தட்டுகளுக்காகப் பாட ஆரம்பித்தபோது, புகழ் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. இசைத்தட்டுகள் லட்சக் கணக்கில் விற்பனையாகின. அமெரிக்க அரசு பல விருதுகளை வழங்கி கௌரவப்படுத்தியது. தன் இனத்தைச் சேர்ந்த மக்களின் உரிமைக்காகவும் உயர்விற்காகவும் குரல் கொடுத்தார். காது கேளாதவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு தொண்டு நிறுவனம் தொடங்கி நடத்தினார். 10-06-2004-இல் காலமானார்.

உலகம் முழுவதும் பரந்து காணப்படும் இவருடைய ரசிகர்கள், இவரது பாடல்களை இன்றளவும் பதிவு செய்து வைத்து, கேட்டு, ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பார்வையற்றவர் என்ற குறைபாடு அவரது முன்னேற்றத்துக்கோ புகழுக்கோ தடையாக ஒருபோதும் இருக்கவில்லை.

# முடிப் பிரச்சினை

- டாக்டர் ரேணுகா

இளம் வயதினராகட்டும், ஐம்பதைக் கடந்துவிட்ட முதியவர்களாகட்டும், எல்லாருக்கும் தலையைப் பிய்த்துக் கொள்ளும் பிரச்சினை முடிப் பிரச்சினைதான். முடி உதிர்வது, இளநரை போன்றவற்றுக்கான காரணங்களைச் சரியாகக் கண்டறிந்து, சிகிச்சை செய்தால் அவற்றைத் தீர்க்க முடியும்.

மன அழுத்தமும் முடி உதிர்வதற்கு முக்கியமான காரணமாக இருக்கிறது. விற்றமின் பற்றாக்குறையாலும் முடி கொட்டும். பயோட்டின் எனப்படும் விற்றமின் ஏ குறைவால், முடி உதிரும். இரும்புச் சத்து குறைந்தால் முடி கொட்டும். கனியுப்புகள், புரதச் சத்து குறைந்தாலும் அதிக அளவில் முடி உதிரும்.

இரவு நேரத்தில் வேலை செய்வது இப்போது சாதாரணமாகிவிட்டது. இரவில் வேலை செய்து பகலில் தூங்குவதால் உடலின் பணிகள் பாதிக்கப்படுகின்றன. வளர்சிதை மாற்றம் முறையாக நடைபெறுவதில்லை. இதனாலும் முடி கொட்டும்.

இளம் வயதினர் தலைக்கு எண்ணெய் தேய்த்துக் கொள்வதில்லை. இதனாலும் முடி கொட்டுகிறது. தலைமுடியில் உள்ள அழுக்கைப் போக்க, நிறைய ஷாம்புகளை இப்போது பயன்படுத்துகிறார்கள். விளம்பரங்களைப் பார்த்து ஷாம்புகளை அடிக்கடி மாற்றுகிறார்கள். ஷாம்புகள் இரசாயனப் பொருட்களால் செய்யப்படுபவை. அவற்றைப் பயன்படுத்துவதால் முடி கொட்டும்.

சிலர் உடம்புக்குப் போட வேண்டிய சோப்பை, தலைக்குப் போடுகிறார்கள். இதனாலும் தலையில் முடி கொட்டும்.

ஓமோன் பிரச்னைகள் - உதாரணமாக தைரோய்ட் பிரச்சினையால் முடி கொட்டும். இரும்புச் சத்துக் குறைவால் ஏற்படும் இரத்தசோகையாலும் முடி கொட்டும். ஆனால் முடி கொட்டுவது என்பது இயல்பானது. தினம்தோறும் நமக்கு 50 இலிருந்து 100 முடிகள் தலையிலிருந்து உதிர்கின்றன. அந்த இடத்தில் புது முடிகள் முளைக்கின்றன. குளிக்கும்போது இரண்டு தலை முடிகள் உதிர்வதைப் பார்த்து டென்ஷனாகி, முடி கொட்டுகிறது என்று பயந்தால், அதனால் அதிக அளவில் முடி கொட்ட வாய்ப்புண்டு.



அதிக அளவில் முடி உதிரும் பிரச்னைக்கு மருந்து, மாத்திரை, லோஷன், ஷாம்பு - தேவைப்பட்டால் முடி கொட்டிய இடத்தில் ஊசி போடுவது போன்ற சிகிச்சைகள் உள்ளன. மருந்து, மாத்திரை, லோஷன், ஷாம்பு ஆகியவற்றால் சரியாகவில்லையென்றால்தான் ஊசி போடும் சிகிச்சையைச் செய்ய வேண்டும். சிகிச்சை செய்யும்போதும் சரி, செய்த பிறகும் சரி முடி கொட்டும் பிரச்சினையைத் தீர்க்க நல்ல சத்துள்ள உணவுகளை நாம் தொடர்ந்து உண்ண வேண்டும். சத்துப் பற்றாக் குறையால் ஏற்படும் முடி கொட்டும் பிரச்சினையை வெறும் மருந்து, மாத்திரை, ஊசி, லோஷன், ஷாம்புவால் மட்டும் குணப்படுத்திவிட முடியாது.

இவை தவிர, முடி கொட்டுவதற்கு பரம்பரையும் காரணமாக உள்ளது. அதைச் சரி செய்வது கடினம். எனவே அதற்கு முடியை தலையில் நடும் சிகிச்சை உள்ளது. தலையின் பின்பகுதியில் உள்ள முடியை எடுத்து, முடியில்லாத இடத்தில் அறுவைச் சிகிச்சையின் மூலம் நட்டு வைப்பதுதான் இந்த சிகிச்சை. அதுபோல உளவியல் காரணங்களால் சிலருக்கு முடி கொட்டும். அதற்குரிய உளவியல் மருத்துவத்தைச் செய்து அந்த முடி கொட்டுதலைச் சரி செய்ய முடியும்.

சமீபத்தில் காதுக்கு அருகே தலையில் முடி கொட்டுவது அதிகமாக உள்ளது. செல் போனை அதிக அளவில் பயன்படுத்துவதால் அதில் ஏற்படும் கதிர்வீச்சால் முடி கொட்ட வாய்ப்புண்டு என்று கூறுகிறார்கள். எனவே செல் போனில் நீண்ட நேரம் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

---


# வேலை!

ஹிட்லரின் படைகள் செய்த அட்டூழியங்களை ஓவியமாகத் தீட்டியிருந்தார் பிரபல ஓவியர் பிகாஸோ. இதையறிந்த ஹிட்லரின் தளபதி ஒருவர் கடும் கோபமடைந்தார்.

பிகாஸோவிடம் அந்த ஓவியத்தைக் காட்டி, "இது நீ செய்த வேலைதானே?" என்று சீறினார்.

அதற்கு, பிகாஸோ அமைதியாக, "இல்லையில்லை.... எல்லாம் நீங்கள் செய்த வேலை..." என்றார்.

தளபதி கேட்டது ஓவியத்தைப் பற்றி. பிகாஸோ சொன்னது ஓவியம் சித்திரித்திருந்த சம்பவங்களைப் பற்றி..!



---

# எது சிறந்தது



இரண்டு பொருள்களை ஒப்பிட்டு, அவற்றில் ஒரு பொருளைச் சிறந்தது என்று சொன்னால், மற்றொரு பொருள் மோசமானதா? நிச்சயமாக இல்லை. சிறந்ததைத் தெரிந்து கொள்ளுங்கள். பயன்படுத்துங்கள். உணவுப் பொருட்களுக்கு ஒரு பட்டிமன்றம் வைத்துப் பார்க்கலாமா:

**கீரையா? அவரையா?:**

கீரையில் விற்றமின் "சி", செலுலோஸ் ஆகியவை உள்ளன. அவரையில் அதோடு கூட விற்றமின் பி1, பி2 ஆகியவையும் உள்ளன. விற்றமின் பி1 மற்றும் பி2 உணவு நன்கு செரிப்பதற்கும், தசைகளின் பலத்துக்கும் மிகவும் அவசியம். கீரையை விட அதிக நன்மைகளை அவரை தருவதால், கீரையைக் காட்டிலும் அவரையே மேல்

**பாலா, மோரா?:**

நரம்பு மண்டலம் உறுதியாக இருப்பதற்கு, இதயம், இதயத் தசைகள் வலுப்பெறுவதற்கு, உயர் இரத்த அளவைக் குறைப்பதற்கு கல்சியம் உதவுகிறது. கல்சியம் பாலில் உள்ளது. பாலில் மட்டுமின்றி, பால் சார்ந்த எல்லாப் பொருட்களிலும் கல்சியம் உள்ளது. பாலிலும் உள்ளது. மோரிலும் உள்ளது. பாலைப் புளிக்க வைத்து மோராக மாற்றுகிறபோது, ஈஸ்ட் உருவாகிறது. இந்த ஈஸ்ட் செரிப்பதை மிகவும் எளிதாக்குகிறது. எனவே பாலைக் காட்டிலும் மோரே சிறந்தது. பால் சீரணமாவதைவிட மோர் எளிதில் செரித்துவிடும் அல்லவா?

**பயறா? பருப்பா?:**

பருப்பு சாப்பிட்டு வாயுக்கோளாறுடன் அவதிப்படுபவர்களைப் பார்த்திருப்பீர்கள். சீரணமாவதும் மந்தமாகும். ஆனால் பயறு சாப்பிட்டால் இந்தப் பிரச்சினைகள் வருவதில்லை. முளைகட்டிய பயறு மிக மிகச் சிறந்தது. பயறில் இருக்கக் கூடிய காபோவைதரேற் முளை கட்டிய பின்னர் மோல்டோஸாக மாறுவதால் "பி"கூட்டு விற்றமின்களின் கூட்டாளியாக மாறுகிறது. எனவே பயறுதான் சிறந்தது. பூச்சிகள் பயறைத்தான் குடைகின்றன. எங்காவது பருப்பை பூச்சிகள் தின்பதைப் பார்த்திருக்கிறீர்களா?

**எள்ளா? எண்ணெய்யா?:**

எள், கடலை, தேங்காய் இவற்றில் இருந்து நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவை எடுக்கப்படுகின்றன. என்றாலும் இந்த எண்ணெய்களைவிட எள், கடலை, தேங்காய் போன்றவையே சிறந்தவை. எப்படி என்கிறீர்களா? இந்த எண்ணெய்களில் விற்றமின் "சி" இல்லை. காபோவைதரேற் இல்லை. ஆனால் எள், கடலை, தேங்காய் ஆகியவற்றில் இவை உள்ளன. சிறந்தது எது என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.





**கிழங்கா? வாழைப் பழமா?:**

காபோவைதரேற் உண்ண நினைப்பவர்கள் கிழங்கும் சாப்பிடலாம். வாழைப்பழமும் சாப்பிடலாம். ஆனால் கிழங்கைக் காட்டிலும், வாழைப்பழமே சிறந்தது. கிழங்கை வேக வைப்பதால், விற்றமின் "சி" அழிந்து போகிறது. கிழங் கில் உள்ள ஸ்டார்ச் கடினமானது. வாழைப்பழத்தில் இருக்கும் குளுகோஸ் மென்மையானது. உயர்ந்தது. வாழைப்பழத்துக்கே வாக்களியுங்கள்!

**சாறா? சக்கையா?:**

சாறுடன் சக்கையையும் சேர்த்தே உண்ணுங்கள். சக்கை நார்ப்பொருள். நீரை ஈர்த்துக் கொண்டு மலத்தைக் கெட்டிப்படாமல் வைத்திருக்க நார்ப்பொருள் உதவுகிறது. எனவே சக்கையைத் துப்பிவிட்டு சாறை மட்டும் உண்ணாதீர்கள். சாறுடன் சக்கையைச் சேர்த்து உண்பதே மிகவும் சிறந்தது.

**வெந்நீரா? தண்ணீரா?:**

வெந்நீரில் குளிப்பதைவிட தண்ணீரில் குளிப்பது மிகவும் நல்லது. தண்ணீரில் குளித்தால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு உண்டாகும். நிச்சயமாகச் சளிப் பிடிக்காது. குளிப்பதற்கு தண்ணீரே சிறந்தது. குடிப்பதற்கு வேண்டுமானால் வெந்நீரைப் பயன்படுத்தலாம். அதுவும் காய்ச்சி ஆற வைக்கப்பட்ட வெந்நீரைத்தான் பயன்படுத்த வேண்டும்.

**வெந்த உணவா? பழங்களா?:**

வேக வைக்கப்பட்ட உணவுகளாகிய சோறு, குழம்பு, சிற்றுண்டி வகைகள், இனிப்புகள், காரங்கள் எல்லாவற்றையும்விட பச்சைக் காய்கறிகள், பழங்களை மூன்று வேளைகளும் சாப்பிடுவது நல்லது. அப்படிச் சாப்பிட்டால் அதிகப்படியான உடல் எடை குறையும். தொந்தி கரையும். உடம்பில் ஒரு மினுமினுப்பு ஏற்படும். உடம்பில் உள்ள நோய்கள் விடைபெற்றுக் கொள்ளும். இப்படி ஒரு மாதம் தொடர்ந்து சாப்பிடலாம். அதற்குப் பிறகு 33 நாட்கள் காலையிலும் இரவிலும் பழங்களைச் சாப்பிடலாம். மதியம் சோற்றுடன் கீரையைக் கடைந்து, நல்லெண்ணெய் பிசைந்து சாப்பிடுங்கள். தேநீர், கோப்பியை ஓரங்கட்டுங்கள். பிணிகள் உங்கள் உடம்பை விட்டு ஓடிப் போய்விடும்.

# நெடுந்தீவில் அமைச்சர் டக்ளஸ்



மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நெடுந்தீவிற்கு சென்றுள்ளார்.

நெடுந்தீவிற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்களை நெடுந்தீவு துறைமுகத்தில் வைத்து ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன், நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி, நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் (ரஜீவ்) ஆகியோர் வரவேற்றனர்

இந்த மூன்று நாள் விஜயத்தின் போது பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் அமைச்சர் அவர்கள், பல்வேறு சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

## மக்கள் சபை பிரதிநிதிகளுடன் சந்திப்பு

நெடுந்தீவு மக்களது அடிப்படை உள்ளிட்ட ஏனைய தேவைகள் தொடர்பிலான பிரச்சினைகளை ஆராய்ந்தறியும் மக்கள்சபை பிரதிநிதிகளுடனான சந்திப்பு நடைபெற்றுள்ளது. இச்சந்திப்பு நெடுந்தீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.இதன்போது வீதிப்புனரமைப்பு, மின்சாரம், குடிநீர், போக்குவரத்து, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இரணைமடுவிலிருந்து குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் காலதாமதமாகும் எனவும் இந்நிலையில் கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென்றும் அத்துடன் சூரிய மின்கலத்தின் ஊடாக மின்சாரத்தைப் பெற்றுகொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.



அத்துடன் பேரீச்சம்பழ செய்கையை மேற்கொள்வது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது. இதில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன், நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி, நெடுந்தீவு பிரதேச சபைத்தவிசாளர் தானியேல் றெக்சியன் (ரஜீவ்) ஆகியோர் உடனிருந்தனர்.

## கடற்றொழிலாளர் கலந்துரையாடல்



நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

மேற்படி சந்திப்பு நேற்று முன்தினம் நெடுந்தீவில் இடம்பெற்றது.இக்கலந்துரையாடலில் இந்திய கடற்றொழிலாளர் தாம் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் தொடர்பாக எடுத்து விளக்கிய கடற்றொழிலாளர்கள் இவ்விடயத்தில் உரிய நடவடிக்கையினை பெற்றுத் தருமாறும் அமைச்சர் அவர்களுடன் கோரிக்கை விடுத்தனர்.குறிப்பாக எரிபொருள் மானியம், தொழில் உபகரணங்களை பெற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட கோரிக்கைகளினை முன்வைத்தனர்.இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேற்படி விடயம் தொடர்பாக துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார். அத்துடன் தீவகத்தின் அபிவிருத்தி மேம்பாட்டுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் நெடுந்தீவிற்கென ஒதுக்கப்பட்ட 100 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.இதன்போது ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன், நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி, நெடுந்தீவு பிரதேசசபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் (ரஜீவ்) ஆகியோர் உடனிருந்தனர்.

# விபசார நிலையம் முற்றுகை

நுகேகொடையில் கந்தவத்த வீதியில் விபசார நிலையமொன்றை நடத்திவந்ததாகக் கூறப்படும் இவ்விபசார நிலையத்தின் முகாமையாளர் உட்பட 7பேரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆயுர்வேத வைத்திய நிலையமாக இயங்கி வந்ததாகக் கூறப்படும் விபசாரநிலையமே கடந்த சனிக்கிழமை இவ்வாறு முற்றுகையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 23 ,49 வயதுடைய பெண்களே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மஹரகம, பிட்டகோட்டே, தொடங் ஹாயாய, ஹோமாகம,கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

# எனது குற்றத்தை நிருபித்தால் இராஜினாமா செய்யத்தயார்



"நான் குற்றம் இழைத்தவன் என்று கட்சி மட்டத்தில் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் நிருபிக்கப்படுமானால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களனி தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியை இராஜனாமா செய்வேன்" என பொது மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் அமைந்துள்ள விஸ்ணு ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டபின் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்."சில நாடோடி அரிசியல் வாதிகளை போன்று மற்றுமொரு தேர்தல் தொகுதியை நான்பொறுப்பேற்க தயாரில்லை" என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்."களனி எனது உயிரை போன்றது. நான் தத்தெடுத்த குழந்தையின் கையில் அதனை கொடுப்பதற்கு தயாரில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மீன்பிடித் தொழிலில் மந்தநிலை

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல வாரங்களாக மீன்பிடித் தொழிலில் பாரிய மந்த நிலை ஏற்பட்டுள்ளமையினால் மீனவக் குடும்பங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

காலநிலை மாற்றம் காரணமாக கடலில் காற்று வீசி வருகின்ற நிலையில் மீன்பிடி குறைவாக காணப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். மீனவர்கள் அதிகளவான எரிபொருட்களை பயன்படுத்தி தொழிலுக்குச் செல்கின்ற போதும், எரிபொருட்களுக்கு செலவிடுகின்ற பணத்தைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் தாம் உள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் மன்னாரில் கடல் உணவுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, கடல் உணவுகளின் விலையும் மன்னாரில் தற்போது அதிகரித்துள்ளது.

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்திய பெண்கள் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து நான்கு கிலோ கிராம் தங்கக் கட்டிகளை கடத்திச் சென்ற மூன்று பெண்கள் உள்ளிட்ட நான்கு பேரை இந்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் சென்னை விமான நிலையத்தில் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து பயணித்த விமானத்தில் சென்னைக்கு தங்கம் கடத்திவரப்படுவதாக இந்திய மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகளுக்கு இரகசியத்தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இதையடுத்து அதிகாரிகள் அதிகாலை சென்னை விமான நிலையத்திற்கு வந்து இரகசிய சோதனையில் இறங்கினர். கொழும்பில் இருந்து அதிகாலை சென்னைக்கு சென்ற விமானம் தரையிறங்கியவுடன், விமானத்தின் உள்ளே சென்ற வருவாய்த்துறை அதிகாரிகள், பயணிகளிடம் சோதனை செய்தனர்.

அப்போது முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்த புதுக்கோட்டையைச் சேர்ந்த பார்வதி, அமராவதி, சென்னை பெருங்கள்த்தூரைச் சேர்ந்த ஜெயமணி, ஆகிய மூன்று பெண்களையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெய்சங்கர் என்பவரையும் தனியறைக்கு அழைத்துச் சென்று சோதனையிட்டனர்.

அவர்களது உடைகளில் இருந்த இரகசிய அறைகளில் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கக்கட்டிகள் இருப்பது தெரியவந்தது. அவர்களிடமிருந்து மொத்தம் நான்கு கிலோ தங்கக்கட்டிகள் கைப்பற்றப்பட்டதாக இந்திய வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நான்கு பேரும் தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

# ஆளும்கட்சியை பிளவுபடுத்த பொது பலசேனா முயற்சி


(கொழும்பு)

இனமத பேதங்களை ஏற்படுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தை பிளவுபடுத்துவதற்கு சில சமய அமைப்புகள் நடவடிக்கை எடுத்து வருவதாக உயர்கல்வியமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மினிபே பிரதேசத்தில் நேற் று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர், பொது பல சேனா அமைப்பின் பிரதான செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் கருத்துகளுக்கு பதிலளிக்கும் முக மான இந்த நிலைப்பாட்டை வெளி யிட்டார்.

ஞானசார தேரர் அண்மையில குருணாகலையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரை யாற்றும் போது, உயர்கல்வியமைச்சர் நாட்டின் க்ல்வித்துறையை நாசப்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தியிருந்தார்.

இவ்வாறான கருத்தை அவர் வெளியிட்டமையை கண்டித்துள்ள உயர்கல்வியமைச்சர், குறித்த தேரரின் அண்மைக் கால இனவாத நடவடிக்கைகளையும விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளார்.



துணுக்காயில் புதிதாக அமைக்கப்பட்டு திறப்பு விழாவிற்கு தயாராகவிருக்கும் பிரதேச செயலகத்தினைக் காணலாம். (ர)

# வாக்காளர் பதிவுக்கான விழிப்பூட்டல்

# தெருவெளி நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் பதிவுக்கான விழிப்பூட்டல் என்னும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் கியூடெக் - கரித்தாஸ் நிறுனத்தினால் நடாத்தப்பட்ட தெருவெளி நாடகப்போட்டியில் புத்தாக்க அரங்க இயக்கத்தினால் (ஐ.ரி.எம்) ஆற்றுகை செய்யப்பட்ட “வாழ்வதற்கு அவசியம்” என்னும் தெருவெளி நாடகம் முதலாமிடத்தினைப்பெற்றுக்கொண்டுள்ளது.

வாக்காளர்களாக பதிவு செய்யப்படவேண்டியதன் அவசியத்தினையும் வாக்களிப்பு முறைமையினையும் வாக்களிப்பின் அவசியத்தினையும் மக்களிடத்தில் ஏற்படுத்தும் நோக்கில் கரித்தாஸ் நிறுவனத்தினால் திறந்த் போட்டிப்பிரிவாக நாவாந்துறை சென். நீக்கலஸ் சனசமூக நிலைய முன்றலில் நடாத்தப்பட்ட மேற்படி போட்டியில் இந்நாடகம் முதலாமிடத்தினைப் பெற்றுள்ளது.

இத் தெருவெளி நாடகத்திற்கான நெறியாள்கையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமான எஸ்.ரி.குமரன், புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரியின்



நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். ஆற்றுகையாளர்களாக த.துவாரகன் த.பிரவீன் பா.தாருஷன் கு.தவேன்சன் த.பிரியலக்ஷன் உ.கரீஸ் ஆகியோர் நடித்திருந்தார்கள். ஒப்பனையினை இ.பகீதரன் மேற்கொண்டிருந்தார். இத் தெருவெளி நாடகமானது கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் பல்வேறு பிரதேசங் களில் ஆற்றுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உரிமை கோரப்படாத பொருட்கள் ஏலத்தில் விற்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாத பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் ஏராளமான துவிச்சக்கரவண்டிகள மோட்டார்சைக்கிள்கள் கையடக்கத்தொலைபேசிகள், மின்சாரப்பொருட்கள், தராசுப்படிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பன அடங்குகின்றன. இவ் ஏலவிற்பனை எதிர்வரும் 27ஆம் திகதி இடம் பெறவுள்ளதுடன் ஏலம் ஆரம்பமா வதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக பொதுமக்கள் ஏலவிற்பனை பெருட்களை பார்வையிடலாம் ஏல விற்பனையில் கலந்து கொள்பவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் வருவதுடன் ஏலத்தில் எடுக்கப்படும்பொருட்களுக்கு உடனடியாக பணம் செலுத்தி பொருட்களை எடுத்துச்செல்ல வேண்டும். பொருட்களின் உரிமையாளர்கள் ஏலவிற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமைக்கோரிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும். என அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# கூட்டுறவு தினத்தை முன்னிட்ட போட்டி முடிவுகள் வெளியீடு

(முல்லைத்தீவு)

91ஆவது கூட்டுறவு தினத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் கவிதை,கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டி கற்சிலைமடு அரசினர் தழிழ்க்கலவன் பாடசாலை அதிபர் நாகேந்திரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலையின் விபரம் வருமாறு,

பேச்சு கீழ்ப்பிரிவு

மாங்குளம் மகாவித்தியாலயம், கரப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலை, கற்சிலைமடு அரசினர் தழிழ்க்கலவன் பாடசாலை

மத்திய பிரிவு

மாங்குளம் மகாவித்தியாலயம், கற்சிலைமடு அரசினர் தழிழ்கலவன் பாடசாலை, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

மேற்பிரிவு

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மாங்குளம் மகாவித்தியாலயம்,

கட்டுரைப்போட்டி மத்தியபிரிவு

முத்து ஐயன்கட்டு இடது கரை, கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மாங்குளம் மகாவித்தியாலயம்

மேற்பிரிவு

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முத்துஐயன் கட்டு இடது கரை, கற்சிலைமடு அ.த.க. பாடசாலை

கவிதைப்போட்டி

கற்சிலை மடு அ.த.க. பாடசாலை, முத்துஐயன் கட்டு இடது கரை, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

மத்தியபிரிவு

முத்துஐயன்கட்டு இடதுகரை, மாங்குளம் மகாவித்தியாலயம், திருமுருகண்டி இந்து வித்தியாலயம்

மேற்பிரிவு

முத்துஐயன்கட்டு வலது கரை, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மாங்குளம் மகாவித்தியாலயம்

வினாடிவினாப் போட்டி

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முத்துஐயன் கட்டு இடதுகரை, முத்தஜயன்கட்டு வலது கரை(40)



புதுடில்லியில் இருக்கும் இந்திய மற்றும் இலங்கைக்கான ஆஸ்திரியா நாட்டுத்தூதுவர் றயின்முட் மஜிஸ் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியை கொழும்பிலுள்ள ஆளுநரின் உப அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடியபோது...

# பதிவிறக்கப் பெட்டகம்

கவிதைகள் புரிவதில்லை என்ற குற்றச்சாட்டு பற்றி தொடர்ந்து இன்னும் கொஞ்சம் சிந்திக்கலாம். பழைய செய்யுள்களுக்கு உரையாசிரியர்கள் தேவைப்படுவது போலவே, இன்றைய சில புதுக்கவிதைகளை விளங்கிக் கொள்ளவும் அது பற்றிப் பொருள் விரித்துக் கூறுபவர்களின் உதவி தேவைப்படுகிறது.

வாசகரின் மனவுணர்வுக்குத் தக்கதாக வேறு வேறு பொருள்களைத் தருவதாகவும் இந்தப் புதுக்கவிதைகள் இருக்கின்றன. “மலை உச்சிக்குப் போகவேண்டும் பயணத்தை எங்கிருந்து தொடங்குவது என்று குருவிடம் கேட்டேன். குரு சொன்னார்: மலை உச்சியிலிருந்து தொடங்கு.”

இவ்வாறு புதிரும், புதிருக்குள் தத்துவமாயும், வாசித்தவுடன் குழப்பமாயும், யோசித்துப் பார்க்கிறபோது உள்ளே எதுவோ சொல்லப்படுகிறதாகவும் எண்ண வைக்கிற கவிதைகள் ஒரு தனி வகையினதாக அமைந்திருக்கின்றன. நகுலனின் “ராமச்சந்திரனா” கவிதையும் ஞானக்கூத்தனின் “என்னமாதிரி உலகம் பார் இது” கவிதையும், சோலைக் கிளியின் பல கவிதைகளும் நல்ல பிரபலமான உதாரணங்கள். ரா.ஸ்ரீனிவாசனின் கவிதை ஒன்று:

“எதிரே நீ வந்தாய் / மிகத் தற்செயலாகத்தான்
வியப்புற்று நீதானா அது / என்பதுபோல வந்தாய்
நான்தானா அது என்று / திகைப்புற்று நான் நின்றேன்
எண்ணிப் பார்த்தேன் நொடியில்
நீ எதுவென்று குறிப்பேதுமில்லை என் நினைவில்
அருகில் கண்ட நீயும் / நீயில்லை அது என்று அப்பால்
சென்றாய் / நானில்லை போலும் அது
‘என்று நான் இப்பால் சென்றான்”

இந்தக் கவிதையில் வரும் நான் யார், நீ யார் என்ற குழப்பங்களோடு மொழி இலக்கணத்தையும் மீறி இருக்கிறது கடைசி வரி. இதேபோலவே மொழியின் இலக்கண விதியை மீறி எழுதப்பட்ட ஆனந்தின் கவிதை ஒன்றும் பிரபலமானது.

“சற்றைக்கு முன்னே / ஜன்னல் சட்டமிட்ட வானில்
பறந்து கொண்டிருந்த / பறவை எங்கே? / அது
சற்றைக்கு முன் / பறந்து கொண்டிருக்கிறது”

கடந்த காலத்தை நிகழ்காலமாகத் தோன்றும் பிரமை, கடைசி வரியில் மொழி இலக்கணத்தை உடைத்துக்கொண்டு வந்திருக்கிறது.

புதுக்கவிதை புரியவில்லை என்ற குற்றச்சாட்டு, அதிலுள்ள வார்த்தைகள் விளங்கிக் கொள்ளக் கடினமானவை என்பதால் அல்ல. நாமறிந்த வார்த்தைகளைக் கொண்டு கவிதை பாடும் இன்றைய கவிஞன் என்ன சொல்ல முயல்கிறான் என்பது சில சமயம் நமக்குப் பிடிபடாமல் போய்விடுவது தான் அந்தக் குற்றச்சாட்டிற்குக் காரணம்.

புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை நூல் எழுதிய கவிஞர் பாலா கேட்கிறார்: கணிதம் புரியவில்லை என்றால் அல்லது பௌதீகம் புரியவில்லை என்றால் தன்னிடம் தான் குறை இருப்பதாக விளங்கிக்கொள்ளும் மனிதன், கவிதை புரியவில்லை என்றால் மட்டும் கவிஞனைக் குறை கூறுவதேன்? என்பது அவர் கேள்வி.

பிக்காஸோவின் ‘அப்பிளோடு இருக்கும் பெண்” ஓவியத்தை எடுத்துக்கொண்டால் அதில், அப்பிளையும் காண முடியாது. பெண்ணையும் காண முடியாது. சாதாரணமாக இருப்பது போல் அந்த ஓவியத்தில் அவை காணப்படுவதில்லை. அந்தப் பெண்ணும் அப்பிளும் இருப்பது பிக்காஸோவின் தலைக்குள் – நாம் பிக்காஸோவோடு நம்மை அடையாளப் படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் கண்களுக்கெதிரே அவர் வரைந்த ஓவியத்தை நாம் காண முடியும். பிக்காஸோவின் சமூகம், கலாசாரம், வாழ்க்கை முதலியவற்றோடு கொஞ்சமும் தொடர்பில்லாமல் இருக்கும் பட்சத்தில் அவரோடு நாம் நம்மை அடையாளப்படுத்திக் கொள்வது சாத்தியமில்லை.


நமக்குப் பரிச்சயமில்லாத ஒன்றைப் புரிந்து கொள்வதில் சிரமம் உண்டுதான். எந்த ஒன்றை இரசிப்பதற்கும் எமது முயற்சி வேண்டியிருக்கிறது. எதிலும் உன்னதத்தைக் காண உழைப்பும், தன்னைச் சாதனப்படுத்திக் கொள்வதும் தேவையாகின்றன.

இந்த ‘புரியாமை என்பதில் ஆளுக்காள் அளவு வேறுபாடும் உண்டு. சிலருக்கு மௌனி புரியாது. சிலருக்கு சோலைக் கிளி புரியாது. சிலருக்கு வண்ண நிலவன் புரியாது. வேறு சிலருக்கு சுப்ரமணிய பாரதியின் கவிதைகளே புரியாமல் இருக்கும். அவரவர் அனுபவம், முயற்சி, ஆர்வம் என்பதற்கேற்பவே புரிதலும் அமையும் எனச் சமாதானப் பட வேண்டியிருக்கிறது.

எது எப்படியோ, நமக்குப் புரியாததுக்காக, அதைக் கொண்டாடுகிறவர்கள் மீது கோபப்படுவதில் நியாயமில்லை என்றே தோன்றுகிறது. கவிதைகளும், ஓவியங்களும் கிடக்கட்டும். இந்த வாழ்க்கை ஏதோ புரிந்து கொள்ள முடிகிறதா என்ன?




# சில ரயில் வண்டிகள் சக்கரங்கள் இல்லாமல் ஓடுகின்றன!



ரயில் வண்டிகள் சக்கரங்களைக் கொணடு தண்டவாளத்தில் ஓடுவதைத்தான் நீங்கள் பார்த்திருக்க முடியும். ஆனால் சில ரயில்கள் சக்கரங்கள் இல்லாமலே ஓடுகின்றன. இதில ஆச்சரியமான விடயம் என்னவென்றால் அவை உண்மையிலேயே மிதக்கின்றன! நாம் அவற்றை 'காந் தப் புகைவண்டி' (Magnetic trains) என்று அழைக்கிறோம்.

காந்த வண்டிகள் மிக சக்தி வாய்ந்த காந்தக் கல்லை ரயிலிலும் தண்டவாளத்திலும் கொண்டிருக்கும். ரயில் ஒரு மோட்டாரைக் கொண்டிருக்கும். அந்த மோட்டார் ஒரு காந்த அலையை உருவாக்கும். இந்த அலையினால் ரயில் தண்டவாளத்தைத் தொடாமல் கொஞ்சம் மேலே மிதக்கும். இதனால் ரயிலுக்கும், தண்டவாளத்திற்கும் நடுவில் உராய்வு ஏற்படாததால், ரயில் ஒரு மணிநேரத்தில் 500 கிலோமீற்றர் வரை செல்லமுடியும்.

காந்த வண்டிகள் ஆடாமல் அமைதியாகச் செல்கிறது. மற்ற போக்குவரத்துச் சாதனங்களைவிட இது குறைந்த சக்தியை உபயோகித்து அதிக ஆற்றலை வெளியிடுகிறது. இங்கிலாந்து, ஜேர்மனி மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இம்மாதிரியான ரயில்களை உருவாக்கி வருகின்றன.

## ஆட்டுக்குட்டியை பிரசவித்த பெண் அதிசயம் ஆனால் உண்மை



நைஜீரியாவில் குதிரைக் குழந்தை ஒன்றை கடந்த வாரங்களில் மனிதப் பெண் ஒருவர் பிரசவித்து இருந்தார். ஆனால் இந் நாட்டில் இதேபோன்ற அதிசயம் மீண்டும் இடம் பெற்றுள்ளது.


பிரசவத்துக்கு வந்து குழந்தை பெண் ஒருவர் ஆட்டுக்குட்டி உருவத்திலான குழந்தை ஒன்றை சில நாட்களுக்கு முன்னர் பிரசவித்துள்ளார்.

ஆடுகளின் காலை சிசு கொண்டு இருந்தது. ஆனால் ஆட்டின் கழுத்து இருக்கவில்லை. இச்செய்தி எழுதப்படுகின்ற நேரத்தில் இவ் விசித்திர ஜந்து வைத்தியசாலை வார்ட்டில் தான் உள்ளது. இதற்கு முந்திய நான்கு பிரசவங்களிலும் கூட விசித்திரமான ஜந்துகளைத் தான் பிரசவித்து இருந்தார் என்று பெண் துக்கத்தோடு தெரிவித்துள்ளார்.

## விண்வெளி ஆர்வத்தை வெளிப்படுத்திய 7 வயதுச் சிறுவன்

டெக்ஸ்டெர் எனப்படும் 7 வயதுச் சிறுவன் ஒருவன் வித்தியாசமான முறையில் தனது விண்வெளி ஆர்வத்தை நாசாவுக்கு வெளிப்படுத்தியுள்ளான்.

அதாவது அவன் வளர்ந்து பெரியவனாகும் போது ஒரு விண்வெளி வீரனாக வேண்டும் என்ற ஆர்வத்தில் அதற்கு முன்னாயத்தமாக இப்போதே ஒரு கடிதத்தை வரைந்து நாசாவுக்கு அனுப்பியுள்ளான். அதில் அவன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளான். "அன்புள்ள நாசா, நீங்கள் செவ்வாய்க்கிரகத்துக்கு இரண்டு மனிதர்களை ஆய்வு செய்வதற்கு அனுப்பவுள்ளதாகக் கேள்விப்பட்டேன். எனக்கு அதில் ஒருவராக வர விருப்பம் தான். ஆனால் இப்போது தான் எனக்கு




7 வயதாகின்றது. எனவே, என்னால் முடியாது! நான் வருங்காலத்தில் ஒரு விண்வெளி வீரனாக வர என்ன செய்ய வேண்டும்? என்று குறிப்பிட்டுள்ளான்.

இச்சிறுவனுக்குச் சிறந்த முறையில் மதிப்பளித்த நாசா அவனை ஊக்கப்படுத்தும் விதத்தில் அவன் எவ்வாறு ஒரு விண்வெளி வீரனாக வர முடியும் போன்ற விபரங்களையும் செவ்வாய்க்கிரகம் பற்றிய அறிவியற் குறிப்புக்களையும், படங்களையும் அனுப்பியுள்ளார்.

இதனைச் சற்றும் எதிர்பாராத சிறுவனின் தாயார் இச்சிறுவன் அனுப்பிய கடிதம் அவனுக்குக் கிடைத்த நாசாவின் பதில் கடிதம் ஆகியவற்றை Reddit தளத்தில் பதிவு செய்துள்ளார்.

சுமார் 2154 கமெண்டுகளுடன் Reddit தளத்தை ஆக்கிரமித்திருக்கும் இப்பகுதி பற்றிய செய்தி Mashable இணையதளத்திலும் பிரசுரமாகி பிரசித்தமாகி வருகின்றது.

மிகவும் சிறிய வயதில் மிகப் பெரிய கனவுகளுடன் வாழ்க்கையில் முன்னேற நினைக்கும் சிறுவர் சிறுமியருக்கு டெக்ஸ்டெர் ஒரு முன்மாதிரி எனக் குறிப்பிட்டால் மிகையாகாது.

## நவாலியூர் சோமசுந்தரப்புலவர்


தமிழ் கூறும் நல்லுலகம் பெற்றெடுத்த நல்முத்துக்களில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் ஒருவராவர்.

இவர் 1896 ஆம் ஆண்டு ஆனிமாதம் 28 ஆம் திகதி யாழ்ப்பாணத்து நவாலியூரிலே கதிர்காமருக்கு இலக்குமிப்பிள்ளைக்கும் மகனாகப் பிறந்தார்.

மானிப்பய் அருணாசலப் புலவரிடம் செந்தமிழையும் மாரிமுத்து உபாத்தியாயரிடம் ஆங்கிலத்தையும் கற்று ஆசிரியப் பணியைத் தொழிலாகக் கொண்டார். சித்தங்கேணியிலுள்ள கலட்டி ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம், தமிழ், சமயம் ஆகிய பாடங்களை மாணாக்கர் நன்கு விளங்கிக் கொள்ளுமாறு கற்பித்தார். இவர் பிறந்த மண்ணின் பெருமையினை அழகுற இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடிய அழகு தமிழில் பாடல்களாக அப்படியே படம பிடித்துக் காட்டுகிறார். இயல்பாகவே கவிதையாற்றல் மிக்கவரான இப்புலவர் தம் வாழ்நாளில் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியிருக்கிறார்.

தங்கமயமான தோற்றத்தோடு களங்கமில்லா உள்ளத்தோடும் அகத்தினழகு முகத்தில் தெரிய தன் வெண்தாடியை மென் விரல்களால் தடவிக்கொண்டு இவர் இயற்றிய பிரபந்தங்கள், 'சிறுவர் செந்தமிழ்' சிறுவர்களுக்கான பாடல்கள், பொது நூல்களென இவர் பலதுறைகளிலும் பாடல்களை இயற்றியுள்ளார்.

பெங்களூரிலிருந்து வந்த பெரியார்



சுப்பிரமணிய சுவாமியாரை தமது குருவாக ஏற்றுக்கொண்டார். தமது தாய் மாமன் வேலுப்பிள்ளையின் மகள் சின்னம்மையை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தினார். இவருக்கு 3 பிள்ளைகள் உண்டு. அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்த தமிழ் மக்கள் மேனாட்டு மோகத்தில் நமது கலாசாரங்களை மெல்ல மெல்லக் கைவிடுவதைக் கண்டு மனம் நொந்தார்.

*(தொடரும்....)*



***சிறுவர் திறன் விருத்திக்காக தினமுரசு முன் னெடுக்கும் சிறுவர் முரசு ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமைகளில் உங்கள் அறிவியலிற்கு விருந்தளிக்கும். இச் சிறுவர் முரசில் உங்கள் ஆக்கங்களும் பிரசுரமாக வேண்டுமெனில் சிறுவர் முரசு, தினமுரசு, இல 373 பிரதான வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சித்திரங்கள் கவிதைகள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் என தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.***

படித்துப்பாருங்கள்

## கானல்

தான் நல்ல பலமுடையவன். சர்வ வல்லமையுடைய வன், பெரிய சாம்ராஜ்யத்தின் மன்னன் என்ற கர்வம் அந்தச் சிங்கத்திற்கு ஒரு நாள் மாலை நேரம், செவ்வொளி வீசும் அஸ்தமன சூரியன் விரிந்து பரந்து கிடக்கும் அந்திவானத்தை இரத்தமயமாக்கிக் கொண்டிருக்கின்றது.

வனப்புமிக்க இக்கண்கொள்ளாக் காட்சி அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருக்கின்ற இந்தச் சிங்கத்திற்குக் களிப்பூட்டுகின்றது. "இதோ இந்தப் பரவசமூட்டும் ஒளிப்பிரவாகம் எனது சாம்ராஜ்யத்திற்கு எழிலூட்டுகின்றது. இந்தப் பாலைவன சாம்ராஜ்யத்தின் மாமன்னனாகிய நான் இந்த ஒளிப்பிரவாகத்தைக் கைப்பற்றி அதை எனது ஆட்சிப் புலத்திற்குள் கொண்டு வந்து அடக்கி வைத்திருக்கத் தவறினால் அது எந்த நேரத்திலும் மங்கி அழிந்து மறைந்து விடும். ஆகையால் இந்தக் கணமே இந்த உன்னத ஒளிப்பிரவாகத்தைக் கைப்பற்றுகின்றேன".

சிங்கம் இறுமாப்புடன் கூறிக்கொண்டு தனது உடலைச் சிலிர்த்து நிமிர்ந்து கம்பீரமாக நிற்கின்றத. இரத்தம் சூடேறி, கொதித்துப் பீறிட்டு உடலெங்கும் வீறாப்புடன் ஓட, தூசிப்படலத்தை எழுப்பிக் கொண்டு மேற்குத் திசையை நோக்கிப் பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்றது சிங்கம். அது பாய்ந்து செல்லச் செல்ல அஸ்தமன சூரியன் பின்னே பின்னே சென்று வானத்தின் விளிம்பை நோக்கி இறங்கிக் கொண்டிருக்கின்றான். மாலை இருள் மெல்ல மெல்ல பிரபஞ்சத்தை விழுங்கத் தொடங்குகின்றது.

பாலைவனத்தின் அரும்பெரும் செல்வமான ஒரு ஏரி பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்ற சிங்கத்தை தடுத்து நிறுத்துகின்றது. அந்தி வானத்தின் செஞ்சூரியன் ஏரியின் பளிங்கு போன்ற நீரில் பிரதிபலித்து, செவ்வொளி வீசுகின்றது.

'நான் தேடிக்கொண்டிருக்கின்ற இரை இங்கே தான் இருக்கின்றது' கூறியபடியே

வீறாப்புடன் கர்ச்சித்துக் கொண்டு சிங்கம் ஏரிக்குள் பாய்ந்து மூழ்கி இறக்கின்றது.

'ஒரு மாயைத் தோற்றத்திற்காக என்னைத் தியாகம் செய்வதிலும் பார்க்க வேறு எந்த மகத்தான முடிவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியும்'?

சிங்கத்தின் இந்த இறுதி வார்த்தைகள் காற்றில் மிதந்து சங்கமித்து மடிகின்றது.

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

## உயிரியல்

01. விலங்குகளின் கூர்ப்பின் போதுகுருதிச் சுற்றோட்டத்தொகுதி விருத்தியடைந்த காரணத்தை விளக்குக.
- ✡ கூர்ப்பின் ஆரம்பத்தில் பதார்த்த கொண்டு செல்லல் பரவலால் நடைபெற்றது.
- ✡ கூர்ப்பின் போது சிக்கல் தன்மை அதிகரித்தது.
- ✡ கடத்தப்படவேண்டிய பதார்த்தங்களின் அளவு அதிகரித்தது.
இதனால் பரவல் மூலமான கடத்தல் போதுமானதாக இல்லை. எனவே வினைத் திறனான கடத்தலுக்கு
- ✡ சுற்றோட்டத்தொகுதி விருத்தியடைந்தது.

02. மனித இதயத்தின் விரைவு வீதமாக்கி என்பது என்ன?
- ✡ இதயத்துடிப்பை ஆரம்பித்து வைக்கும் விசேடமடைந்த இதயத் தசைநார்களின் கூட்டமான SA கணு.

03. மனித குருதிச் சுற்றோட்டத்தொகுதியின் ஒட்டுமொத்தமான தொழில் யாது?
- ✡ கொண்டு செல்லல் (வினைத்திறனான கடத்தல்)

04. விலங்கு ஓமோன்களின் ஒட்டுமொத்தமான தொழில் யாது?
- ✡ ஒர்சீர்திட நிலையை பேணுதல்.

05. புறஞ்சுரக்கின்ற சுரப்பிகளுக்கும், அகஞ்சுரக்கின்ற சுரப்பிகளுக்கும் இடையில் உள்ள பிரதான கட்டமைப்பு வேறுபாடு யாது?
- ✡ புறஞ்சுரப்பி : கான் உள்ள சுரப்பி
- ✡ அகஞ்சுரப்பி : கானற்ற சுரப்பி

06. நரம்புத்தொகுதி வகிக்கும் முக்கிய பங்கு யாது?
- ✡ இயைபாக்கம்

07. தாக்க அழுத்தம் என்றால் என்ன?
- ✡ முனைவுத் தன்மை மீளமாறல்.

08. இனம் பிழைத்தலுக்கு இலிங்கமுறை இனப்பெருக்கம், இலிங்கமில் முறை இனப்பெருக்கத்திலும் பார்க்க கூடிய நன்மை தரும். விளக்குக.
- ✡ வித்தியாசமான அங்கிகளின் இரு கருக்கள் இணைதல்.
- ✡ ஒடுக்கற்பிரிவின் போது குறுக்குப்பரிமாற்றம் நடைபெறுவதனால்
- ✡ மாறல்கள் ஏற்படும்.
- ✡ இதனால் கூர்ப்பு ஏற்படும்.

09. இனப்பெருக்கத்தின் மிக முக்கிய அம்சங்களை குறிப்பிடுக?
- ✡ அங்கிகளின் எண்ணிக்கையை கூட்டல்.
- ✡ பிறப்புரிமைத் தகவல்களை கடத்துதல்.

10. தரைவாழ் விலங்குகளில் அகக்கருக்கட்டல் காணப்படுவது ஏன்?
- ✡ புணரிகள் / இனப்பெருக்க கலங்கள் உலர்வடைதலை தடுப்பதற்காக.

11. வட்டத்தட்டு நழுவும், ஆபத்தை இழிவாக்குவதற்கு பாரமான பொருள் ஒன்றை மனிதன் எங்ஙனம் தூக்க வேண்டும்.?
- ✡ முதுகை வளைக்காது, முழங்கால் மடித்து பொருளை தூக்குதல்.

12. நைதரசன் வட்டத்தில் மனிதனின் தலையீட்டினால் பாதிக்கப்படத்தக்க இரு செயன்முறைகளைத் தருக?
- ✡ நைதரசன் இறக்கம்
- ✡ நைதரசன் பதித்தல்

13. மேற்குறிப்பிட்ட பின்விளைவுகளை விபரிக்க.
- ✡ வளமாக்கிகளைச் சேர்த்தல்.
- ✡ நீர்முறை அரித்தலுக்கு வழிகோலும்.
- ✡ நைதரசன் மாசுக்கள் நீரில் கரையும்.
- ✡ ஈரநிலங்கள் அதிகரிக்க, நைதரசன் இறக்கப்பட்ட நிலமாகும்.
- ✡ சூழலில் நைதரசன் சமநிலை பாதிக்கப்படும்.
- ✡ நீர்முறை அரித்தலினால், தரைமேற்பரப்பு கழுவப்பட்டு,
- ✡ தற்போசணையாக்கலுக்கு வழிகோலும்.

14. DNA மீளச்சேர்தலின் தொழில் நுட்பவியலின் 05 பிரயோகங்கள் தருக,
- ✡ தனியன்களை இனங்காணுதல்
- ✡ ஓமொன்களின் உற்பத்தி
- ✡ குருதி உறைதல் காரணிகளின் உற்பத்தி
- ✡ நோய்த் தடை மருந்து உற்பத்தி
- ✡ உயர் நோய் எதிர்ப்புத் திறனுடைய தாவரம், விலங்கு உற்பத்தி.
- ✡ உயர் விளைச்சலைத் தரும் பயிர்வகைகளின் உற்பத்தி.

15. குருதித் திரவ இழையம் என்பது யாது?
- ✡ குருதியின். திரவப்பகுதியாகும்.

16. மனிதனில் குருதித்திரவ இழையத்தில் காணப்படும் 03 பிரதான புரதவகைகள் யாவை?
- ✡ Albumin Globulin
- ✡ Fibrinogen

17. CO , ஒரு வன்மையான சுவாச நிரோதியாக கருதப்படுவது ஏன்?
- ✡ ஈமோகுளோபினுடன் சேரும் திறன் ஒட்சிசனிலும் அதிகம்.
- ✡ மீளாத வகையில் சேரும்.
- ✡ ஆகவே ஒட்சிசனைக் கடத்தும் ஈமோகுளோபினின் அளவு குறையும்.

18. உயிரியல் தாக்கங்களின் ஊக்கலில் ஒரு நொதியத்தின் அடிப்படைத் தொழில் யாது?
- ✡ உயிரியல் தாக்கங்களின் ஏவற் சக்தியினை குறைத்து, தாக்க வீதத்தை அதிகரிக்கும்.

19. நொதியங்கள் தொடர்பாக"தனியினத்துவம்" எனும் பதத்தை விளக்குக.
- ✡ ஓர் கீழ்ப்படை மூலக்கூறு நொதியத்துடன்
- ✡ நொதிய உயிர்ப்புத் தானத்தின் ஊடாக இணைவதற்கு,
- ✡ ஒவ்வொரு நொதியமும் குறித்த வடிவத்தை கொண்டுள்ளது.

20. நொதியம் உயர் வெப்பநிலையில் அதன் தொழிற்பாட்டை ஏன் இழக்கின்றது என விளக்குக.
- ✡ நொதியங்கள் யாவும் புரதங்களாகும்.
- ✡ புரத முப்பரிமான கட்டமைப்பு நொதியத் தொழிற்பாட்டில் தங்கியிருக்கும்.
- ✡ வெப்பநிலை அதிகரிக்க புரதங்கள் அமைப்பழியும்.
- ✡ முப்பரிமாண கட்டமைப்பு மாற்றப்படும்.
- ✡ உயிர்ப்பு மையத்தின் வடிவம் மாற்றப்படும்.
- ✡ கீழ்ப்படை இணையாது., நொதியத் தாக்கம் நடைபெறாது.

21. நொதியங்களை வகைப்படுத்துக.

**மீளா நிரோதி** :: இவை நிரந்தரமாக நொதிய மூலக்கூறுகளுடன் பிணைப்படைந்து விடும்.
Eg : பாரவுலோகங்கள்

**மீளும் நிரோதி** :: இவை நொதியங்களுடன் தளர்வாக பிணைப்படையக் கூடியன. மீளம் நிரோதிகளை இருவகையாக பிரிக்கலாம்.

***மீளும் போட்டி நிரோதிகள*** :: இவை கட்டமைப்பு ரீதியில் கீழ்ப்படையை ஒத்தவை, நொதியத்தின் உயிர்ப்பு மையத்துடன் இணையும்.

Eg : சல்போனேமைட்டு

***போட்டியற்ற மீளும் நிரோதிகள*** :: நொதியங்களின் உயிர்ப்பு மையமில்லாத இடங்களில் இணையும்.
Eg : சயனைட்டு அயன்கள்,
சைற்றோகுறோம் ஒக்சிடேஸ் இல் உள்ள செப்பு அயன்கள்

22. சிறுநீரகக்கற்கள் உண்டாகும் ஆபத்தை குறைக்க அடிக்கடி நீரைப் பருக வேண்டியது ஏன்?
- ✡ கல்சியம் ஒக்சலேற்று
- ✡ கல்சியம் பொஸ்பேற்று ஆகியவை
- ✡ வீழ்படிவாதலை தடுப்பதற்கு.

- * மனித முள்ளந் தண்டு வாழ்நாள் முழுவதும் செங்குருதித் துணிக்கையை உற்பத்தி செய்யாது.
- * *Nephrolepis* இன் வித்திகள் நீரின் மூலம் பரம்பலடையும் ***பிழையானது.*** ஏன்எனில் அது தரைவாழ்க்கைக்கு இசைவாக்கம் அடைந்துள்ளது.
- * முதுகு வயிற்றுப்புறம் தட்டையான உடலுடைய நன்னீர் வாழ், பூக்கள் மூலம் சுவாசிக்கும் அங்கிகள் **Class Crustacea** ஆகும்.
- * இலங்கையில் பொதுவான கன்னிக் கணியமாதல் இடம்பெறுவது, - அன்னாசி

- * அனேகமான நிறமூர்த்த விகாரங்கள் ஒடுக்கற் பிரிவின் போது நடைபெறும் குறுக்குப்பரிமாற்றத்தின் போதும் நிறமூர்த்தங்கள் சோடியாதலின் போதும் ஏற்படும்.
- * வித்து மூடியுளிகளின் சூல்வித்தகத்தில் ஒரு முளையப்பையே இருக்கும். *Cycas* இலும் ஒரு முளையப்பையே இருக்கும்.
- * *Cycas* இன் மாவித்திக்கலன் ஒரு பெண் புணரித் தாவரத்தையே தோற்றுவிக்கும்.
- * வைரம் - உள்வைரம் ( உயிர் அற்றது )
சத்துவைரம் ( உயிர் உள்ளது )
- * மரவுரி - கலன் மாறிழையத்துக்கு வெளிப்புறம் காணப்படும்.
- * சுற்றுப்பட்டை - தக்கை மாறிழையம், துணை மேற்பட்டை, தக்கை
- * இலங்கையின் உயிரினப் பல்வகமை இழப்புக்கு முக்கிய காரணம் - வாழிடங்கள் அழிக்கப்படுதல்
- * இறுதி உயிரின் இன அழிவு - டைனோசர்களில் நிகழ்ந்தது.
- * முதல் உயிரின் இன அழிவு - ரைலோபைற்றுக்களில் நிகழ்ந்தது.
- * கலப்பிரிவில் பெரும் பங்காற்றுவது - **Cytokinin**
கலப்பிரிவை ஆரம்பிப்பது - **Auxin**
- * குருதி நீர்ப்பாயம் கொண்ட திரவ வளர்ப்பு ஊடகத்தை கிருமியழிக்க - மென்சவ்வு வடி பயன்படுத்தப்படும்
- * சமபாயங்கள்
  - • **CITES** - உயிரினங்களின் வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடையது.
  - • **RAMZAR** - ஈரநிலங்களின் பாதுகாப்பு தொடர்பானது.
  - • பேசல் - அமில மழை தொடர்பானது.
  - • மொன்றியல் வரைபேடு - ஓசோன் வெறிமையாக்கம் தொடர்பானது.
  - • கீயோட்டா - பச்சைவீட்டு விளைவு, பூகோளவெப்பமாதலுடன் தொடர்புடையது.
  - • மாபோல - சமுத்திரங்கள் மாசடைதலுடன் தொடர்பானது.
- * இளம் பிள்ளை வாதத்திற்கு எதிராக வக்சினேற்றல் - செயற்கையான உயிர்ப்புள்ள நீர்ப்பீடணம்.
- * பரிவகக்கீழின் எல்லா ஓமோன்களும் கபச்சுரப்பி மீது தாக்கம் கொள்ளும். எனினும் எல்லா ஓமோன்களும் கபச்சுரப்பியை ஒழுங்காக்குவதில்லை.
- * குளோரொபிலின் கூறுகள் - **C,H,O,Mg,N**
- * குளோரொபிலின் கூறாக காணப்படாத ஆனால் குளோரொபிலின் ஆக்கத்திற்கு தேவையானவை - **Fe,Zn**
- * இழைய இறப்பு ஏற்படுதல் (மூலகங்களின் பற்றாக்குறை) - **K,P,Cl,Zn**
- * வாய், வாய்க்குழி, நாக்கு - கெராட்டின் ஏற்றப்படாத படை கெண்ட மேலணி
- * உணவை விழுங்குதல் - இச்சையின்றிய செயற்பாடு ஆகும்.
- * Entrokinase ஒரு பிரிப்பு நொதியமாகும். ( Trypsinogen → Trypsin )
- * உமிழ்நீர் சுரத்தலை ஓமோன்கள் கட்டுப்படுத்தாது.( pH 6.5 - 7.5)
- * சதையி :: சதைய குலை - புறஞ்சுரப்பி (சதையச் சாறு )
இலங்ககான் சிறு தீவுகள் - அகஞ் சுரப்பி
(α கலம் - குளுக்கோகோன் , β கலம் - இன்சுலின் )
சதையச் சாற்றில் **சீதம் காணப்படுவதில்லை.**

- * முன்சிறுகுடல், இரைப்பை, சதையி - அகஞ்சுரப்பியாகவும் புறஞ் சுரப்பியாகவும் தொழிற்படும்.
- * பித்தம் ( pH 7.6 - 8.6)
சுரத்தலை தூண்டுவது - Secretein, பரபரிவு

சுரத்தலை நிரோதிப்பது - Choleocystokinin, பரிவு
பித்தத்தை விடுவித்தலை தூண்டுவது - Choleocystokinin

* காபோவைதரேற்று குறைபாட்டு நோய் - மரஸ்மஸ்
காபோவைதரேற்றும், புரதமும் குறைபாடு - குவாசியக்கோர்
* முதல் சுவாச கட்டமைப்பு - வெளிப்பூக்கள்
    • வா்தனாளி - சுவாச மேற்பரப்பு புன்வாதனாளி
    • கலனற்ற சுவாசக் கட்டமைப்பு
    • குருதி பங்கேற்பதில்லை
    • உட்பூக்களின் சுவாச மேற்பரப்பு - பூ மென்தட்டு
    • தொண்டையில் சீதம் சுரக்கும் கெண்டிக் கலங்கள் இருப்பதில்லை.
    • உட்சுவாச மைய்ம் :: நீள்வளைய மையவிழையம்
    • வெளிச்சுவாச மையம் :: வரோலியன் பாலம்
    • சுவாசச் சீராக்கலுடன் தொடர்பான இரசாயண வாங்கிகள் ( குருதியில் ஒட்சிசன் செறிவு குறையும் போது தூண்டப்படும். அதாவது *உட்சுவாசத்தை தூண்டும்.*) **(தாழ் pH)**

**சிரசு நாடி, பெருநாடிகளில** அமைந்துள்ளன.

• மூச்சு உள்ளெடுக்கும் ஆழம் அதிகரித்து நுரையீரல்கள் வளியினால் நிரப்பப்படும் போது ***ஈர்ப்பு / தகைப்பு / அமுத்த வாங்கியினால*** கணத்தாக்கு உருவாக்கப் பட்டு *வெளிச்சுவாசம்* தூண்டப்படும்.


• வாயுப்பரிமாற்றம் சிற்றறையூடாகவும், சிற்றறை கானூடாகவும் வாயுப்பரிமாற்றம் நிகழும்.

• சுவாச வட்டம் 3 படிமுறை ::
1. உட்சுவாசம்
2. இடைநிலை ஓய்வு
3. வெளிச்சுவாசம்.

• 12 -15 சுவாச வட்டங்கள் / நிமிடம்
* **Phylum Annelida** க்களில் சுவாச நிறப் பொருட்கள்
* ஈமோ குளோபின் ( **Haemo globin** )
* ஈமோ எரித்திரின் ( **Haemo erythrin**) சிவப்பு
* குளோரோ குரோரின் ( **Chloro chrorin**)
* முள்ளந்தண்டு விலங்குகளில் சுவாச நிறப் பொருட்கள்..........
* **Haemo globin**
* **Myoglobin** சிவப்பு
* **Class Crustacea** க்களில், **Class Cephalapoda** க்களில்...
* **Haemo Cyanin** - நீலம்

* அகத்தோல் - தாவரத்திற்கு தேவையான கனியுப்பு அயன்களை தேர்ந்து உட்புகவிடுதல்.
    * இருவித்திலை வேர் - ஆரைக்குரியது, வெளியாதியானது
    * இருவித்திலை தாவர இலையில்...
    கட்டுமடல் - வல்லுருக்கலவிழையம்
    நடுநரம்பு - ஒட்டுக்கலவிழையம்
    * ஒருவித்திலை தாவர இலையில்....
    கட்டுமடல் - புடைக்கலவிழையம்
    நடுநரம்பு - வல்லுருக்கலவிழையம்

* இலைவாய் திறத்தலில் சில தாவரங்களில்....
**Malic Acid (Glucose** ற்கு பதிலாக ) **Cl'** (K+ ற்கு பதிலாக) பயன்படும்.
(பொதுவாக C4 தாவரங்களில் )
* இலைவாய் திறப்பதற்கு உதவும் ஓமோன் **Cytokinin**
மூடுவதற்கு **Absisic acid**
* உரியக் கொண்டு செல்லலில் கொண்டு செல்லப்படும் சேதனச் சேர்வைகள்
* சேதன உணவு (சுக்குரோசு)
* விற்றமின்கள்
* ஓமோன்கள்
* அமினோ அமிலங்கள்
* அசேதன சேர்வைகள்
* நீர்
* கணியுப்பயன்கள்.
* திறந்த குருதிச் சுற்றோட்டத்தில் ... **வாயுருப்பு, நாடி, குருதிக்குழிவு** என்பன மட்டும் **காணப்படும்** நாளம், குருதிமயிர்க்குழாய் என்பன காணப்படாது.





Aves } III (சிரசு), IV (தொகுதி) , VI - (இடது இல்லை)
Mammalia } III (சிரசு), IV (தொகுதி) , VI - (வலது இல்லை)

C h o n d r i c
Oestricthes } I இழப்பு

A m p l
Reptilia } III (சிரசு) , IV (தொகுதி) , VI (சுவாசப்பை) - காணப்படும்

Aves → III (சிரசு) , IV (தொகுதி) , VI - (இடது இல்லை)

Mammalia → III (சிரசு) , IV (தொகுதி) , VI - (வலது இல்லை)




* இதயவடிப்பு வீதத்தை குறைப்பது, ---- **ACTH, Cortisol**
அதிகரிப்பது ---- அதிரினலீன், தைரொக்சின், ADH, இலிங்க ஓமோன்கள்
* இருகூர் வால்பு, முக்கூர் வால்புகள் ---- *வெண்ணார் தொடுப்பிழையம*

* ***இதயக்கூட அறை*** என்பது ***சோணையறை*** ஆகும்.
* குருதிப் பரிமாற்றத்தில்...
    வாங்கி - **Agguluthinin** (உடல் எதிரி, பிறபொருள் எதிரி )
    வழங்கி - **Agguluththinogen** (உடல் எதிரியாக்கி )
* **Rh** காரணி - **Agguluthinogen - D** ஆகும் .
* விலங்குகளின் உடலில் உருவாக்கப்படும் கழிவுகளில் நரம்புத்தொகுதிக்கு தீவிர நஞ்சாக காணப்படுவது?

*அமோனியா*
* கிரியற்றினைன் கழிவுப்பொருள்.......... (தசைகளிலில்)

**கிரியற்றினின** சமிபாட்டினால் உருவாக்கப்படும்,
இது **சிறுநீரகத்தால** மட்டும் வெளியேற்றப்படும்.
* சுருங்கத்தக்க புன்வெற்றிடம் - பிரசாரண சீராக்கலில் உதவும்.

* கழிவகற்றலில் உதவும்

* சுவாலைக்கலம் - பிசிர்களை அல்லது சவுக்குமுளைகளை கொண்டிருக்கும். (முதலில் உருவாகியது)

* மல்பீசியன் சிறுகுழாயில் கழிவுகள் மலத்தின் ஊடாக வெளியேற்றப்படும்.

* கலன்கோ்ளம் ... நாடியால் ஆக்கப்பட்டது.

* போமனின் உறை (மனிதனின்) சிறப்படைந்த பாதக்குழியங்கள் கலங்கள் காணப்படும்.

* சிறுநீரகத்தி இருவகைப்படும் .... மேற்பட்டைக்குரிய (அதிகளவில் கணப்படும் ) மையவிழைய சுற்றருக்குரிய
* என்லெயின் தடம், சேர்க்கும் கான் என்பனவற்றுக்கு சமாந்தரமாக மையவிழையத்தில் காணப்படும் குருதிமயிர்க்குழாய்களின் வலைப்பின்னல். **Vasarecta** எனப்படும்.

* சுரத்தல் - சேய்மையான மடிந்த குழலுருவில் நடைபெறும்.
**H+, K+, NH4+, Vitamin B,** மருந்துப்பொருட்கள்

* **Juxtra** கலன்கோளச்சிக்கல் - எரித்திரோபயோற்றின், ரெனின்

* மூளை, முண்ணான் சூழ்ந்து சருமம் காணப்படும் (வன்றாயி, மென்றாயி, சிலந்தி வலையுரு மென்சவ்வு) மென்றாயி அதிக குருதித் தரவு உடையது.
    கேட்டல் - கடைநுதற்சோணை
    மணம் - கடைநுதற்சோணை
    பார்வை - பிடர்ச்சோணை
    சுவை - சுவர்ச்சோணை

* மானிடத்தனித்திறன் ஆளுமை செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது - **நுதற்சோணை**
* வன்கூட்டு தசைகளின் (இச்சையுள்) அசைவுகளை கட்டுப்படுத்துபவை,
    மூளையம்
    அடித்திரட்டு
    மூளி

* முண்ணாண் நரம்புகள் யாவும் கலப்பு நரம்புகளாகும்.(31 சோடி)
    பரிவு - நோர் அதிரினலீன்
    பரபரிவு - அசற்றைல் கோலின்

* நரம்புக் கடத்திகள் - அகஞ்சுரக்கும் தொகுதியினால் தொகுக்கப்படுவதில்லை. குருதியில் விடுவிக்கப்படுவதில்லை. (அசற்றைல் கோலின், நோர் அதிரினலீன் )

* வெப்ப வாங்கி
    ரபீனியன் உடல் , சுயாதீன நரம்பு முடிவிடங்கள் ::::: வெப்பநிலை உயர்ச்சிக்கு தூண்டல்
    குரோசின் குமிழ் , சுயாதீன நரம்பு முடிவிடங்கள் ::::: வெப்பநிலை வீழ்ச்சிக்கு தூண்டல்

* தொடுகை வாங்கி
மேக்கலின் வட்டத்தட்டு, மெசுனரின் சிறுதுணிக்கை, மயிர்ப் புடைப்புக்கள்

* அதிர்வு வாங்கி
மேக்கலின் வட்டத்தட்டு, மெசுனரின் சிறுதுணிக்கை

* வெப்ப வாங்கி, நோ வாங்கி ---- சுயாதீன நரம்பு முடிவிடங்கள்
அமுக்க வாங்கி --- பசினீயன் சிறுதுணிக்கை.
(உட்தோல், தசை, நடுமடிப்பு, சிரை, மூட்டு)



# சிறந்த அரசியல் தலைமை மூலமே உரிமைகளை வென்றெடுக்க முடியும்



(யாழ்ப்பாணம்)

நடைமுறைச் சாத்தியமான வழியில் அரசியல் பணியினை முன்னெடுத்துச் செல்பவர்களின் கரங்களை பலப்படுத்துவதன் மூலமே தோற்றுவிக்கப்பட்ட இயல்புச் சூழலை பாதுகாத்தபடி எமது சிறார்களின் எதிர்கால நலனை மேம்பாடடையச் செய்யமுடியுமென ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று தெல்லிப்பழை துர்க்காபுரம் திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்பள்ளியின வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வுகள் நிலையத் தலைவர் ஆ.கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற போதே நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவிததார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த காலங்களில் எமது சிறார்கள் இயல்பாகக் கல்வியைத் தொடர முடியாத ஓர் துர்பாக்கிய நிலை காணப்பட்டது ஆனால் தற்போது நிலவுகின்ற அமைதிச் சூழலில் எதுவித இடையூறும் இன்றி எமது சிறார்களால் கல்வியை தொடர முடிகிறது.

எனவே இந்த நல்லதொரு வாய்ப்பை பயன்படுத்தியவர்களாக நடைமுறைச் சாத்தியமான வழியில் அரசியல் பணியினை முன்னெடுத்துச் செல்லும சிறந்த அரசியல் தலைமையினை தெரிவு செய்வதனூடாகவே எமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

மக்கள் ஓரணியில் அணிதிரண்டு எமக்கு ஆதரவளிக்கும் பட்சத்தில் எமது அரசியல் உரிமைகளை சாணக்கியமான முறையில் வென்று எடுக்க முடியும்

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வலிவடக்கு பிரதேச அமைப்பாளரும், வலிவடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஜெயபாலசிங்கம் (அன்பு), ஈ.பி.டி.பியின் வட்டுக் கோட்டை பிரதேச இணைப்பாளர் வே.மகேந்திரம் (வள்ளுவன்), முன்பள்ளி இணைப்பாளர் செல்வரஞ்சனா, தெல்லிப்பழை பனை தென்னை வள அ.கூ.சங்க பொதுமுகாமையாளர் சிவஞானம், கூட்டுறவுச் சங்க தலைவர் அருணகிரிநாதர் மற்றும் பொது அமைப்புக்களின பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னாரில் வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார இலகு கடனுதவி

மன்னாரில் ஏகலப் நிறுவனத்தால் 100 இற்கு மேற்பட்ட இடம்பெயர்ந்து மீள் குடியேற்றப்பட்டவர்களுக்கு வாழ்வாதார இலகு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து கொழும்பிலுள்ள ஏகலப் லங்கா ஸ்தாபனம் மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேற்றபட்ட விதவைகள், மாதர் சங்க பிரதிநிதிகள், சிறுகுழுக்களில் அங்கத்துவம் வகிக்கும் தாய்மார்களுக்கு அவர்களின் தேவையைப் பொறுத்து சுமார் 25 ஆயிரம் இலகு கடனை வழங்கியுள்ளது.

முதற்கட்டமாக நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 100 இற்கும் மேற்பட்ட தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். மேலும் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நடுக்குடா , பேசாலை, துள்ளு குடியிருப்பு போன்ற இடங்களில உள்ள மாதர்கள் 100 பேரை தெரிவு செய்து 2 ஆம் கட்டமாக அவர்களுக்கு ஓகஸ்ட் தொடக்கத்திலிருந்து 25 ஆயிரம் இலகு கடன் வழங்கவுள்ளது.

இதில் முருக்கங்காய் சேகரித்து விற்றல் பனங்கிழங்கு , ஒடியல், பனாட்டு விற்றல், பனைமட்டை, கிடுகு சிறுவியாபாரம், ஆடைகள் தைத்து விற்றல், கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்பு வீட்டுத் தோட்டம், சிற்றுண்டி வியாபாரம், சிறிய வலைகள் மூலம் மீன்பிடித்து விற்றல், குடிசைக் கைத்தொழில் போன்றவற்றுக்கு உதவிகள் நாடப்பட்டுள்ளது.

பயனாளிகள் ஒரு வருடத்தில் இக் கடனை செலுத்துவதுடன் தமது வாழ்வாதாரத்தை சிறிது உயர்த்திய பின்னர் அடுத்துவரும் ஆண்டு 40 ஆயிரம் ரூபா வரை தேவைக்கேற்ப கடனுதவி அதிகரித்து வழங்கப்படும் என ஏகலப் பணிப்பாளர் சபையினர் அறிவித்துள்ளனர்.

(40)



கிளிநொச்சி நகர சந்தையின் கனகபுரம் வீதி நுழைவாயில் அருகே கழிவு நீர் தேங்கி நிற்கும் காட்சி. (ர)

# வீதி சேதம்: கவனிப்பார் யார்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தனியார் சிற்றூர்திகள் தரித்து நிற்கும் வீதி மிகவும் சேதமடைந்துள்ளது.

யாழ் நகரத்தில் இருந்து பருத்தித்துறை , அச்சுவேலி, காரைநகர் தெல்லிப்பளை, இளவாலை, குறிகாட்டுவான் உட்பட பல்வேறு இடங்களுக்கும் செல்லும் தனியார் சிற்றூர்திகள் தரித்து நிற்கும் வீதியே சேதமடைந்து குண்றும் குழியுமாக காணப்படுகிறது.

இதனால் பிரயாணிகளும் வாகன ஓட்டுநர்களும் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (நி)

# வவுனியாவில் 65 பொலிஸாருக்கு தமிழ் மொழிப் பயிற்சி பூர்த்தி



வவுனியா, மன்னார், மாங்குளம் பொலிஸ் பிரிவுகளைச சேர்ந்த 62 பொலிஸார் தமிழ் மொழி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துகொண்டு வெளியெறியுள்ளனர்.

கடந்த 5 மாதகாலமாக வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற இப் பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் பணிமனையில் இடம்பெற்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் பணியாற்றும் சிங்கள மொழியிலான பொலிஸ் அதிகாரிகள் தமிழ் மக்களினுடைய பிரச்சினைகளை அறிந்து செயற்படவும் அவர்களது தேவைகளை இலகுவான முறையில் பூர்த்தி செய்து கொடுக்கும் முகமாகவும் இப்பயிற்சிநெறி இடம்பெற்று வருகின்றது.

இறுதி நாள் நிகழ்வின்போது தமிழ் மொழி பயிற்சி நெறியை பூர்த்தி செய்த பொலிஸாரின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வுக்கு வவுனியா, மன்னார் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.விக்கிரமசிங்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சமுத்திர ஜீவா, வவுனியா பொலிஸ் நிலைய கணக்கு ஆய்வாளர் எஸ்.இரவிச்சந்திரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

# பேருந்து பயணக் கட்டணச் சீட்டை பரிசீலிக்கவும்




பேருந்துகளில் பயணிக்கும போது, வழங்கப்படுகின்ற பயண கட்டணத்துக்கான பற்றுசீட்டினை பரீட்ச்சித்து பார்க்குமாறு பொது மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

போக்கவரத்து துறை அமைச்சர் குமார் வெல்கம இதனைத் தெரிவித்துள்ளார். மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், பேருந்துகளில் வழங்கப்படுகின்ற பயணக் கட்டணத்தின் பெறுமதிக்கு அதற்கான பற்று சீட்டுகள் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கட்டணத்துக்கு உரிய பெறுமதியில் பேருந்து சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதா? என்பதை பரீட்சித்துக் கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சிறந்த வரவேற்பு

சீனாவிடம் வழங்கப்படுள்ள இலங்கை உற்பத்திகளின் பட்டியலுக்கு சிறந்த வரவேற்பு கிடைத்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வர்த்தக நாமத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் இணைந்து, புதிய உற்பத்திகளை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.






# சீனாவில் நிலநடுக்கம்

## 47 பேர் பலி; 280 பேர் காயம்



சீனாவின் மேற்கு பகுதியில் நேற்று காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால், 47 பேர் பலியாகியுள்ளனர். 280 பேர் காயமடைந்துள்ளனர். மேற்கு சீனாவின் கான்சு மாகாணத்தில் உள்ள டிங்சி நகர் அருகே நேற்றுக் காலை 7.45 மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் 5.9 ஆக பதிவாகி இருந்தது. இந்த நிலநடுக்கம் 6 மைல் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது. இதில் 47 பேர் பலியாகியுள்ளதாகவும், 280 பேர் காயம் அடைந்துள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் டிங்சி, லோன்கன், டியான்ஷுய் மற்றும் லான்சூ ஆகிய இடங்களில் உணரப்பட்டுள்ளது. மீண்டும் ஒன்றரை மணிநேரம் கழித்து 5.6 அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்ட போது ஜன்னல்கள் குலுங்கின என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

உலகச் செய்திகள்



மத்திய பிரதேசம் போபாலில், சீக்கிய மதம் தொடர்பான "தாஸ்தார் பண்டி" என்ற போட்டியில் ஏராளமான சிறுவர்கள் கலந்து கொண்டனர்.


# நடிகர் வடிவேலுவின் காவலாளி மர்ம முறையில் மரணம்



நடிகர் வடிவேலு வீட்டில் காவலாளியாக வேலை பார்த்தவர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளதால் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். நேபாள நாட்டைச் சேர்ந்தவர் வினோத் பிரசாத் கவுதம்(வயது-22). என்பவர் விருகம்பாக்கத்தில் உள்ள நடிகர் வடிவேலு வீட்டில் கடந்த மூன்று மாதங்களாக காவலாளியாகப் பணிபுரிந்து வந்தார்.

இந்நிலையில் காவல் பணிக்குச் சென்ற வினோத்துக்கு திடீரென்று மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. உடனே அருகில் இருந்தவர்கள் அவரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். ஆனால் அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அவர் மாரடைப்பால் இறந்தாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்று பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். தற்போது வினோத்தின் உடலானது பிரேத பரிசோதனைக்காக ராயபேட்டை அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் வினோத்தின் மரணம் குறித்து அவரது குடும்பத்தாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்யாவில் ஹெலிகொப்டர் விபத்து சுற்றுலாப் பயணிகள் 3 பேர் பலி



ரஷ்யாவின் தூர வடக்கு கோலா வளைகுடா பகுதியில் ஹெலிகொப்டர் விழுந்ததில் 3 பேர் பலியானார்கள். இந்த விபத்தில் இறந்தவர்களில் இருவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். இறந்த இருவரும் சுற்றுலாப்பயணிகள் என்று கண்டறியப்பட்டுள்ளது. 3-வது நபர் குறித்த அடையாளம் இன்னும் தெரியவில்லை.

விபத்து நடக்கும்போது மூன்று பேரும் ஹெலிகொப்டரில் இல்லை. அந்தப் பகுதிக்கு இவர்கள் மூவரும் மீன்பிடிப்பதற்காக ஹெலிகொப்டரில் சென்றிருக்கலாம் எனவும், அவர்களை இறக்கிவிட்டபின் மேலே மும்ப முயற்சித்தபோது அந்த ஹெலிகொப்டர் மோசமான வானிலை காரணமாக சாய்ந்து விழுந்ததில் இவர்கள் மூவரும் நசுங்கி இறக்க நேரிட்டிருக்கலாம் என்றும் ரஷ்யாவின் விமான நிறுவனமான ரோசாவியாட்சியா தெரிவித்துள்ளது.

இறந்துபோன இங்கிலாந்து நாட்டுக்காரர்கள் இருவரும் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாப் பயணிகள் எனவும், வெளி நாட்டினர் கலந்துகொள்ளும் மீன்பிடிக்கும் நிகழ்ச்சிக்காகவே இவர்கள் வந்ததாகவும் ஒரு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# இறுதிச்சடங்கு முடிந்த பெண் தொலைபேசியில் பேசிய அதிசயம்



இந்தியாவின் திருவான்மியூரில் இறந்ததாக கருதப்பட்ட பெண் திடீரென்று தான் உயிருடன் இருப்பதாக தொலைபேசியில் தகவல் தெரிவித்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சென்னை திருநின்றவூரை சேர்ந்தவர் கங்காதேவி (வயது 27) என்பவர் தனது கணவர் சரவணனுடன் வசித்துவந்தார். கடந்த 13ஆம் திகதி கங்காதேவி தனது சகோதரர் ரவிச்சந்திரனிடம் தான சென்ரல் ரயில் நிலையத்தில் இருப்பதாகவும், தன்னை கார்த்தி என்பவர் அடித்து கடத்திச் சென்றுவிட்டதாகவும் தொலைபேசியில் தகவல் தெரிவித்துவிட்டு இணைப்பை துண்டித்து கொண்டார். இதனைத் தொடர்ந்து ரவிச்சந்திரன் திருநின்றவூர் பொலிசில் புகார் செய்துள்ளார். இந்நிலையில் வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கத்தை அடுத்த நங்கமங்கலம் ஏரிக் கரையில் முகம் சிதைக்கப்பட்ட நிலையில் பெண் சடலம் ஒன்று உள்ளது, என்ற செய்தியை படித்த கங்காதேவியின் உறவினர் திலகவதி மற்றும் அவரது கணவர பொலிசில் சென்று அந்த சடலத்தை பார்க்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

பின்பு பொலிஸ் அனுமதியோடு அரசு மருத்துவமனை பிணவறையில் அந்த சடலத்தை பார்த்த கணவர் மற்றும் உறவினர்கள் சில அடையாளங்களின் அடிப்படையில் அது கங்காதேவி தான் என்று உறுதி செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இறுதிச்சடங்குகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் திடீரென்று ஒருநாள் ரவிச்சந்திரன் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டுள்ளார் கங்காதேவி தான் கோவையில் இருப்பதாகவும், என்னை யாரும் கடத்தவில்லை என்றும் சரவணனுடன் வாழப்பிடிக்காமல் கார்த்தியுடன் சேர்ந்து வாழ முடிவெடுத்துள்ளேன் என கூறியுள்ளார். மேலும் எங்களைப் பற்றி பொலிசில் கூற வேண்டும் என தன் அண்ணனிடம் தெரிவித்துள்ளார். குரல் மூலம் தனது சகோதரியை அடையாளம் கண்டு கொண்ட ரவிச்சந்திரன் இது குறித்து திருவான்மியூர் மற்றும் காவேரிப்பாக்கம் பொலிசுக்கு தகவல் கொடுத்துள்ளார். இதனைத் தொடர்ந்து திருவான்மியூர் பொலிசார் கங்காதேவி மற்றும் கார்த்திக்கை அழைத்து வர கோவை விரைந்துள்ளனர். அதே சமயம் கங்காதேவி என்று அடையாளம் காட்டப்பட்ட கொலையான அந்த பெண் யார் என காவேரிப்பாக்கம் பொலிசார் விசாரித்து வருகின்றனர்.



மியான்மரில் உள்ள யங்கூன் நகரில் அமைந்துள்ள அமைதி மையத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற எதிர்கட்சித் தலைவர் ஆங் சான் - சூ - கீ மற்றும் லோயர் ஹவுஸ் சபாநாயகர் துரா - ஷ்வே ஆகியோரை காணலாம்.

# கவர்ச்சிகர விளம்பரங்களுக்குத் தடை



நிதி நிறுவனங்களின், கவர்ச்சிகர விளம்பரங்களுக்குத் தடை விதிக்க, மத்திய அரசு திட்டமிட்டுள்ளது் அத்தகைய நிறுவனங்களைக் கட்டுப்படுத்த, புதிய விதிமுறைகள் விரைவில் வகுக்கப்படும்,"" என, மத்திய கம்பெனி விவகாரங்கள் துறை இணையமைச்சர் (தனிப் பொறுப்பு), சச்சின் பைலட் கூறினார். கவர்ச்சிகரமான அறிவிப்புகளை வெளியிட்டு, பொதுமக்களிடம் பணத்தை திரட்டி, ஏமாற்றும் கும்பல்கள், நிறுவனங்கள் நாடு முழுவதும் செயல்படுகின்றன. சட்டத்தின் ஓட்டைகள் மற்றும் சட்டத்தின் பலவீனமான அம்சங்களை பயன்படுத்தி, நிதி திரட்டி, பொதுமக்களின் பணத்தை ஏமாற்றுவோர், அதிகரித்த வண்ணமாக உள்ளனர். மேற்கு வங்கத்தில், "சாரதா சிட்பண்ட்" என்ற தனியார் நிதி நிறுவனம், பல ஆயிரம் முதலீட்டாளர்களின், பல ஆயிரம் கோடி ரூபாயை,



"ஸ்வாகா" செய்து விட்டது. இது போல், நாட்டின் பலபகுதிகளிலும் மோசடி நிதி நிறுவனங்கள் பெருகிவிட்டன. அத்தகைய நிதி நிறுவனங்கள், பத்திரிகைகள் மற்றும், "டிவி"களில், கவர்ச்சிகரமான வகையில் விளம்பரம் செய்கின்றன. அவற்றை உண்மை என நம்பும் பொதுமக்கள், தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை, அந்த மோசடி நிறுவனங்களில் முதலீடு செய்து ஏமாறுவதை தடுக்க, வலுவான சட்டங்கள் அவசியம் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த, இளம் மத்திய அமைச்சர்களில் ஒருவரான, சச்சின் பைலட், இதுகுறித்து கூறியதாவது: சிகரெட், மதுபானங்கள் மற்றும் புகையிலை தொடர்பான விளம்பரங்கள், செய்தித்தாள், "டிவி" மற்றும் ரேடியோவில் வருவதில்லை. அதேபோல், இன்டர்நெட்டிலும் சில பொருட்களுக்கும், சில வகை சேவைகளுக்கும் கட்டுப்பாடு உள்ளது என்றார்.



# பிரதேச செயலர்களின் பல அதிகாரங்கள் மீள்வரையறை செய்யப்படவுள்ளன

## அதிகார துஷ்பிரயோகத்தால் வந்தவினை

(கொழும்பு)

காணிகள் தொடர்பான அதிகாரங்களை பிரதேச செயலர்கள் பலர் துஷ்பிரயோகம் செய்தமை கண்டறியப்பட்டிருப்பதனால் மேற்படி அதிகாரங்கள் உட்பட மேலும் சில விடயங்களில் பிரதேச செயலர்களுக்கு இதுவரை இருந்து வந்த அதிகார எல்லைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கிறது.

அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, தங்களது அதிகாரங்களையும் விஞ்சி செயற்படுவதாக பிரதேச செயலர்கள் பற்றி அடிக்கடி அறிக்கைகள் வந்த வண்ணமிருப்பதனால் இந்த முடிவினை எடுக்க வேண்டியேற்பட்டுள்ளதாக அரச நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.பீ. அபேக்கோன் தெரிவித்துள்ளார்.

அதற்கேற்ப 1992 ஆம் ஆண்டில் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் சம்பந்தப்பட்ட அதிகாரங்களை இல்லாமற் செய்து, அவற்றை மாவட்டச் செயலர்களுக்கு வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காணிகள் சம்பந்தப்பட்ட கடமைகளைச் செய்யும்போது, பிரதேச செயலர்கள் ஒருதலைப் பட்சமாகச் செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ள அமைச்சின் செயலாளர், பிரதேச செயலர்களுக்கு எதிராக வருகின்ற முறையீடுகளில் பெரும்பாலானவை காணி சம்பந்தப்பட்டவையாகவே இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மனிதாபிமான உதவிகள் அரசியல் மயமாகக்கூடாது

### அரசாங்கம் தெரிவிப்பு

மனிதாபிமான உதவிகள் அரசியல் மயப்படுத்தப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது. மனிதாபிமான உதவிகளை வழங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் செயற்படக்கூடாது என ஐக்கிய நாடுகளின் ஜெனிவாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவினாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

அவசர மனிதாபிமான உதவிகளை வழங்கும் போது ஓர் சர்வதேச பொறிமுறைமையொன்று உருவாக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். நாடுகளின் பௌதீக ஒருமைப்பாடு, இறைமை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டே மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நீண்ட காலமாக இடம்பெற்ற யுத்தம் மட்டுமன்றி 2004 ஆம் ஆண்டு முதல் இலங்கை பாரிய இயற்கை சீற்றங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.சி.ஆர்.சி. பணியாளர் படுகொலை ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பப்படும்

### பிரிட்டன் எம்.பி. தெரிவிப்பு



பிரித்தானிய தன்னார்வ தொண்டர் குர்ஹாம் சாக்கீ படுகொலை தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்ப உள்ளதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிமோன் டான்சூக் தெரிவித்துள்ளார்.


2011 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினமன்று, குர்ஹாம் சாக்கீயும் அவரது ரஷ்ய காதலி விக்டோரியாவும் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணியாளரான குர்ஹாம் சாக்கீ கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் உரிய முறையில் நடைபெறவில்லை என ஏற்கனவே பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிமோன் டான்சூக் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வார இறுதியில் சிமோன் டான்சூக் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

தனது விஜயத்தின் போது கொலை குறித்த விசாரணைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்ப உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடொன்று இவ்வாறு நடந்து கொள்வது சரியா என தாம் கேள்வி எழுப்ப உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை மூடிமறைக்க சிலர் முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஆளும் கட்சி உறுப்பினர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய காரணத்தினால் இவ்வாறு முயற்சிக்கப்படுவதாக சந்தேகம் எழுந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சம்பவம் தொடர்பான இரண்டு பிரதான சாட்சியாளர்களுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# கொலன்னாவையிலிருந்து போதைவஸ்தை ஒழிப்பதே இலக்கு



(கொழும்பு)

யுத்தத்தில் இறந்தவர்களைக் காட்டிலும் கூடுதலானோர் இன்று போதைவஸ்துப் பாவனையினாலேயே இறக்கின்றனர். எனவே போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையானவர்களை மீட்பதே பொதுபல சேனாவின் அடுத்த இலக்கு என அதன் செயலாளர் நாயகம் கலகொட அத்தே ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

குருணாகலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றின் போதே தேரர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் போதைவஸ்து ஸ்தலமாக கொலன்னாவ மாறியுள்ளதாகவும், அடுத்ததாக கொலன்னாவையில் நடைபெறவுள்ள பொதுபல சேனாவின் மாநாட்டின் போது அங்கிருந்து போதைவஸ்தை அகற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், தேரர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

### உணர்வு...

இணைந்து பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட வேண்டுமென இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்துவதாகவும், அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் தொடர்ந்தும் ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் பிரசாத் காரியவசம் மேலும் கூறினார்.

### சமந்தா...

தலைவர் றொபேட் மெனென டெஸ் கடந்த புதன்கிழமை விளக்கமளித்துள்ளார்.

இலத்தீன் அமெரிக்காவின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஆபிரிக்காவில் எச்.ஐ.வி, எய்ட்ஸ், போலியோ, மலேரியா போன்ற நோய்களுக்கு எதிரான போராட்டம், சைப்பிரசின் 66 ஆண்டுகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக் கள், பாகிஸ்தானில் பெண்களின் உரிமைகள், பங்களாதேஷில் தொழிலாளர்களின் உரிமை, இலங்கையில் மனிதஉரிமைகள் போன்றன குறித்து சமந்தா பவர் முக்கிய கவனம் செலுத்தவுள்ளார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

42 வயதான சமந்தா பவர், புலிட்சர் விருதுபெற்ற எழுத்தாளர் என்பதுடன், நன்கு பிரபலமான மனித உரிமைகள் சட்டவாளருமாவார். இவருக்கு அமெரிக்க செனட் உறுப்பினர்களின் பேராதரவு உள்ள நிலையில், இவரது நியமனம் இன்று நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் வாக்கெடுப்பின் போது உறுதிப்படுத்தப்படும் என்று கருதப்படுகிறது.

### டெசோ...

இயக்கத்தின் சார்பில் ஆகஸ்ட் 8 ஆம் திகதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது. அன்றையதினம், டெசோ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர் மானங்களை வலியுறுத்தி தி.மு.க. மக்களை, மாநிலங்களவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற வளாகத்தின் முன்பு நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வார்கள். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு டி.ஆர்.பாலு தலைமை வகிப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழகத்தில் சரிந்துவரும் தனது செல்வாக்கை நிலைநிறுத்தும் வகையில் இலங்கை தமிழர் பிரச்சினையை கையில் எடுத்துள்ள தி.மு.க. டெசோ எனும் அமைப்பின் மூலம் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி தனது செல்வாக்கை நிலைநிறுத்த முயல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# மத்திய வங்கியின் அறிவுத்திறன் போட்டி உயர்தர மாணவர்களுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல் திணைக்களம் நாடளாவிய ரீதியில் பாடசாலையில் உயர்தரத்தில் பொருளியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களிடையே Econ Icon என்ற அறிவுத்திறன் போட்டியை 2014 ஆம் ஆண்டு நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழியில் நடாத்தப்படும் இப்போட்டிப் பரீட்சைக்கு பாடசாலை ஒன்றிலிருந்து க.பொ.த. உயர்தரத்தில் பொருளியலை ஒரு பாடமாகக்கற்கும் 3 மாணவர்கள் மட்டும் பங்கு பற்றமுடியும் என்பதுடன் போட்டிப் பரீட்சையிலிருந்து தெரிவுசெய்யப்படும் 8 தமிழ்மொழி மூல பாடசாலைகள் தொலைக்காட்சியினூடான போட்டியில் பங்குகொள்ளவுள்ளது.

இப்போட்டிப் பரீட்சையில் தோற்ற விரும்பும் 3 தமிழ்மொழி மூல மாணவர்கள் கொண்ட குழுவை பாடசாலையிலிருந்து தெரிந்தெடுத்து அதிபரின் உறுதிப்படுத்திய ஒப்பத்துடன் இலச்சினையிட்டு பணிப்பாளர், தொடர்வூட்டல் திணைக்களம், இலங்கை மத்தியவங்கி, இல 30 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01 என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 011 2477384, 0112477257, 0112477378, 0112398745 எனும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் மேற்படி போட்டிப் பரீட்சையில் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளுதல் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் நாயகத்தின் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ள நிலையில் அனுமதி கிடைத்தவுடன் ஒவ்வொரு மாகாணப் பணிப்பாளருக்கும் பிரதிகள் அனுப்பிவைக்கப்படும் என மதிய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2010 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் தொடர்வூட்டல் திணைக்களம் நாடளாவிய ரீதியில் பாடசாலையில் உயர்தரத்தில் பொருளியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களிடையே Econ Icon என்ற அறிவுத்திறன் போட்டியை வெற்றிகரமாக நடத்தியிருந்தது. இப்போட்டியில், சிங்களமொழி மூலத்தில் கொழும்பு பாலிகா மகாவித்தியாலயமும தமிழ்மொழி மூலத்தில் மாகனல்ல பதுறியா மத்திய மகாவித்தியாலயமும் வெற்றி பெற்றிருந்தன என திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### ஆழ்கடல்...

அரைவாசி படகில் ஏற்றிய நிலையில் வலையும் படகும் மீட்கப்பட்டுள்ளது. இவர் வலை இழுத்தபோது கடலில் தவறி விழுந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (125)

### யாழ். கொலை...

சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தேடப்பட்டுவருவதாகவும் அவர்கள் இருவரும் மிக விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.


### காணாமற்...

காணாமற்போன 400 சம்பவங்கள் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு காணாமற்போயுள்ளவர்கள் குறித்த் விசாரணைகளை, காணாமற்போனவர்கள் தொடர்பான ஐ.நா பணிக்குழு ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா.வின் காணாமற்போனோர் தொடர்பான பணிக்குழுவின் தலைவர், ஒலிவர் டி புரோவில்லி, காணாமற்போதல் ஒரு தற்செயலான விபத்து அல்ல, அது முன்திட்டமிடப்பட்ட குற்றம் என்று தெரிவித்துள்ளார்.

# புலிகளுக்கு செல்லும் நிதியை ஐரோ. ஒன்றியம் தடுக்கவேண்டும்

## அமைச்சர் பீரிஸ் வலியுறுத்து



(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இயங்கிவரும் முன்னணி அமைப்புக்களால் விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான தனது பங்கு குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென இலங்கை கோரியுள்ளதாக பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள ஆறு பேரடங்கிய ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தூதுக்குழுவுடன் கடந்த சனியன்று நடைபெற்ற பேச்சுவார்த்தை களின் போதே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மேற்கண்டவாறு வலியுறுத்தியதாகத் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இயங்கிவரும் முக்கியத்துவம் வாய்ந்த புலம்பெயர் தமிழர் அமைப்பொன்றின் ஆதரவு மூலம் விடுதலைப்புலிகள் இயக்கம் தற்போது முனைப்பு பெற்று வருவதாக இந்த வருடம் வெளியாகிருந்த யூரோ பொலிஸ் அமைபின் பயங்கரவாத நிலைவரம் மற்றும் போக்கு குறித்த அறிக்கையை மேற்கோள் காட்டியே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் நேரில் கண்டறிந் துள்ளமை குறித்து தான் மகிழ்ச்சியடைவதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# முல்லை மாவட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் துரிதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், முன்னாள் போராளிகள் மற்றும் விதவைகளுக்கான இலகுகடன் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டம் துரிதப்படுத்தப் பட்டுள்ளது.

இதனடிப்டையில் இந்த வருடத்திற்குள் புனர்வாழ்வு மற்றும் இலகுகடன் திட்டங்களுக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 525 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் ஐயாயிரம் பேருக்கு இந்த வருட இறுதிக்குள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அத்துடன் ஆயிரம் விதவைகளுக்கும் சுயதொழிலுக்கான இலகு கடன்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 1750 பேருக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

# உகந்தையுடன் திரும்பிய கதிர்காம யாத்திரிகர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து 60 தினங்கள் பயணித்து உகந்தைமலை முருகன் ஆலயத்தை அடைந்த கதிர்காம பாதயாத்திரீகர்கள் பலர் உகந்தையோடு பயணத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பியுள்ளனர்.

வேல்சாமி மகேஸ்வரன் தலைமையிலான கதிர்காம பாதயாத்திரைக் குழுவிலிருந்த பக்தர்கள் சிலரே இவ்வாறு உகந்தை முருகன் ஆலயத்துடன் தமது பயணத்தை நிறைவுசெய்துகொண்டுள்ளனர்.

கதிர்காம கந்தன் ஆலய உற்சவமானது ஒரு மாதம் பிற்போடப் பட்டமையே இதற்கு காரணமென பாதயாத்திரீகர்கள் தெரிவித்துள்ளனர்.

6 நாட்கள் காட்டுப் பயணத்திற்காக 16 தினங்கள் உகந்தையில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# தடைசெய்யப்பட்ட முறைகளை மீனவர் பயன்படுத்தினால் கைது

## கடற்றொழில் திணைக்களம் அறிவிப்பு

தடைசெய்யப்பட்ட மரபு ரீதியான முறைமைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட மரபு ரீதியான மீன்பிடி முறைமைகளை கையாள வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமல் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், சிலாபம் உள்ளிட்ட பகுதிகளில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமைகள் பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

லைட்கோஸ்ட் மற்றும் டைனமைட் ஆகிய முறைகளைப் பயனபடுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதால் மீன் வளத்திற்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான சுற்றிவளைப்புக்களின் போது கைப்பற்றப்படும் மீன்பிடிப் படகுகள் மற்றும் உபகரணங்கள் அரசுடமையாக்கப்படுவதுடன் மீனவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மன்னார் பகுதியில் தடை செய்யப்பட்ட மரபு முறையி லான மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைதான மீனவர்களுக்கு எதிராக ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

# பொது இடத்தில் மது பாவனை; வடமராட்சியில் தெற்கு வாசிகள் கைது

(கரணவாய்)

தென்பகுதியில் இருந்து விடுமுறையை களிப்பதற்காகவடக்கே வந்தவர்கள் பொலிஸாரின் வலையில் சிக்கிய சம்பவம் ஒன்று வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மினிபஸ் ஒன்றுக்கு ஒரு குழுவினர் தென்பகுதியில் இருந்து வடமராட்சிக்குச் சென்றனர். அங்கு பல பகுதிகளையும் பார்வையிட்ட பின்னர் இரவு 8.00 மணியளவில் அல்வாய் முத்துமாரி அம்மா ஆலய முன்றலில் இறங்கி ஓய்வெடுத்தனர். அங்கே வைத்து மதுபானம் அருந்தியும் மாமிசஉணவு உண்டும் மகிழ்ச்சியில் மூழ்கினர். இதனை அவதானித்த பொது மக்கள் சிலர் பொலிஸ்நிலையத்துக்கு தகவல் கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து அங்கு விரைந்துவந்த பொலிசார் அனைவரையும் கைது செய்து சென்றனர். பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப் பட்டனர். (18)

# பெற்ற மகனை கொல்ல முயற்சி; இலங்கைப் பெண் பிரான்சில் கைது

பிரான்சில் இலங்கையைச் சேர்ந்த இளம் பெண்ணொருவர் தனது மகனைக் கொன்று, தானும் தற்கொலை செய்ய முயன்றதை அடுத்து, அவரும் இலங்கையைச் சேர்ந்த அவரது கணவர் மற்றும் முன்னாள் காதலன் ஆகிய மூவரும் கைது செய்யப் பட்டுள்ளதாக பிரான்ஸ் ஊடகமொன்று தெரிவித்துள்ளது. கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையரொருவருடன் தான் வைத்திருந்த தகாத உறவொன்றின் மூலம் பிறந்த தனது மகனையே குறித்த 28 வயதான பெண் கொல்வதற்கு முயன்றிருந்தாரெனக் கூறப்படுகின்றது. தனது மகனை எவருமே கவனிக்கமாட்டார்களென அஞ்சியே, குறித்த பெண் அவனையும் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்ய முயன்றுள்ளார். அவரது தற்கொலை முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து அவர் தலைநகர் பாரிஸில் உள்ள புனிதலூயிஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டார். ஆரம்ப விசாரணையின் போது அவர் கணவன் மற்றும் காதலன் ஆகியோரால் மன அழுத்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருந்ததாகவும், கணவனின் தாக்குதலுக்கு அவர் உள்ளாகியிருந்ததாகவும் தெரிய வந்துள்ளதாக அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஏ.எவ்.பி.பிரான்சிய செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிகாயங்கள் மற்றும் உள்ளக ஊமைக் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுவன் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிய நிலையில் உடல்நிலை தேறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மஹோற்சவம்

வேலணை வங்களாவாடி அருள்மிகு ஸ்ரீ வள்ளிதேவசேனாசமேத முருகப்பெருமானின் விஜய வருஷ மஹோற்சவமானது எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 நாட்களுக்கு உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

3ஆம் திகதி ஆலயத்தின் 7ஆம் திருவிழாவான்று மதியம் ஒரு மணியளவில் முருகப் பெருமன் இலந்தைக்காடு சித்திவிநாயகர் ஆலயத்திற்கு வேட்டைத்திருவிழாவிற்கு சென்று வேட்டையாடி மீண்டும் ஆலயம் சென்றடையவுள்ளார். 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பெரிய சப்பறத்திருவிழாவும், மறுதினமான 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணியளவில் தேர்திருவிழாவும், 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஆடி அமாவசை தினத்தன்று சுவாமி வேலணை வெள்ளைக்கடற்கரைக்குச்சென்று தீர்தமாடி மீண்டும் ஆலயம் சென்றடைவார். 7ஆம் திகதி புதன்கிழமை ஆலயத்தில் 108 சங்குகளால் சுவாமிக்கு சங்காபிஷேகமும், அதேதினம் கொடி இறக்கநிகழ்வும் இடம் பெறவுள்ளது. 8ஆம் திகதி வியாழக்கிழமை வைரர் பொங்கலுடன் உற்சவங்கள் அனைத்தும் நிறைவடையும். (05)

# வரலாற்றில் இடம்பிடித்த அம்பாந்தோட்டை

பிழையான காரணங்களுக்காக அம்பாந்தோட்டை, வரலாற்றில் இடம்பிடித்துள்ளதாக ஜே.வி.பி கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். கப்பல்கள் இல்லாத துறைமுகம், கிரிக்கட் விளையாடாத சர்வதேச மைதானம், விமானங்கள் தரையிறங்காத விமான நிலையங்கள் என பல்வேறு வரலாற்று சாதனைகளை ஹம்பாந்தோட்டை படைத்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுமக்கள் பணத்தைக் கொண்டு இந்த விடயங்கள் செய்யப்படாமிலிருந்தால் அதனைப் பற்றி கருத்திற்கொள்ள வேண்டியதில்லை என்ற போதிலும் இவை அனைத்துமே மக்களின் பணத்தினால் உருவாக்கப்பட்டவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வரிப் பணத்தைக் கொண்டு இவ்வாறு செய்யப்படும் விரயங்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மெய்யான எதிர்க்கட்சியாக ஜே.வி.பி மட்டுமே திகழ்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் மக்கள் இரண்டு கட்சிகளாக நோக்குகின்றனர் எனவும், உண்மையில் அவை இரண்டுமே ஒரு கட்சியாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

# இலங்கை இளைஞன் கொலை; சந்தேக நபர்கள் குற்றவாளிகள்

## நியூஸிலாந்து ஜூரிசபை அறிவிப்பு

நியூஸிலாந்தில் இலங்கை இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபர்கள் இருவரும் குற்றவாளிகள் என இனங்காணப் பட்டுள்ளனர்.

இவ் இளைஞனது மரணம் தொடர்பில் கிறிஸ்ட் உயர் நீதிமன்றம் ஏழு பெண்கள் மற்றும் ஐந்து ஆண்களை உள்ளடக்கிய ஜூரி சபையை அறிவித்திருந்தது.

இந்த ஜூரி சபையே கைது செய்யப்பட்டிருந்த துவன் பிரவேஸ் சவால் மற்றும் விராஜ் அல்ககோன் ஆகிய இருவரையும் குற்றவாளிகள் என அறிவித்துள்ளது.

நியூஸிலாந்து ஒக்ஸ்போர்ட் பகுதி வீட்டில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் இலங்கையைச் சேர்ந்த 28 வயதான சமீர சந்திரசேன கடந்த வருடம் பெப்ரவரி மாதம் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் இலங்கையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.